# மானுடம்

## சமூகவியல் ஏடு

சமூகவியல் சமூகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**Sociological S**
**University of J**
**1998**

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

15 JUN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# மானுடம்

## Maanudam - சமூகவியல் ஏடு 2

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம் 130744

ஆலோசக ஆசிரியர்
கலாநிதி. என். சண்முகலிங்கன்
ஜி. எம் செபஸ்தியாம்பிள்ளை

ஆசிரியர்
ஜீ. பகீரதி

துணைத் தொடர்பாளர்
ய. அனுஷா ம. துஷ்யந்தன்

Sociological Society
University of Jaffna
1998/99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் வழியின்

திசை தெரிந்தோம்

சிந்தை தெளிந்த

மனமுடையோம்

அறிவும் உணர்வும்

இசைய

எழுந்தோம்

**சமூகவியல் சமூகம் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருள் காண்பது அறிவு மெய்ப்பொருள்

காண்பது அறிவு மெய்ப்பொருள் காண்பது அறிவு மெய்ப்பொருள் காண்பது அறிவு

ய்ப்பொருள் காண்பது அறிவு மெய்ப்பொருள் காண்பது அறிவு மெய்ப்பொருள் காண்பது

உடனுதவும் பகுதி

எங்கள்

கலைக் கோயிலின்

வெள்ளி விழாக்கால

அர்ப்பணமாய்

இந்த

மானுடம் ஏடு

மலர்கின்றது

அறிவு மெய்ப்பொருள் காண்பது அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுறவும் பகுதி.

# தனித்துவம் துலங்கும் வளர்ச்சி

MAJA

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் மானுடம் - 2வது ஏடு வெளிவருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

மானுடம் – ஏடு 1 மிகச் சிறந்த முறையில் வெளியாகி, சமூகவிஞ்ஞானிகள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்ததை நாமறிவோம்.

சமூகவியல் சிறப்புக் கற்கைநெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துரிதமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. மாணவர் கல்வி ஈடுபாடும், ஆய்வுகளும் வளர்ந்து வருகின்றன. இச் சூழ்நிலையில் இரண்டாவது சமூகவியல் ஏடும் வெளிவருவது பாராட்டத்தக்கது.

மானுடநேயம், குழுவாய் செயற்படும் ஒருங்கிணைவு, மாணவ – ஆசிரிய புரிந்துணர்வு, திறந்த மனதுடன் பிரச்சினைகளை காரண – காரியரீதியாக அணுகும் தன்மை என தனித்துவம் துலங்க எங்கள் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் சமூகத்தின் செயற்பாடுகள் மேம்படக் காண்கின்றோம்.

மானுடம் ஏடு 2 வெளிவரத் துணையான மாணவர்களையும், ஆசிரியவழிகாட்டிகளையும் மனதார வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.

## சிந்தனை ஒன்றுடையார்

சமூகவியல் சமூகம் தனக்கெனச் சில தனித்துவங்க ளைக் கொண்டதாக இப் பல்கலைக்கழகத்திலே விளங்கு கின்றது. சிந்தனை ஒன்றுடைய தன்மையும், சமூகத்தை ஆய்வு நோக் கூடாகப் பார்ப்பதால் ஏற்படும் தன்னடக்க மும், நெறிப்படுத்தப்பட்ட போக்கும் அதனிடம் காணப் படுகின்றன. அச்சமூகத்தை வழிநடத்தும் மூத்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

சமூகவியல் சமூகத்தின் போக்குகளும், நோக்குகளும் ஓரளவு **மானுடம்** ஊடாக வெளிவருகின்றன. இவ்வாண்டு மீண்டும் மானுடம் வெளிவரவுள்ளது. இவ்விதழுக்கு இச்சிறிய வாழ்த்துரையை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலைப்பீடாதிபதி
யாழ் பல்கலைக்கழகம்,

## மானுடம் ஒரு புதிய தரிசனம்

தமிழன்னையின் கரங்களில் தவழும் எண்ணிறைந்த இதழ்களுள் மானுடம் புதிய அறிவினைத் தருவது. இரண்டா வது இதழாக இனிய சுகந்தத்தைச் சுமந்துவரும் இவ்வேடு, இளைத்துப் போயிருக்கும் எமது தமிழ்ச் சமூகத்துக்கு வலுவூட்டும். இருண்டு கொண்டிருக்கும் சிந்தனைகளுக்கு ஒளிக்கிற்றுகளைப் பாய்ச்சும். எமது சமூகவியல் சமூகத்தின் இதயஞ்சார்ந்த இம்முயற்சியால் மேம்பட்ட ஒரு மானுட சமூகத்தின் தரிசனம் எங்களை எட்டியுள்ளது.

தி. கிருஷ்ணகுமார்
தலைவர், சமூகவியல் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழிய மானுடம்!

எங்கள் சமூகவியல் தோட்டத்துக் கனிகளுடன், மானுடத்தின் 2 வது ஏடும் கைவசமாகிறது.

எல்லையற்ற மகிழ்ச்சியில் என் மனது.

இன்றைய காலத்து இயங்கு விசைகளைப் புரிந்திடவும், எதிர்கால மேம்பாட்டுக்கான திசையைத் தெளிந்திடவும் சமூகவியலின் முழுதளாவிய அறிவு எங்களுக்குக் கைகொடுக்கின்றது.

எங்கள் பல்கலைக்கழகம் வெள்ளிவிழா காணும் இவ்வேளை காணும் மெய்அறிவு செயற்படும் அறிவாக சமூகவியல் சமூகம் உறுதி கொள்கின்றது.

மானுட முழுமையுடன் நாளையின் சுதந்திர மனிதர்களாய் நாம் நிமிர்வோம்.

வாழிய மானுடம்!

கலாநிதி என். சண்முகலிங்கன்
பெருந்தலைவர், சமூகவியல் சமூகம்
தலைவர், அரசறிவியல் - சமூகவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமையும் இயக்கச் சிறப்பும்

சமூகவியல் சமூகம் குறுகிய கால இடைவெளியில் பல்கலைக்கழகக் கட்டமைப்புக்குள் வலிமையும் இயக்க சிறப்புங்கொண்ட ஓர் அமைப்பாக வளர்ச்சி அடைந்துள்ளமை கண்டு மிக மகிழ்ச்சியடைகிறேன்.

சமூகவியற் சமூகத்தின் உறுப்பினர்கள் தமது அயராத சமூக தொடர்புகளால் எமது பிரதேசத்திற்கும் நாட்டிற்கும் தொண்டாற்றி வருவது கண்டு நாம் மனநிறைவு அடைகின்றோம்.

இலங்கையின் பிற பல்கலைக்கழங்களில் எமது உறுப்பினர்கள் விரிவுரையாளர்களாக இணைந்து சிறந்த ஆற்றுகையாளர்களாகவும், ஆய்வாளர்களாகவும், செயற்படுவதை அறியும்போது இரட்டிப்பான மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது சமூகம் ஆண்டுதோறும் வெளியிடும் ''மானுடம்'' ஆய்வுச் சஞ்சிகை பல புதிய அறிவுக் கருவூலங்களை எம்மத்தியில் வழங்கிச் சிறப்பித்து வருகின்றது. மானிடத்தின் பணிகள் மேலும் வளர எனது நல் வாழ்த்துக்கள்.

ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை
பெரும் பொருளாளர், சமூகவியல் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடம் - எங்கள் கூட்டுழைப்பின் சாரம்

மானுடம் - சமூகவியல் ஏட்டின் முதலாவது இதழுக்குக்கிடைத்த வரவேற்பில் எங்கள் நெஞ்சம் பெரிதுவக்கும். மானுடம் எங்கள் கூட்டுழைப்பின் சாரம்.

எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசான்களின் வழிகாட்டலில் எமது ஆற்றல் வளர்கின்றது, புதிய எழிலுடன் இன்று மானுடம் 2வது ஏடு உங்கள் கரங்களில்.

எங்களை என்றும் வாழ்த்தி ஊக்குவிக்கும் எங்கள் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, துறைத்தலைவர், பெரும் பொருளாளர், மற்றும் பதிப்பக பணியில் உறுதுணையான சமூகவியல் சமூக முன்னாள் தலைவரும் இந்நாள் விரிவுரையாளருமான திரு. ஏ. ஈ. ரிச்சேட், அட்டையை அழகுற வடிவமைத்துத்தந்த நாகலிங்கம் நூலாலயம். பதிப்பழகு காத்த யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினர், மானுடம் - நிதி வளத்துக்கான கலை அனுபவங்களாக மானஸி - ஆக்கஇசையைத் தந்த எங்கள் பெருந்தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன். கனல் - நடன நாடகம் தந்த நுண்கலைத் துறைசார்ந்த செல்வி என். நவதர்சனி, போனதிசைபகராய் நாடகம். தந்த அரங்கியல்துறை செல்வன் கணேசராசா, மற்றும் விளம்பரங்களின் வழி துணையான உள்ளங்கள் அனைவருக்கும் என்றும் எங்கள் அன்பான நன்றிகள்.

ஜீ. பகீரதி
இதழாசிரியர்

ம. அனுஷா ம. துஷ்யந்தன்
துணைத்தொடர்பாளர்

# Sociological Society 1998/99

## UNIVERSITY OF JAFFNA

### OFFICE BEARERS

**PATRON :**
Dr. N. Shanmugalingan
*M.A. Ph.D.*

**SENIOR TREASURER :**
Mr. G. M. Sebastiampillai
*M.A., M. Phil., Dip. in Ed.*

**PRESIDENT :**
T. Krishnakumar

**VICE PRESIDENT :**
A. Doreen

**JOINT SECRETARIES :**
M. Pradeepan
K. Vasuki

**TREASURER :**
K. Sivachelvy

**COMMUNICATOR :**
J. Baheerathy

**ASST. COMMUNICATORS**
W. Anusha Jeralin
M. Thushyanthan

### COMMITTEE MEMBERS :

S. Sobanya
A. Renuka
S. Kumuthini
K. Thanaluxmy
T. Muhunthan
Y. Jeyakanthan
R. Rajeshkanna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

### கட்டுரைகள்


- சாதாரண மனித விசாரணையும் விஞ்ஞான விசாரணையும் — ரமணி ஸ்கந்தவரதன் - 01
- மனிதனும் அவன் மனமும் — சுகன்யா சிவானந்தன் - 06
- தகாப்புணர்ச்சி விலக்கு — ம. பிரதீபன் - 13
- அனோமி / நியமமறு நிலை — கு. முகுந்தன் - 17


### கோட்பாட்டாளரும் கோட்பாடுகளும்


- அகஸ்ற் கொம்ற் — பிரித்தானிய கலைக்களஞ்சியம் - 18
- ஹேபேர்ட் ஸ்பென்சர் — ம. சிவாகரன் - 22
- முரண்பாட்டுக் கோட்பாடு — பகீரதி ஜீவேஸ்வரா - 28
- பின் - நவீனத்துவம் — அ. எ. றிச்சேட் - 34


### முறையியல்


- சமூக அளவை முறை — தி. வினிபேபி - 42


### சமயத்தின் சமூகவியல்


- சமூக பண்பாட்டு நோக்கில் சமயம் — எஸ். கிருபானந்தன் - 45
- விடுதலை இறையியல் — அ. டொறின் - 52


### தொடர்பாடலின் சமூகவியல்


- யாழ்ப்பாண சமூதாயத்தில் வீடியோ கலாசாரம் — தி. கிருஷ்ணகுமார் - 55


### நகர சமூகவியல்


- நகரமயமாக்கம் - நகரத்துவம் — அ. றொபின்சன் - 62


### கல்வியின் சமூகவியல்


- கல்வியும், எமது சமூகமும் - ஒரு சமூகவியல் நோக்கு — ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை - 69


### உளவியல்


- நடத்தையும், உளமுகிழ்ப்பும் — கலாநிதி. சபா. ஜெயராசா - 77
- மனச் சிதைவு நோய் — பா. விக்னராணி - 84


### சமூகப் பிரச்சினைகள்


- சிறுவர் துஷ்பிரயோகம் — சி. ஸ்ரீபன் - 91
- போரும், ஊனமும் — சு. ஜீவசுதன் - 95
- அறிவின் அரசியல் — கலாநிதி என். சண்முகலிங்கம் - 100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONTENTS

**CONCEPTS**

- Human Inquiry and Scientific Inquiry - S. Ramani - 01
- Man and his mind - S. Suganya - 06
- Incest Tabu - M. Pradeepan - 13
- Anomie / Normlessness - K. Muhunthan - 17

**THEORIESTS AND THEORIES : Enoyclopedia of Biritanica**

- Auguste Comte (Transalation) - - 18
- Herbert Spencer - M. Sivaharan - 22
- Conflict Theory - J. Baheerathy - 28
- Post Modernism - A. E. Richard - 34

**METHODOLOGY**

- Socio – Metric Method - T. Vinebaby - 42

**SOCIOLOGY OF RELIGION**

- Religion – A Socio Cultural Perspective - S. Kiruparnanthan - 45
- Liberation Theology - A. Doreen - 52

**SOCIOLOGY OF COMMUNICATION**

- Video Culture in Jaffna Society -T. Krshnakumar - 55

**URBAN SOCIOLOGY**

- Urbanisation and Urbanism - A. Robinson - 62

**SOCIOLOGY OF EDUCATION**

- Education and our Society - G. M. Sebastiampillai - 69

**PSYCHOLOGY**

- Behaviour and Temperment - Dr. S. Jeyarasa - 77
- Schizophrenia - B. Vignarani - 84

**SOCIAL PROBLEMS**

- Child abuse - S. Stephan - 91
- War and disability - S. Jeevasuthan - 95
- Politics of knowledge - Dr. Shanmugalingan - 100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sociological Society- Executive Committee 1997-98



**Seated (L →R) :**

A. Doreen (*Vice-President*), K. Vasuki (*Joint Secretary*), Dr. N. Shanmugalingan (*Patron*), Prof. P. Balasundarampillai (*Vice-Chancellor*) T. Krishnakumar (*President*), Prof. A. Sanmugadas *Dean, Arts*) G. M. Sebastiampillai (*Senior-Treasurer*), M. Pradeepan (*Joint Secretary*), K. Sivachelvy (*Junior-Treasurer*)

**Standing (L →R) :**

K. Thanallaxmy, A. Renuka, S. Suhanya, S. Kumuthini, J. Baheerathy (*Communicator*), W. Anusha (*Asst. Communicator*), M. Thushyanthan (*Asst. Communicator*), T. Muhunthan, Y. Jeyakanthan, R. Rajesh Kanna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கருக்கள்

# சாதாரண மனிதவிசாரணையும், விஞ்ஞான விசாரணையும்.

## Human Inquiry and Scientific Inquiry

ரமணி ஸ்கந்தவரதன்

விசாரணை என்பது ஒரு இயல்பான மனித தொழிற்பாடு. ஏனெனில் மனிதன் தன்னைச் சுற்றி இருக்கின்ற உலகத்தைப் பற்றி பொதுவாக விளங்கிக்கொள்ள எப்பொழுதும் விரும்புகின்றான். இந்த விளக்கத்தைப் பெறுவதற்காக அவன் தன்னைச் சுற்றி அவதானிக்கின்றான். அந்த அவதானங்களுக்கூடாக சில ஒழுங்குமுறைக் கோலங்களை கண்டு பிடிக்க முனைகின்றான். விஞ்ஞான விசாரணை ஒரு விசேட வடிவத்தைக் கொண்டது. விஞ்ஞானத்தினுடைய மரபுசார்ந்த விம்பத்துக்குள்ளே அறிமுறை, செயல்முறை **(Operationalisation)** பரிசோதனை ஆகியவை அடங்கும்.

விஞ்ஞானம் எமது சாதாரண நாளாந்த வாழ்க்கையில் காணப்படுகின்ற விசாரணையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு உன்னதமான வித்தை அல்ல. ஆனால் அது சாதாரண, மனித விசாரணையில் இருந்து எவ்வகையிலும் வேறுபட்டது என்றோ, எவ்வகையிலும் சிறந்ததில்லை என்றோ கூறிவிடமுடியாது. சாதாரண மனித விசாரணை பொதுவாக தவறான பாதைகளில் சென்று தோல்வியில் முடிவடைந்துவிடும். ஆனால் விஞ்ஞான விசாரணை அதே விடயத்தை சற்று வித்தியாசமான முறையில் அணுகி குறைந்தளவு தவறுகளையே எதிர் கொள்வதால் வெற்றிப் பாதையை நோக்கித் திரும்பிவிடும்.

சாதாரண மனிதவிசாரணையில் ஏற்படுகின்ற சில பொதுவான தவறுகள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) செம்மையற்ற அவதானம் (Inaccurate Observation)

அவதானமே விசாரணையின் திறவு கோல். ஆகவே செம்மையற்ற அவதானம் விசாரணையை தவறாகவழிநடத்தும்.

உ+ம்:- அமெரிக்க உல்லாசப்பயணி ஒருவர் பிரான்ஸ் தேசத்திலே பல புதிய மனிதர்களால் மோசமாக நடத்தப்பட்டிருக்கலாம். அதனால் அவர் பிரான்ஸ் நாட்டவர்கள் மோசமானவர்கள் என்ற முடிவுக்கு வரக்கூடும். ஆனால் அவரை மோசமாக நடத்தியவர்கள் ஜேர்மன் நாட்டில் இருந்து பிரான்ஸுக்கு வந்த உல்லாசப் பயணிகளாகவும் இருக்கலாம். இங்கு செம்மையற்ற அவதானம், தவறானதொருமுடிவுக்கு இட்டுச் சென்றதை காண்கிறோம்.

விஞ்ஞான விசாரணையில் இந்த அவதானங்கள் மிகவும் கவனமாகச் செய்யப்படுகின்றன. விஞ்ஞான மாணவன் அவனுடைய பயிற்சியில் மிக ஆரம்பகாலத்திலேயே இதுபற்றி அறிந்து கொள்கிறான். சாதாரண மனிதன் தன்னுடைய அவதானங்களை எதுவிதநோக்கமும் இன்றி ஒரு பொழுதுபோக்காக, ஒரு அரைப்பிரக்ஞை நிலையில் (Semi Consciously) செய்யக்கூடும். ஆனால் ஒரு விஞ்ஞானி எப்போதும் பிரக்ஞை பூர்வமாக ஒரு கணிப்பீட்டு முறையை தனது அவதானங்களைப் பெறுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டிருப்பான். இதனால் தவறுகள் குறைகின்றன. அனேகமான விஞ்ஞானங்களில் அளவீட்டுமுறைகளும், அளவிடும் கருவிகளும் தவறான அவதானங்களைக் குறைத்து விடுகின்றன, மனிதப் புலன்களுக்கு அப்பால் ஒரு மேலதிக உறுதித் தன்மையையும் இந்த உபகரணங்கள் தருகின்றன.

(ii) மிகைப் பொதுமைப்படுத்தல் ( Over Generalization )

குறைந்தளவு அவதானங்களை வைத்துக் கொண்டு பெரியளவிலான கோலங்களைப் பொதுமைப்படுத்தும் இயல்பு மனிதனுக்கு உண்டு,

உ+ம்:- ஒரு யுத்தகைதி சிறையில் இருந்து விடுபட்டு புதிய கிராமத்தினூடாக வருகின்றார், அவரை முதல் சந்திக்கின்ற கிராமத்து மனிதன் அவனைக் காப்பாற்றுவானாயின், அந்தக் கிராம மக்கள் தன்னைக் காப்பாற்றுவார்கள் என்ற முடிவுக்கு வருவதால், நிலைமை மறுதலையாகவும் அமையலாமல்லவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான விசாரணையில் பொதுமைப்படுத்தல் ஒரு முக்கிய பகுதி ஆயினும் அங்கு மிகைப் பொதுமைப்படுத்தலுக்கு எதிராக பல பாதுகாப்புக்கள் உள்ளன. குறிக்கப்பட்ட ஆய்வை சிறிதளவு வேறுபடும் நிலமைகளில் பல தடவை செய்யுமாறு வற்புறுத்துவது இவ்வாறான ஒரு பாதுகாப்பு எனலாம்.

உ+ம்:- ஒரு உலோகம் குறித்த வெப்பநிலையில் உருகுவதை அவதானிக்கும் விஞ்ஞானி எதுவித விதிவிலக்குமின்றி எல்லா உலோகங்களையும் பரீட்சித்துப் பார்த்த பின்பே ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுக்கு வருகின்றார்.

### (iii) தேர்ந்தெடுத்த அவதானம் (Selective Observation)

நாங்கள் ஒரு குறித்த கோலங்கள் இருக்கின்றன என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டோமாயின் எதிர்கால அவதானங்களை தெரிவுசெய்து பார்ப்பதற்கு தூண்டப்படுகின்றோம். எமது முடிவுக்கு எதிரான அவதானங்களை நாம் காணாது விட்டுவிடுவோம்.

உ+ம்:- ஒரு யூத இனத்தவன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்பதைக் கவனிக்கும் ஒருவர், யூதர்கள் நேர்மையற்றவர்கள் என்ற முடிவுக்கு வருகின்றான். அதற்குப்பிறகு அவன் தன் வாழ்க்கை முழுவதிலும் நேர்மையற்ற யூதர்களை கூர்ந்து அவதானிக்கின்றார். அதேசமயத்தில் நேர்மையான யூதர்கள் அவரது கவனத்தில் படுவதில்லை. ஆனால் விஞ்ஞானி இப்பிரச்சினை சம்பந்தப்பட்ட சகல தரவுகளையும் கருத்தில் எடுத்து ஆராய்ந்த பின்னரே முடிவுக்கு வருகின்றான்.

### (iv) சுருக்கப்பட்ட தகவல்கள் (Reduced Information)

இதில் ஒருவருடைய விளக்கத்திற்கு எதிரான அவதானங்கள் பல சமயங்களில் தூக்கியெறியப்படாதவையாக இருக்கும்.

உ+ம்:- நாம் யூதர்கள் நேர்மையற்றவர்கள் என்ற எண்ணத்தோடு இருக்கும்போது, ஒரு யூதன் தவறிப்போன எனது பொருளை எடுத்து நான்குமைல் நடந்து வந்து அதை என்னிடம் ஒப்படைப்பானாயின் நாம் யூதர்கள் நல்லவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற முடிவுக்கு வருகின்றோம், சிலவேளை வேறுவகையி லும் யோசிக்கலாம். அதாவது இவன் யூதன் இல்லை என்ற முடிவுக்கும் வரலாம், அல்லது இவன் என்னிடத்தில் ஏதோ நன்மை பெறுவதற்காக ஒரு முகமுடி அணிந்து இவ் வாறு செயற்படுகிறான் என்றும் நாங்கள் நினைக்கலாம்.

விஞ்ஞானிகளுக்கும், சிலசமயங்களில் இவ்வாறு ஏற்கனவே செய்யப்பட்ட முடிவுகளுக்கு எதிரான அவதானங்கள் கிடைப்பதுண்டு. விஞ்ஞானி அவ்வாறு நடக்கும் இடத்து மேலும் பலமுறை அதனை மீளச் செய்து பார்ப்பான். இறுதியில் முந்திய முடிவை மாற்றி அமைப்பான் அல்லது இது தவறானது என்ற முடிவுக்கு வருவான். அதாவது தான் ஒருமுறை வந்தமுடிவு எப்போதும் சரியாக இருக்கும் என்பதில் விஞ்ஞானி பிடிவாதமாக இருப்பதில்லை.

## (v) தர்க்கரீதியற்ற நியாயங்கள் (Illogical Reasoning)

தனது விளக்கத்திற்கு எதிரான விடையங்கள் அவதானிக் கப்படும்போது, மனிதன் தர்க்கம் அற்ற காரணங்களை முன் வைக்கின்றான். மனித மனத்தினுடைய மிக விசித்திரமான படைப்பாக்கத்திறன் எதுவென்றால் விதிவிலக்கு ஒன்றினை எடுத்து விதியாக்குவது. இதனால் மிக இலகுவில் அவன் தனது விளக்கத்தை நேர்த்தியாக்கிக் கொள்கிறான். புகைப் பிடித்தலை நிறுத்த விரும்பாத ஒருவர் புகைப்பிடிக்காத ஒருவருக்கு புற்றுநோய் வந்திருப்பதை சுட்டிக்காட்டி புகைப்பிடித்தலுக்கும் புற்று நோய்க்கும் சம்பந்தம்இல்லை என வாதிடுகின்றமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஆனால் விஞ்ஞான விசாரணை இத்தகைய தர்க்கரீதியற்ற வாதங்களுக்கு எதிராக அதிகளவு பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டது. நிகழ்தகவு கொள்கைகள் பற்றி அதிகம் விளக்கம் உள்ள விஞ்ஞானி இத்தகைய விவாதங்களில் ஈடுபடுவதில்லை

இவ்வாறாக செம்மையற்ற அவதானம், மிகைப் பொதுமை யாக்கம், தேர்ந்தெடுக்கப்பட்ட அவதானங்கள், சுருக்கப்பட்ட தகவல்கள், தர்க்கரீதியற்ற நியாயங்கள், விசாரணையை விரை வில் முடித்துக்கொள்ளுதல், விளக்கம் ஏற்படுத்திக் கொள்ளலில் மனிதனின் சுய அகம் தொழிற்படுதல், போன்ற பொதுவான மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைக் குறைபாடுகள் ஊடாக விஞ்ஞானத்தின் விசேட இயல்பை நாம் தெளிந்து கொள்ள முடிகிறது இந்தக் குறைபாடுகளுக்கெதிராக விஞ்ஞானம் பாதுகாப்புக்களை கொண்டிருப்பதே அதன் வெற்றியாகிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

உசாத்துணை:

1 - Babbie, Earl. R. Practice' of Social Research, Wordsworths, 1975.

## முக்கிய எண்ணக்கருக்கள்:

செம்மையற்ற அவதானம் (Inaccurate Observation)
மிகைப் பொதுமைப்படுத்தல் (Over Generalization)
தேர்ந்தெடுத்த அவதானம் (Selective Observation)
சுருக்கப்பட்ட தகவல்கள் (Reduced Information)
தர்க்க ரீதியற்ற நியாயங்கள் (Illogical Reasoning)
சாதாரண மனித விசாரணை (Human Inquiry)
விஞ்ஞானவிசாரணை (Scientific Inquiry)

உடுவில் ப.

மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினிலேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கினபொருள் கைப்படவேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்,
தனமும் இன்பமும் வேண்டும்.
தரணியிலே பெருமை வேண்டும்

— பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் அவன் மனமும்
# Man and His Mind

சுகன்யா சிவானந்தன்

மனிதன் தோன்றிய காலந் தொட்டு மனம் பற்றிப் பேசப்படுகின்றது. இந்த மனம் என்பது உடலிலுள்ள ஏனைய உறுப்புக்கள் போன்ற ஒன்றா? இதன் செயற்பாடு தான் என்ன? உடலினுள் மனம் எங்கேயுண்டு? இதயப் பகுதியிலா? அல்லது மூளைப் பகுதியிலா? இவை ஒன்றும் புரியாது மனம் என்பது இன்றுவரை சொல் நிலையில் நின்றும் இயன்ற வரை பொருள் நிலையில் அகன்றும் சென்றுகொண்டே இருக்கின்றது ஏன்?

பயிற்சியால் பழக்கப்பட்ட ஒன்று வழக்கமாகிவிட்டால் சிந்தனைக்கு உரியதல்லாது ஒதுங்கிவிடும் அல்லது, ஒதுக்கப்பட்டுவிடும். இந்நிலையிலே தான் இன்று மனம் இருக்கிறது

இவ்வாறாக மனம் என்ற பதம் பற்றி அன்று தொட்டுப் பேசப்படினும் அது ஓர் வடிவமற்ற கருதலளவை என்பது எல்லோராலும் அறியப்பட்ட ஒன்று.

"மனம் இன்றேல் மார்க்கம் இல்லை" என்ற முதுமொழியைக் கேட்டிருக்கிறோம். புத்தகத்தைக் கண்கள் பார்த்து வாய் தவறிப் படிக்கின்றது; என்ன படித்தோம்? என்று தெரியவில்லை; ஏனெனில் அங்கு மனம் பதியவில்லை என்று காரணம் கூறுகின்றோம். ஒரு மன நோயாளி எதை எதையோ பேசுகிறான்; கருத்துக்கள் தேவையற்றதாயும் மாறுபட்டதாயும் காணப்படுகின்றன. "ஆழ்மனத்தில் புதைந்திருந்த எண்ணங்கள் பேசத்தொடங்கி விட்டன" என்று மருத்துவர் கூறுகிறார் அதையும் கேட்கிறோம். இவ்வாறாக மனம் என்ற சொல் தோன்று தொட்டு பாமரமக்கள் முதல் விஞ்ஞானிகள் ஈறாக —மனித வாழ்வியலில் இருந்து சாதாரணமாகப் பிரித்து விடமுடியாத ஒன்றாகி விட்டது. "மனம் இல்லையேல் வாழ்வியல் இல்லை" டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெல்லாம் முதன்மைப் படுத்தப்பட்ட மனம் இதுவரை எங்கு, எப்படி யுள்ளது என்பது தெளிவற்ற ஒன்று தான்.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்ற வள்ளுவர் குறளின் படி அவரது கூற்றாக இருந்தாலும் கூட நாம் உண்மையைக்கண்டறிவதே சிறப்பு அது எமக்குரிய அறிவுடைமையாகும் ஆதலால் சிந்தனையாளர்கள், மத வாதிகள் போன்ற பலர், 'மனம்' என்ற சொல்லைப் பல நிலைகளில் பயன்படுத்தி வந்தாலும், 'மனம்' என்ற ஒன்று இல்லை என்று இன்பியல் கொள்கைத் தத்துவ அறிஞர் 'எபிகோரசு' கூறுகிறார்.

'மனம்' என்பது அறிவோடு சேரும் போது தான் செயற்பட முடியும் என்று பகுத்தறிவாளர் கூறுகின்றனர். 'மனத்தோடு சேராத போது ஆன்மாவுக்கு அறிவில்லை, மனத்தோடு சேர்ந்த போது அறிவு டையனவாகும், என்று ஆன்மீகவாதிகள் கூறுகின்றனர்.

இவை தவிர 'மனம்' என்பதற்கான பொருளை அகராதிகள் வாயிலாக நோக்குவோமாயின்;

**Hornby Dictionary:**

**MIND:** memory, remembrance, way of thinking, opinion, intention, purpose.

**Oxford Dictionary;**

**MIND:** the seat of conciousness, thought, Intellectual powers; memory, opinion.

**Lifco Dictionary;**

மனம்: நெஞ்சம் - **Mind**; எண்ணம் - **Intention**; நினைவு, - **Memory**, விருப்பம் - **Desire**

**A. C. Chettiae;**

**MIND;** எண்ணம்; ஓர்மை; நினைவாற்றல்; உளநிலை; உணர்ச்சி; உணர்வுநிலை; உயிர்நிலை; ஆன்மா; விருப்பாற்றல்; திட்டஆற்றல். ஆளும் ஆற்றல்;

அபிதான சிந்தாமணி;

மனம்; அணுபரிமானம்; உள் இந்திரியம்; இன்பம் முதலிய சக்ஷாக்ஷாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத்திற்குக் காரணம்; சங்கியை முதலான ஐந்து குணங்களை உடையது.

கழகத் தமிழ் அகராதி;

| | | |
|---|---|---|
| மனம் | — | இந்துப்பு. |
| மனவொடுக்கம் | — | மன ஒன்றிப்பு; அமைதி; அடக்கம். |
| மனப்பிரமை | — | மனமயக்கம். |
| மனத்தழுக்கம் | — | அழுக்காறு |
| உளம் | — | ஆன்மா; கருத்து; மனம். |
| உள்ளம் | — | மனம்; கருத்து; ஊக்கம்; அகச்சான்று. ஆன்மா; ஆன்மசுபஞானம். |

இவ்வாறாக நடைமுறையிலே நாம் மனம் என்றால் எதைக் கருதுகிறோமோ அப்பொருள் நிலைகளையே அகராதிகளும் காட்டுகின்றன.

இந்த மனம் இன்னும் அனுமானத்திற்குரிய ஒன்றாகவே விஞ்ஞானிகளிடத்திலும், உளவியலாளரிடத்திலும் கூட இருந்து வருகிறது. மனம் என்பது சோதனைக்குட்படுத்திக் காட்சிக் கருவிகளால் விளைவு காண முடியாத ஒன்று. ஒப்பீட்டளவையால், கருத்தளவையால் மனத்தின் நுண் பொருள் தன்மையை நுகர்தல் இயலும். ஒப்பீடு என்பது தகுதியான பிறிதொன்றோடு ஒப்பிடுவது என்பது மட்டுமன்றி காரியமாற்றும் நிலையிலான பிறவற்றோடும் இயைத்துக் காணுதல் என்றும் பொருந்தும்.

எனவே மனிதனின் செயற்பாட்டை அடியாக வைத்து மனம் என்ற பதத்தின் இருப்பை அறிய விளைவோமேயானால், அவன் பிறந்தவுடன் பெறப்படும் குழந்தைப் பருவத்திலே அவனுக்கு மனம் என்பது இருக்காது என்று கூறப்படுகிறது. குழந்தையின் பிறப்பு நிலையில் காணப்படும் உடலின் அக, புற உறுப்புக்களும் உயிரும் அன்றி வேறு எதுவும் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. அனுமானத்தால் கூட உணர முடியவில்லை. ஆரம்பத்தில் உறுப்பும் உயிருமே பல தாக்கங்களுக்குட்பட்டு வளர்ச்சி நிலையை அடையும் பின் அது படிப்படியாக வளரும் அதே வேளையில், சமூக தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கவும் தன்னைத் தயார்ப்படுத்துகின்றது. அப்போது தான் அதற்கு மனம் என்ற பதத்திற்குரிய விருத்தி ஆரம்பிக்கிறது அதாவது அறிவின் முதிர்ச்சி ஏற்பட குழந்தையிடத்திலே 'மனம்' உருவாகும் எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் என்பது சூழலினால், சமூக நடத்தைத் தாக்கங்களினால் தோன்றுகிறது. எல்லாருக்கும் மனம் என்பது ஒன்றல்ல. அவரவர் சூழலுக்கும், சமூக எதிர் வினைகளுக்கும் ஏற்ப மாறுபடும். அவ்வா றில்லை எனில் ஆபிரிக்காவிலே ஓநாய்களோடு வளர்க்கப்பட்ட 'அனா, என்ற சிறுவன் ஓநாய்களைப் போலல்லாது மனிதனாகவே வளர்ந் திருக்க முடியுமல்லவா? வாழ்வானது முற்றிலும் மனத்தில் இருந்தே அமைகிறது. 'மனம் என்பது பழக்கங்களின் கூட்டு' என்ற உண்மையை மனிதன் புரிந்து கொள்ள வேண்டும்

மனம் என்று கொள்ளப்படுவது ஐம்புல நுகர்வுகளான பார்வை, கேட்டல், நுகர்தல், பேசல் உணர்தல் போன்றவற்றுடன் சிந்தனை என்ற பகுதியும் அடங்கிய ஒருவகை நரம்புச்செயற்பாடேயாம் மன உரம், மன அழுத்தம், மன ஆற்றல் என்பதெல்லாம் நமக்கு சூழல் ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளேயாம். யாவும் மனத்தின் செயற்பாடே யன்று, இந்த மனம் என்பது நுண்ணிய நரம்பு விழுப்பங்களாகவும், ஆற்றல் பெற்றதாகவும், மூளை நரம்புகளுடன் இணையப் பெற்றுள்ள தாகவும், ஐம் பொறிகளின் உணர்வுகளுடன் தொடர்பு கொண்டுள்ள தாகவும், சிந்தனைப் பகுதியுடன் இணைந்து செயலாக்கம் பெறுவதா கவும் அறிய முடிகிறது. அதன் கட்டளைகளை ஏனைய நரம்பு மண்டலங்கள் பணியாக ஏற்றுச் செயற்படுகின்றன. தாக்கங்களும் அதற்குரிய சிந்தனைகளும் இப்பகுதியுள் இடம் பெறுகின்றன. காட் சிகள், பிறழ்நெறி நடத்தை ஆய்வறிவால் உணரப் படுதல், முடிவு செய்தல் யாவும் இங்கு தான் நடைபெறுகின்றன. எமது உணர்வுகள் அல்லது அறிக்கைகள் நரம்பு மண்டலங்களால் பெறப்பட்டு மூளையின் அறிகைப் பகுதிக்குக் கடத்திய பின் அவை உணரப்படுவதே முறை யாகிறது.

திறன் என்ற சொல்லை வைத்து மனம் என்ற இடத்தைச் சிலர் தெளிவுறுத்துகின்றனர். இத்திறன்களை;

| | | | |
|---|---|---|---|
| 01. | பெறுதிறன் | 02 | அறிதிறன் |
| 03. | செய்திறன் | 04. | வினைத்திறன் |
| 05. | விளைதிறன் | 06. | மாறுதிறன் |

என்று ஆறுவகைப்படுத்தலாம். இவையாவும் இயற்கையின் தூண்டலின் வசத்தால் பெறப்படுவன. சூழலில் நடைபெறும் நிலையை உடற்கூறுகள் பெறுகின்றன. உடற்கூறு வசத்தால் நடைபெறும் விளை பயன், வழிமாறு திறன் அந்த உயிர்க்கு உண்டாகிறது. உயிருக்கே இந்த ஊதியம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் மனம் என்ற தனியொரு நிலைக்கு இங்கு இடமில்லை. திறனுக்கும், மனத்திற்கும் தொடர்பு இல்லை. உணர்தல், அறிதல், ஆய்தல் யாவும் திறன் நோக்கிய அறிவின் வயப்பட்டதே.

புலன்களின் உணர்வுக்கு — அதாவது கண்ணால் பார்த்து உணர்தல் — மனம் காரணம் என்பது வெறும் மாயையே மனம் காரணமல்ல, அதனை ஆழமாகச் சிந்தித்தால் அது ஆன்மாவின் பாற்பட்டதாகவே கொள்ளப்படும். ஓர் உயிரியின் உடற்கூற்றினுள் இயைந்து கிடப்பது ஆன்மசக்தியே. மனம் என்பது சக்தி பெற்ற ஒன்றாக அமைந்தால் உயிர் தேவையற்றது. மனிதத்திறன் கூற்றாக எதையும் தனியே கூற இயலாது. சிந்தனை, ஆய்வு, முடிவு போன்றவை யெல்லாம் மனச்செயல் என்றால் மூளை என்ற உறுப்பு அவசியமற்ற ஒன்றாகிறதல்லவா!

நெஞ்சு அல்லது நெஞ்சம் என்பதை, 'நெஞ்சு சுழல்கிறது' 'நெஞ்சு வீங்குகிறது' நெஞ்சம் துடிக்கிறது' என்றெல்லாம் கூறுவதைக் காண்கிறோம். இச்சொல்லை நடைமுறையில் நோக்கின் இதயம் மூளை இரண்டும் மகிழ்தலாலும், சோர்வுறுதலாலும் பெறும் நிலைகளையே குறித்து நிற்கின்றன. ஏனைய உறுப்புக்களும் நரம்பு மண்டலங்களும் அதற்குத்தக நடைபெறும். மனத் தளர்ச்சி, மனத்துன்பம், மனமகிழ்ச்சி எனப்படுவன இவற்றின் செயலின் தகவுக்கேற்ப உடலும் உயிரும் பெறும் தகமையே ஆகும் அதாவது ஆன்ம இயலுமையாலும், இயலாமையாலும் உறுப்புகள் செயற்படுவதாகவும் காணப்படுகின்றன.

வழக்கமாக மரபு வழிப் பேச்சில் 'மனம் சரியில்லை, பசி எடுக்கவில்லை' என்று கூறுவதன் மூலம் மனத்திற்கும் பசிக்கும் ஏதோ தொடர்புள்ளதாகக் கொள்ள முடியும் ஆனால் ஆழ உணர்ந்தால் அது தவறு என்பது புலனாகிறது.

உணவுக்குரிய ஏற்புச் சக்தியும், திருப்தியும், பசி உணர்வும் மூளையின் பால் அடங்கியுள்ளன. மூளையின் 'தாலமஸ்' – Thalamus – என்ற பகுதி பசி உணர்வைத் தருகின்றது, போதும் எனக் கூறுகின்றது. அத்துலங்கல் வழி யாவும் நிகழ்கின்றன. இப்பகுதியுள் பசிக் கேந்திரம் – Feeding Center –; திருப்திக் கேந்திரம் – Satisfy Center – என்ற பகுதிகளின் நிலை வழி, எமது பசியும் திருப்தியும் நிறைவு செய்து கொள்ளப்படுகின்றன என்று மருத்துவவியலாளர்கள் விளக்குகிறார்கள். எனவே மனத்திற்கும் பசிக்கும் தொடர்பில்லை என்பதனை நன்கு உணர முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவில் காண்பனவும் நினைக்கும் எண்ணங்களும் மனத்தில் நிகழ்வன. அவற்றுள் உள்மனதில் ஆழ்ந்து கிடப்பவை தூக்கத்தில் மீள நினைவு பெறும் என்கிறார்கள். மேலும் எதிர்காலத்தில் நடக்கப் போகும் நிகழ்வுகளையும் தூக்கத்தில் முன்வைக்க மனம் முயலும் எனப்படுகிறது எனவே தூக்கமும் மனமும் ஒன்றோடொன்று நெருங்கியது எனக் கொள்ளலாமல்லவா?

ஆனால் தூக்கம் பற்றி அறிஞர்களது கூற்றுக்களின் படி நோக்கின்; பல்வேறுபட்ட கருத்துக்களை அவை எமக்கு புலப்படுத்தி நிற்கிறது

தூக்கத்தை மூளையின் கண்ணேண நிலவும் ஒருவகைச் சோர்வு என்று 'மோசா' என்ற அறிஞரும்; 'அசைடில் கோலின் லாக்டிக்' என்ற அமிலம் அதிகமாகச் சுரப்பதன் காரணமாக தூக்கம் நிகழ்கிறது என்று 'திட்சித்' என்ற அறிஞரும்; 'தூக்கம் என்பது ஐம்புல உணர்ச்சிகளால் ஏற்படும் சோர்வு தொடர்ந்து பணியாற்ற இயலாமையால் ஏற்படுத்தும் ஒரு சோர்வு நிலை' என்று 'கிளிட்மேன்' என்ற அறிஞரும்; இன்னும் பலரும் பல்வேறு விளக்கங்கள் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு பலர் பல்வேறாகத் தூக்கம் நடைபெறும் நிலையைக் கூறினாலும் உடல் உறுப்புக்களை ஒட்டிய செயல் நிகழ்வாகவே தூக்கம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது மனம் என்ற ஒன்று மாற்றத்திற்குட்பட்டதாக எச்செய்தியையும் நம்மால் அறிய இயலவில்லை. தூக்கத்திற்கும், தூக்கமின்மைக்கும், தூக்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும் மனத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்பது தெளிவாகிறது.

பூமியில் மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை எத்தனையோ தேவைகள் அவனைச் சூழ்ந்துள்ளன ஆனால் இத்தேவைகளும் ஆசைகளும் கூட அவனது சூழலினாலும் இயல்பூக்கத்தாலும், மரபாலும் பெறப்படுகின்றன. இவையாவும் அனைத்து உயிரிகளுக்கும் ஒரே தன்மையுடையதாக அமைவதில்லை அவ்வவற்றின் சூழலுக்கும் சமூகத்திற்கும் ஏற்ப மாறுபடும், தம்முள் வேறுபடும்

எண்ணங்கள், கற்பனைகள், சிந்தனைகள் எல்லோர்க்கும் உண்டு.

ஒருவனது எண்ணங்கள் மனதிலே பதிவாகின்றன என்பர் ஆனால் அது தவறு புலன்களால் பெறப்படும் நுகர்வுகள் மூளையில் தான் பதிவாகின்றன தோன்றும் எண்ணங்கள் பதிவாவதும் மூளையின் சிந்தனைப் பகுதியில் தான். மூளையும் மனமும் வெவ்வேறானதாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். மருத்துவர்கள் மனப்பகுதி என்று மூளையின் இடது புறத்தை ஆய்வுகளிலே குறிப்பிடுவர். ஆனாலும் இதயம் நெஞ்சம், குருதி போன்ற இடமெல்லாம் மனம் பரவி நிற்கிறது என்றும் கூறுவர். மனம் ஓர் உறுப்பல்ல; அது பழக்கத்தினால் வந்துவிட்ட ஒரு போலி உறுப்பேயாம்.

மேற்கூறப்பட்டவை யாவும் ஆத்ம வாதிகளுக்கே இயையக் கூடியவை. அதாவது ஆன்மா என்ற ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்பவர்கள் ஆன்மச் செயற்பாடுகளை ஏற்பர். அனாத்மவாதிகள் மனிதன் என்பவன் பஞ்ச பூதங்களின் சேர்க்கையே என்றும், அதன் பிரிகையானது மனித இறப்பு என்றும் கொள்கின்றனர். எனவே நாம் மனத்தினதும், புலன்களினதும், மூளையினதும் செயற்பாடுகள் என்று கொள்ளப்படுபவற்றை அவர்கள் பஞ்சபூதங்களின் தொழிற்பாடுகளாகக் கொள்கின்றனர். மனிதனது தேவைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் மனமுறிவுகளும், மனமுரண்பாடுகளும் – Frustration and Conflict – தோன்றும். இவை, பின் வளர்ந்து மனநோய்களை உண்டாக்கலாம். தொடர்வினைகளின் குறுக்கீடுகளும் மனநோய்களின் வேர்களாக இருக்க முடியும். உண்மையில் இவ்வாறான அடிப்படைக் காரணிகள் யாவும் நரம்பு மண்டலங்களை தாக்குவதாலேயே மனநோய்கள் ஏற்படுகின்றன. மனங்களிலல்ல.

அந்நரம்பு மண்டலங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மூலம் மனநோய்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன, குணமாக்கப்படுகின்றன. எது எவ்வாறாயிருப்பினும் மேற்கூறப்பட்ட கருத்துக்கள் ஒருசாராரது விளக்கமே. அதாவது மனம் என்பது ஓர் தனித்த அலகல்ல. பழக்கங்களினாலும் நம்பிக்கைகளினாலும் மனிதனால் வடிவமைக்கப்பட்ட ஒரு போலியே ஆகும் என்பதேயாம். மேலும் இங்கு மனம் என்பது மூளையிலேயே தங்கியுள்ளது என்பதாகப் பார்க்கிறோம். ஆனால் மூளைக்கப்பாலும் சென்று துலங்குவதே மனம் என்று கொள்வோருமுள்ளனர். எனவே மனம்பற்றிய திட்டவட்டமான வரைவிலக்கணங்களையோ, விளக்கங்களையோ இன்றுவரை நிறுவமுடியாதுள்ளது. ஆனால் விஞ்ஞானத்தின் விளிம்புகளை எட்டி விந்தைகள் பல புரிந்து கொண்டிருக்கும் மனிதன் இனிவரும் காலங்களில் மனம் என்பதற்கான சரியான தெளிவினைக் கண்டறியவும் செய்வான்.

**உசாத்துணைகள்:**


01. **இளங்கோவன், கு. கை.** — மனம் – ஓர் ஆய்வு

02. **ஜேம்ஸ் அலன்.** — வெற்றியும் மகிழ்ச்சியும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130744

# தகாப்புணர்ச்சி விலக்கு
## Incest Tabu

---

ம. பிரதீபன்

பண்பாட்டின் வழி வரையறுக்கப்பட்ட சில உறவுகளில் கூடல் (**Mating**) தடை செய்யப்பட்டுள்ளது. உலக பண்பாட்டில் குறித்த சில உறவு நிலையினருடன் பாலியல் உறவு தடுக்கப்பட்டுள்ளது. இதுவே விலக்கப்பட்ட உறவு (**Incest Tabu**) என்றழைக்கப்படுகிறது. மனிதனின் சமூக உறவுகளை தீர்மானிப்பவையாக உயிரியல் காரணிகளுடன் பண்பாட்டுக் காரணிகளும் மிகுந்த செல்வாக்குச் செலுத்தி நிற்பதனைக் காணலாம் இதனால் தகாப்புணர்ச்சி விலக்கு என்பது பல சமூகங்களிலும் செல்வாக்குச் செலுத்தி நிற்பதைக் காணமுடிகிறது

விலக்கப்பட்ட உறவின் வழி அவர்களிடையே திருமணம் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருடன் சேர்வது, கூடல் கொள்வது உடல் ரீதியானது எனினும் அதனைத் தீர்மானிப்பதில் பண்பாட்டுக் காரணிகளுக்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் எல்லா மனித சமுதாயங்களும் திருமணம் செய்து கொள்ளக்கூடாத உறவு முறைகளை வலியுறுத்தி நிற்கின்றன ''நாம் அறிந்தவர்களில் ஒரு மக்களும் எல்லாப் பெண்களையும் புணர்ச்சிக்குரியவர்களாகக் கருதுவதில்லை''என ருத் பெனடிக்ற் (**Ruth Benedict**) என்ற மானிடவியலாளர் குறிப்பிட்டு தடைசெய்யப்பட்ட / விலக்கப்பட்ட உறவு நிலைகளின் தெளிவினை எடுத்துரைக்கின்றார். பெரும்பாலான சமூகங்களில் பெற்றோர் - பிள்ளை, சகோதரன் - சகோதரி திருமணம் தடுக்கப்பட்டுள்ளது - தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நடைமுறை பல பண்பாட்டுப் புலங்களில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுவதனைக் காணலாம். அவுஸ்திரேலியாவில் சகோதரமணம் என்பது மிகவும் கீழ்த்தரமான, வெறுத்து ஒதுக்கத்தக்க விடயமாகக் கருதப்படுகின்றது இதற்கு மறுதலையாக சகோதர திருமணத்தினை ஏற்கும் பண்பு எகிப்திய அரச குடும்பத்திலும், ஹாவாயிலும் காணப்பட்டது இவ்வாறு திரு



0784242

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண உறவினை வைத்துக் கொள்வதனால் மனா (Mana) சக்தியின் வலிமை மேலும் அதிகரிக்கும் என நம்பினார்கள். எமது கீழைத் தேய பண்பாட்டுப்புலங்களிலும் சகோதர திருமணங்கள் விலக்கப் பட்டவையாக, விரும்பப்படாதவையாகவே காணப்படுகின்றன. டகோட்டாவில் சகோதரங்கள் தமக்கிடையே திருமண உறவினை வைத்துக் கொண்டால் அவர்களின் தந்தை 'நான் இப்போ நாய் களின் தந்தையாகிவிட்டேன்'' "Now I am the father of Dogs" என அறிவிக்கும் வழக்கம் காணப்படுகிறது. சில பண்பாடுகளில் ஒரு தாயின் கருப்பையில் வளர்ந்த ஆண், பெண் இரட்டையர்கள் (ஒவ்வா இரட்டையர்) இரத்த உறவிலே இணைக்கப்பட்டவர்கள் என்ற நம்பிக்கையில் சேர்த்து வைக்கப்படுகின்றனர். சகோதரர்களிடையே திருமண உறவினை வைத்துக் கொண்டால் அது மிருகத்தன்மை வாய்ந்ததாக, வன்முறை உணர்வு மிக்கதாக அமைந்து விடும் என்ற கருத்து பரவலாக பல சமூகங்களிலும் காணப்படுகின்றது இவ்வாறு தகாப்புணர்ச்சி நிலைகள் பல சமூகத்தவராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவது ஒரு விதத்தில் பண்பாட்டு வளமிக்க சமுதாயம் உருவாக வழிவகுக்கிறது என்று கொள்ளலாம்.

விலக்கப்பட்ட உறவு நிலைபற்றி சமூகத்தில் பல்வேறுபட்ட விளக்கக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் உயிரியல் சார் விளக்கம் (Biological Explanation), சமூகக் கட்டமைப்பு சார் விளக்கம் (Social Structural Explanation), அமைப்பு தொழிற் பாட்டு விளக்கம் (Functional - Structural Explanation), உளவியல் ரீதியான கோட்பாடு (The Psychological Theory), குடித்தொகைக் கோட்பாடு (Demographic theory) இணக்கக் கோட்பாடு (Alliance theory) போன்றன முக்கியமானவையும், வலிமை மிக்க வையுமான கோட்பாடுகளாகக் காணப்படுகின்றன.

உயிரியல் கோட்பாட்டினை முன்வைத்த வெப்ஸ்ரர் மார்க் (Wester Mark), மோர்கன் (Morgan) போன்றோர் சகோதரப் புணர்ச்சியானது பரம்பரை பரம்பரையாக வரும் எதிர்கால சந்ததியினரை உள உடல் தாக்கத்திற்கு உட்படுத்தி சந்ததியை வளமற்றதாக்கிவிடும் எனக் குறிப்பிடுகின்றனர் மேலும் வெப்ஸ்ரர் மார்க், சகோதரர்கள் தங்க ளுக்கிடையே உடலுறவு கொள்வது இயல்பூக்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றார். இவரது கருத்தினை ஏற்றுக்கொண்டவராகவே பேராசிரியர் ஆதர் வூல்வ் (Prof. Arthur Wolf) காணப்படுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சமூக கட்டமைப்புக் கோட்பாட்டாளர்கள் உலகரீதியாகவே பெற்றோர் - பிள்ளை, சகோதர புணர்ச்சி தடை செய்யப்பட்டுள்ளது எனக்குறிப்பிடுகின்றனர் இதனால்தான் Sisters Brothers, Fathers, Mothers என்பன புணரத்தகாதவர்களை (கிறிஸ்தவமதத்தில்) குறிக்கும் சொற்றொடராக பயன்படுத்தப்படுகின்றது • இக்கோட்பாட்டாளர்களால் பெற்றோரின் பால் ஒத்த சகோதரத்தின்பிள்ளை (Parallel - Cousins) விலக்கப்பட்ட உறவுக்குரியதாக கொள்ளப்பட பெற்றோரின் பால் ஒவ்வா சகோதரத்தின் பிள்ளை (Cross - Cousins விலக்கப்படாத புணர்ச்சிக்குரிய உறவாக கொள்ளப்படுகின்றது

தகாப்புணர்ச்சி தொடர்பான அமைப்புத் தொழிற்பாட்டுக் கோட்பாடில்:

1. உளவியல் சார் கோட்பாடு (The Psychological theory)
2. இணக்கக் கோட்பாடு (The Alliance theory)

என இரு வகைத்தன்மைகள் சுட்டிக் காட்டப்படுகிறது. உளவியல் ரீதியான கோட்பாட்டில் மலினோவ்ஸ்கி (Malinowski) ' பாலுறவு என்பது மிகவும் ஆபத்தானது அது யாருடனும் ஏற்படலாம், ஆனால் அது ஏன் இயல்பூக்கத்தினால் சில விதிமுறைகளுக்கு, கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகிறது என்றால் குடும்பம் என்ற அமைப்பின் தொழிற்பாடு சீராக நிகழ வேண்டும் என்ற நன்நோக்கில் தான்'' என வலியுறுத்துகின்றார்.

E. B.Tylor, மனிதவரலாற்றில் போர் தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஒரு குலத்தினுள்ளேயே திருமண உறவினை வைத்துக் கொள்வதற்குப் பதிலாக வேறுபட்ட குலங்களுக்குள்ளே திருமண உறவினை வைத்துக்கொள்வது போரினால் ஏற்படும் முரண்பாட்டு நிலையை நீக்கஉதவும் எனக் கருதி இணக்கக் கோட்பாட்டினை முன் வைத்தார்.

நாகரிக வளர்ச்சி அடையாத ஆரம்பகால சமூகத்தில் குடும்ப அமைப்பு உருவாக்கப்படவில்லை. அதனால் திட்டமிடப்பட்ட. வரையறுக்கப்பட்ட பாலுறவு நடைமுறையில் இருக்கவில்லை. பின்னர் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டதனைத் தொடர்ந்து மனிதன் பண்பாட்டுக்கு உட்பட்ட வகையில் தன்னை மாற்றி அமைத்துக் கொண்டான் இதனடியாக உறவு நிலைகளும், விலக்கு நிலைகளும் தீர்மானிக்கப்பட்டு தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது இணக்கக் கோட்பாட்டாளர்களின் கருத்துவாதமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல்வேறு கோட்பாட்டாளர்களும் பல்வேறுபட்ட காரணங்களை சுட்டிக்காட்டி விலக்கப்பட்ட உறவு நிலைகளை வெளிப்படுத்துகின்றனர். இவர்களின் கருத்துப்படியும் பொதுவான சமூக பொருளாதார எதிர்கால முன்னேற்றம் நோக்கியும் 'விலக்கப் பட்ட உறவு' என்பது அவசியமாகிறது. உயிரியல் ரீதியாக மட்டு மல்லாது பல தரப்பட்ட வியூகங்களில் இருந்தும் இதன் அவசியம் நோக்கப்பட்டிருப்பது குடும்ப அமைப்பின் ஒழுங்கமைவுக்கும், சமூகக் கட்டுப்பாட்டிற்கும் மேலும் வலுச்சேர்ப்பதாகவே அமையும்.


**உசாத்துணைகள்.**

1. **Adamson Hoebel, E and Everett L. Frost:- Cultural and Social Anthropology - Mc Graw -Hill BookCompany - NewYork, 1976.**

2. ரூத் பெனிடிக்ட்:
பண்பாட்டுக் கோலங்கள்; தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு, 1964.


கண் திறந்திட வேண்டும்,
காரியத்திலுறுதி வேண்டும்;
பெண் விடுதலை வேண்டும்,
பெரியகடவுள் காக்க வேண்டும்;
மண் பயனுற வேண்டும்;
வானக மிங்கு தென்பட வேண்டும்,
உண்மை நின்றிட வேண்டும்.

— பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனோமி | நியமமறு நிலை
## Anomie / normlessness.

---

க. முகுந்தன்

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் இலக்குகளுக்கும், அந்த இலக்குகளை அடைவதற்குச் சமூகத்திலிருக்கும் வழிமுறைகளிற்கும் இடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றது. விழுமியங்கள் சிக்கலானவையாகவும், ஒன்றோடொன்று மோதும் போதும் நியமங்கள் மனிதனுக்கு அருகில் இல்லாத நிலை உணரப்படுகின்றது. இவ்வாறு தனியன் சமூகத்தில் 1 முரண்பாட்டை உணரும் நிலையே நியமமறு நிலையாகிய அனோமி எனப்படுகிறது.

எமில் டுர்கையிம் இதனைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'ஒழுக்க நெறியின் ஓர் வெற்றிடம்' என்றும், நெறிகள் எல்லாம் தடைப்பட்ட நிலை என்றும் கூறுகிறார். சில சந்தர்ப்பங்களிலே நெறிப்படுத்தலே அற்ற நிலை என்கிறார்.

மேட்டன் (Merton) இலக்குகளிற்கும், வழிமுறைகளிற்கும் உள்ள முரண்பாட்டைக் காண்கிறார். இங்கு இயல்பான மனநிலை ஒன்று காணப்படாது. குழுவில் இருந்து விலகி நிற்கும்பண்பு காணப்படும். நிகழும் விழுமியச் செயன்முறையில் உடைக்கப்பட்ட ஒரு கருத்துநிலையாகவும் இது நிகழும் என்கிறார்.

டுர்கையிம், மேட்டன் போன்றோர் சமூகக்கட்டமைப்பு ரீதியான தோற்றப்பாட்டு வழியாக அனோமியை நோக்க, மைக்கிவர் (Miciver) ரெய்ஸ்மன் (Reisman) போன்றோர் உளவியல் ரீதியாகப் பார்க்கின்றனர் சமூக மாற்றங்களினை நெறிப்படுத்தும் நியமங்கள் உடைவுபடும்போது ஏற்கனவே நிலவிய ஒழுக்க வேர்கள் அறுபடலாம். தனிமனித தேர்வு குழப்பநிலையடையலாம் அரசு, மதம் போன்ற நிறுவமைப்புகளில் ஏற்படும் தளர்வு என்பன நியமமறு நிலையை அதிகரிக்கச் செய்வதனை இங்கு குறிப்பிடலாம்.

**உசாத்துணை**

3) **Parson T. Social Structure and personality, London, 1964.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்ற் கொம்ற் (1798-1857)
## Auguste Comte.

அ. எ. றிச்சேட் (B.A, Hons) மொழிபெயர்ப்பு.

அகஸ்ற் கொம்ற் பிரான்சிய நாட்டுத் தத்துவ ஞானியும், சிறந்த சமூகவியலாளருமாவார். பலர் இவரைக் குருவாக ஏற்று பின்பற்றும் ஆதர்சத்தையும் ஏற்படுத்தினார். 'புலனறிவாதம்' (Positivism) என்னும் கொள்கையின் தந்தையாகவும் பிரபல்யம் பெற்றவர். இதனாலேயே சமூகவியலின் தந்தை (Father of the Sociology) என்று அழைக்கும் வழக்கமும் உள்ளது. மெய்ப் பொருள் காணும் அறிவு, உணர்வு, அரசியல் நடவடிக்கைகள் ஆகியவற்றினை விஞ்ஞான ரீதியாக அணுகுவதே இக் கொள்கையாகும். அத்துடன் சமூகவியல் என ஒரு புதிய அறிவியல் வளர இக் கொள்கை அத்திவாரமாகவும் அமைந்தது.

இவருடைய வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாக நோக்கினால் இவருடைய முழுப் பெயர்; இசிடோர் ஒகஸ்ற் மேரி பிரான்சிஸ் சேவியர் (Isidore - Auguste - Marie Francis Xavier) ஆகும். இவர் 1798ம் ஆண்டு தை மாதம் 19ம் நாளன்று பிரான்சிஸ் உள்ள 'மொண்டர் பிலியர்' (Mont Pellier) என்னும் இடத்தில் பிறந்தார். இந்த நகரம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளின் பெரும் தெருக்கள் சந்திக்கும் சந்தியாக 'மொண்டபிலியர்' நகரம் விளங்கியது. அத்துடன் பெரும் சிந்தனைகளின் ஊற்றுத் தளமாகவும் விளங்கியது.

கொம்ரேயின் எதிர்கால முன்னேற்றத்திற்கு அவரின் குடும்பம் பெரிதும் பங்களிப்பு நல்கியது எனலாம். இவருடைய தந்தையார் 'Louis Comte' ஓர் வரி அதிகாரி ஆவார். இவருடைய தாயாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் Rosalie Boyer ஆகும். இவருடைய தாயார் அரச பரம்பரையைச் சார்ந்தவளாவும், தீவிர ரோமன் கத்தோலிக்க மறையைச் சார்ந்தவளும் ஆவாள். மகனுடைய சமயக் கொள்கையை (கத்தோலிக்க நிராகரிப்பை) இட்டு இவர்கள் கவலை கொண்டிருந்தனர். பிரான்சிலே காணப்பட்டபுதிய அலையான குடியரசுவாதம் (Republicanism) நாஸ்திகம் (Skepticism) ஆகிய கருத்துக்களுடன் இவருடைய பெற்றோரும் முரண்பாடான கருத்துக்களையும் கொண்டிருந்தனர். இம்முரண்பாடுகளின் தன்மையை கொம்ற் தெளிவாகப் புரிந்து கொண்டார். கத்தோலிக்கம், அரசாட்சி ஆகியவற்றை இளம் வயதிலேயே நிராகரித்து புதிய கொள்கையைத் தீர்மானித்துக் கொடுத்தவரும் ஆவார்.

'Sociology' என்ற சொல் 'சொசைடாஸ்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்தும், லோகாஸ் (அறிவியல்) என்ற கிரேக்க சொல்லிலிருந்தும் உருவான இச்சொல் சமீப காலத்தில் தான் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இச் சொல்லினை முதலில் உபயோகித்தவரும் கொம்ற் தான். மாறாத இயற்கை விதிகளினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சமூகப் பகுதிகளைப் பற்றி ஆராய்ந்து அறிகின்ற அறிவியலே . சமூகவியல் ஆகும். என்பார் கொம்ற். இயற்கை இயல்களைப் போலவே சமூகவியலிலும் அறிவியல் (Positive) முறையினை பயன்படுத்தினார். சமூகப் பரிணாமம் முன்னேற்றத்துடன் இணைந்து செல்வதாக நம்பினார். முன்னேற்றத்தை அவர் சமய - போர் நிலை (Theological - Military), பகுத்தறிவு - சட்டநிலை (Metaphysical - Legalistic), அறிவியல் தொழிற்றுவநிலை (Positive - Industrial) என்ற மூன்று நிலைகளுடைய விதிகளாக வகுத்தார். கடைசி நிலையானது மிகவும் முன்னேறிய ஒன்று. நாமும் அந்த நிலையில் தான் வாழ்ந்து வருகிறோம். இவருடைய முக்கியமான படைப்பாக புலனறிவாதத்துவம் (Positive Philosophy) அமைகிறது.

கொம்ற் 1829ல் திட்டமிட்டபடி தனது விரிவுரைத் தொடர்களை 'புலறிவாதம்' (Course of Positive Philosophy) தொடர்பாக ஆரம்பித்து தொடர்ந்து வந்த 12 ஆண்டுகளையும் இவ் தத்துவத்தின் 6 தொகுதிகளை பிரசுரிப்பதற்காக அர்ப்பணித்துக் கொண்டவர். இப்படைப்பானது பூரணமான ஓர் தத்துவமாகும். நவீன கைத்தொழில் சமூக அமைப்புக்கு தேவையான அரசியல் அமைப்பை பற்றி எடுத்துக் கூறியது. இவருடைய மூன்று கட்டங்களின் விதியானது (Low of the three stages) மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமானது. அதாவது இறையியல் கட்டத்திலிருந்தே மானிட அறிவு விருத்தி வரலாற்று ரீதியாக ஆரம்பித்தது என வாதிட்டது. இறையியல் கட்டத்தில் உலகினதும், மனிதனதும் தலைவிதியானது தெய்வங்கள், ஆன்மீகம் தொடர்பாகவே என விளக்கி வைக்கப் பட்டது இதற்கு அடுத்ததாக நிலை மாறு அதீத பௌதீகவியல் (A Transitional Metaphysical Stage) கட்டமாகக் கருதப்பட்டது. இங்கு கிரகங்கள் தொடர்பான சிந்தனையின் முக்கியத்துவம், இறுதி காரண காரியங்கள், வேறு வகையான விளக்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. நவீன Positive Stage க்கு வழிவகுத்த இக் கட்டம் மானிட ஞானம், அறிவு, தொடர்பான எல்லைகளை சிறப் பாக எடுத்துக் காட்டியது. மனிதனும் ஒருவர்க்கமாக, இனமாக மாறிவிடும் சமுதாய சூழலுக்கு ஏற்றவாறு கருதப்பட்டது. புதிய விதிகளின் உருவாக்கத்திற்காக முற்றாக விளக்கமளிக்கும் முயற்சி களும் கைவிடப்பட்டன. இவை மெய்பொருளை கண்டறியும் முயற் சிகளுக்கு தடையாயின் மெய்ப்பொருளை கண்டறிதலே எதிர்வு கூறுதலுக்கும், பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளுக்கும் அடிப்படை யானது என்று கூறுவார். விஞ்ஞானங்களின் உயர்வரிசை (Hierarchy of the Science) என்னும் நூலில் கொம்றே புதிய சமூகவிஞ்ஞான மாக சமூகவியலை வலியுறுத்தினார் இவரது இப்படைப்பானது 1842 இல் பூர்த்தியாக்கப்பட்டது

இவரது இன்னுமொரு முக்கியமான படைப்பாக The System of Positive Policy அமைந்தது. சுமார் 8 வருட காலத்தினை இதற்காகச் செலவிட்டார். நிறையவே சமூகவியல் தொடர்பான கருத்தாக்கங்களையும் இதிலே பூரணப்படுத்தினார். மானிட ஞானத் துக்கும் மானிட முயற்சிகட்கும் உந்து சக்தியாக விளங்குவது ஒழுக் கமும் ஒழுக்கவியலுமே என்ற கொம்ற், இது தொடர்பான அரசியல் அமைப்பையும் தெளிவுபடுத்தினார். சமுதாயத்துக்கு ஏற்புடையதான உணர்வு நிலைகளை உருவாக்கி நிலை பெறச் செய்வதற்கான நிறுவ னங்கள், சடங்குகள் என்பனவற்றை முன்மொழிந்தார். நாகரிக வளர்ச்சிக்கு புராதான சமூகம் பெரும் பங்களிப்பை வழங்கியது எனவும் இவர் நம்பினார். அவர் கருதிய நிறுவனங்கள் தெய்வவழி பாட்டு முறைகளில் தங்கியிருக்கமாட்டாது. மாறாக மானிட அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு நல்கிய மாமனிதர்களை நினைவு கூருவதே சிறந்தவழி என்றார்.

சமுதாய கட்டமைப்பை மேம்படுத்தலே மனிதனின் தலையாய கடமை என்றார். அப்பொழுது தனிமனித ஈடேற்றம் ஏற்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

என்றும், இதற்காக ஐரோப்பிய சபை ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் விரும்பினார். இச்சபை மூலம் உலகெங்கும் புதிய கொள்கைகளைப் பரப்ப முடியும் எனவும் நம்பினார். இவருடைய கற்பனைகள் இயற்கைக்கு மாறானவை, பகட்டானவை, நகைப்புக்கு இடமானவை எனப்பலரும் கருதுகின்றார்கள். ஆனால் இவரது படைப்புக்கள் பூரணத்துவமானவை சிந்தனாவாண்மைக்கு வித்திட்டவையும் ஆகும். கத்தோலிக்கம் தொடர்பான இவரின் கொள்கை கண்டிக்கப்பட்டாலும் நவீன சமுதாய அவல நிலையையே அவருடைய கொள்கை விளக்குகின்றது.

விஞ்ஞான கைத்தொழில்மயமாக்கல், நாகரிக நெருக்கடிக்குள் சிறந்த ஸ்திரமான சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கான அதாவது மானிட ஈடேற்றத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை எவ்வாறு காண்பது என்றகேள்விக்கு, பழைய சடங்குகளிலும், நிறுவனங்களிலும் நம்பிக்கை தரும் காலகட்டத்தில் எவ்வாறு மானிட ஈடேற்றத்தை மேம்படுத்துவது இவற்றுக்கெல்லாம் கொம்றே தக்க பதில்களைத் தந்துள்ளார்.

அவரது மறைவு வரை அவர் படைத்த நூல்கள், அவருடைய பங்களிப்புக்கு பெரும் சாட்சி பகருகின்றது; மானிட மேம்பாட்டு சிந்தனைகளுக்காக தன்னை அர்ப்பணித்த ஞானி அவர். பல சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டவர். இவருடைய கருத்துக்கள் இரிக்கப்பட்டது, பிழையாக விமர்சிக்கப்பட்டது. இவரது வாழ்வு மிகவும் போராட்டமாகவே அமைந்தது. இவ்வளவு வேதனைகள் ஏற்பட்டாலும் அவர் சமூகவியலுக்கு ஆற்றிய பங்களிப்பு மகத்தானவை

**ஆதாரம்:** Encyclopaedia of Biritanica (Micro Pedia)

நீங்கள் அறிந்தது எது, நீங்கள் அறியாதது எது என்று அவ்வப்போது உணர்வதே அறிவு.

- கன்.ப்யூசியஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேபேர்ட் ஸ்பென்சர்,

# Herbert Spencer

ம சிவாகரன்

சமூகவியலை ஆரம்பித்த அறிஞர் வரிசையில் இரண்டாவது தந்தை என அழைக்கப்படுபவர் ஸ்பென்சர் ஆவார். கொம்ரேயின் சிந்தனைக்கு தம் மனதில் செயல் வடிவம் கொடுத்தவர் ஸ்பென்சர் எனலாம். அதாவது அனைத்து அறிவியல்களையும் உள்ளடக்கிய அறிவியல் என்ற நிலைக்கு சமூகவியலை உயர்த்துவதாக இவரது சிந்தனை இருந்தது. இக்காலத்தில் (1820 — 1903) அறிவாற்றல் மிகுந்த மேதையாகவே இவர் கணிக்கப்பட்டார். இவர் ஆங்கில நாட்டு பொறியியலாளர், பத்திரிகை அறிஞர், சிறந்த தத்துவஞானி, அத்துடன் சமூகவியலாளரும் கூட. மேலும் தானே தனக்கு கற்பித்துகொண்டவர். **(Self Taught).** இதனால் இவர் கற்றவை அனைத்தும் நன்கு தெரிந்தெடுத்து கற்கப்பட்டனவாம். இவை இவரது மேதாவித்தனத்திற்கு வித்திட்டன.

கொம்ரேயைப்போல ஸ்பென்சரும் அறிவு மேதாவி ஆவார். இதனால் இவருக்குப்பின் வந்த எழுத்தாளர்களில் ஓர் அழிக்க முடியாத முத்திரையை விட்டுச்சென்றுள்ளார், சமூகவியல் களத்தில் வேறு எவரும் இவரைப்போல ஆட்சேபனைகளுக்கு இடமளிக்கும் சமூகவியற்கொள்கை பற்றி எழுதவில்லை. எல். ஏ. கொசர் **(L. A. Coser)** இவரைப்பற்றி எழுதும் போது "ஸ்பென்சர் ஒரு கொள்கைவாதி **(Theorist).** இவரது பெருமதிமிக்க உள்நோக்கு அறிவு **(Insight)** பெரும்பாலும் ஒவ்வாமை **(Irrelevent),** உண்மை போல காட்சி அளிக்கும் நியாயம் கூறல் ஆகிய கடலில் மூழ்கிவிட்டன. இவரின் கருத்துக்கள் ஆட்சேபனை அம்சங்களை உண்டாக்கினாலும் உண்மையில் இவை அவர் சமூக சிந்தனைக்களத்தில் **(Field of Social Thought)** எடுத்துக்கொண்ட முக்கியத்துவத்தை மழுங்கச்செய்யாது தொடர்ந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் சிந்தனையில் தோன்றிய பரிணாமத்தின் விதி (Law of Evolution), உயிரியல் ஒப்புமை வாதம் (Organic Analogy) பற்றி ஒரு சுருக்கமான விமர்சனக்கண்கொண்டு பார்ப்போம். முதலில் பரிணாமத்தின் விதி என்பது குறித்துப்பார்ப்போம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உணர்ச்சியூட்டும் கருத்துக்களில் ''பரிணாமம்'' என்ற கோட்பாடு முக்கிய இடத்தை பெற்றிருந்தது. இந்த பரிணாம வாதத்தை மிகவும் பிரசித்திவாய்ந்த நிலையில் ஆதரித்து புகுத்திய வர் இயற்கைவாதி சார்ள்ஸ் டார்வின் ஆவார். 1859ல் இவர் 'இனங்களின் தோற்றம்' எனும் நூலில் இந்த பரிணாம எண்ணக் கருவை விருத்தி செய்துள்ளார். இவரின் கொள்கைப்படி மனித வர்க் கம் கீழ் இனங்களில் இருந்து படிப்படியே சூழலுக்கு ஏற்றவாறு தம்மை உயிர்தப்பி வாழ்வதற்கு உகந்த உயிரியல் அமைப்புக்களை காலக்கிர மத்தில் பெற்று வந்தது. 19ம் நூற்றாண்டின் பின்னரைக் காலத்தில் வாழ்ந்த சமூகவியல் மேதாவியான ஸ்பென்சர், டார்வினின் கொள் கையில் கட்டுப்பட்டு சமூக டார்விணிசம் (Social Darwinism) என் பதை ஆக்கினார். சமூகபரிணாமம் (Social Evolution) என்பது சமூ கம் மிகவும் எளிய நிலையிலிருந்து சிக்கல் நிறைந்த நிலைக்கு பரி ணமிப்பதைக்குறிக்கும் ஒரே இயல்பான தனிமையுள்ளதில் இருந்து. (Homogenous) பல தன்மையுள்ள இனமாக (Heterogenous) பரிணா மம் அடைவதாகும் என சமூக பரிணாமத்தை விளக்குகிறார்.

எல். ஏ. கொசர் (L. A. Coser) கூறுவதுபோல் 'ஸ்பென்சரிசம்' (Spencerism) எனும் கொள்கையின் அடித்தளமே பரிணாம கோட்பாடு அல்லது பரிணாமத்தின் விதி ஆகும். அவர் எழுதிய முதலாவதுகொள் கை (First principle) எனும் நூலில் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் காரணதொடர் சங்கிலியாக பின்னோக்கி ஆராய்ந்து இரண்டு மூலா தாரமான தேர்வுகளுக்கு கொண்டு போகின்றார். அந்த இரண்டு தேர் வுகளுமே பொருளும், சலனமும் ஆகும் (Matter and Motion( அதா வது, ஒரு பொருளும் அதன் இயக்கமும் ஆகும். சக்தி - வலு என்ற இரு அம்சங்களும் இவரின் கொள்கைப்படி பரிணாம விதியே இந்த விதியின் பிரகாரமே எல்லாம் மாற்றமடைகின்றன, பரிணாமிக்கின்றன, பொருட்கள் தன்னுடன்தான் சார்பு வரை யறையற்றதும் இயைவு அற்றதுமான ஒரே தன்மையான நிலை யிலிருந்து, வரையறையானதும், இயைவு உள்ளதுமான பல தன் மையான நிலைக்கு மாறுகின்றன. இவருக்கு. இந்த பரிணாம விதியானது அனைத்திற்கும் பொதுவான இயல்பு உள்ளது. இந்த விதியைக்கூட, உயிரியல், சமூகம், உலகம் போன்ற எல்லாத்துறைகட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பிரயோகிக்காலம் இவர் கருத்துப்படி இந்த பரிணாமத்தின் பொதுவான நடைமுறையின் மூலம் இந்த உலகம் ஆதிகாலத்தில் அடைந்த மாற்றங்களை விளக்கமுடியும் என்பதாகும். மேலும் சமூகத்தில் மிகவும் பிந்தி ஏற்பட்ட மாற்றங்களையும் சமூக வாழ்க்கையின் விளைவுகளையும் இந்த விதியின் மூலம் விளக்கவும் முடியும் என்றார். அண்டத்தில் காணப்படும் புதிர்கள் அனைத்தையும் திறந்து பார்த்து விளங்குவதற்கு இந்த பரிணாம விதியானது எல்லாப் பூட்டுக்களையும் திறக்கக்கூடிய ஒரு திறப்பாகும் என கருதினார்.

ஸ்பென்சரின் கருத்துப்படி சமூகங்களின் பரிணாமம் (**Evolution of Socities**) அதே பரிணாமவிதிக்கு ஆட்பட்டதேயாகும். இயற்கையான பரிணாமவிதியின் கருத்துப்படி, கொள்கையின் அடிப்படையில் சமூகவியல் இருந்தாலே அது அறிவியலாக முடியும். சமூகவியல் இந்த இயற்கைவிதிக்கு அமைவது இல்லையெனும் நம்பிக்கை நிலைத்து நிற்கும் வரையில் சமூகவியலை அறிவியலாக ஏற்றுக்கொள்ள முடியாது என இவரது **'Study of Sociology'** எனும் நூலில் வற்புறுத்தியுள்ளார். உயிரியல் பரிணாமமும், சமூகபரிணாமமும் சமாந்தரமானவை, இணையானவை என காட்டுவதில் முக்கிய கவனம் செலுத்தியும் உள்ளார். இதேபோல் உயிரியல் அலகுகளிலும், சமூக அலகுகளிலும் உள்ள அமைப்புக்களிலும், அவற்றின் பரிணாமங்களிலும் ஒரே மாதிரியான தன்மையையும் காட்டுகின்றார். உயிரியல் ஒப்புமைகள் (**Biological Analogies**) இவரின் சமூகவியல் நியாயங்களில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மனித இனம் ஒரே நேர்மாறு வழிசார்ந்த பரிணாமத்தின் மூலமே (**Unilineal Evolution**) வந்தது என்னும் நம்பிக்கை உள்ளவர் ஸ்பென்சர் எனக்கூறலாம். எப்படி தனிநபர்கள் குழந்தை பருவத்திலிருந்து முதிர்பருவத்திற்கு பரிணாமிக்கின்றார்களோ அதேபோலவே மனித வர்க்கத்தின் முன்னேற்றம் விருத்தியின் பல படிகள் அல்லது நிலைகள் ஊடாக கண்டிப்பாக நிர்ணயிக்கப்படுகின்றது. குழந்தை பருவத்திற்கும் முதிர் பருவத்திற்கும் எவ்வகையான குறுக்கு வழியும் கிடையாது. அதேபோலவே சமூகவாழ்க்கையில் கீழ்நிலைக்கும் மேல்நிலைக்குமிடையில் குறுக்குவழிகிடையாது. ஆனால் அது தொடர்ச்சியாக ஏற்படும் சிறிய மாற்றங்களை அடைந்துகொண்டு போகின்றது. இந்நடைமுறையை தடுக்கமுடியாது, இது நடந்தே ஆகும். அதற்கு பொறுமையாக காத்திருக்க வேண்டும் என **'Study of Sociology'** எனும் நூலில் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பரிணாமம் முன்னேற்றத்தை நோக்கியே உள்ளது எனஸ்பென்சர் நம்பியமை பற்றி கேள்வி எழலாம். பரிணாமத்தின் இடைவிடாது எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் நடைமுறையானது தவிர்க்கமுடியாதவாறு முன்னேற்றத்தை நோக்கியபடியே இருக்கின்றது. மனிதன் இயல்பாகவே முன்னேற்றத்தை நோக்குவதற்கு முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுள்ளான் என்பதை ஸ்பென்சர் வலுவாக நம்பியுள்ளார். இவர் ஆரம்பகாலத்தில் எழுதியவற்றில் இந்த பரிணாம நடைமுறையானது இடைவிடாத, எப்போதும் இருக்கும் தன்மையுடையது எனப்படம் பிடித்துக்காட்டுகிறார். ஒரே தன்மையுள்ளதில் இருந்து பல தன்மை உள்ளதாக மாற்றம் அடைவதை நாகரிகங்களின் முழுமையான முன்னேற்றத்தில் வெளிப்படையாக காணலாம். இதேபோல ஒவ்வொரு தேசியத்திலும் காணலாம். மேலும் இது முன்னரிலும் பார்க்க கூடிய வேகத்தில் நடைபெற்றுக்கொண்டே போகிறது. ஸ்பென்சர் மற்றைய எல்லோரிலும் மேலான முன்னணியாய் நிற்கும் போதகராகவே காணப்படுகிறார். முன்னேற்றத்தை நோக்கியுள்ள இந்த நேர்மரபு வழிசார்ந்த பரிணாமத்திற்கு விளக்கமளிக்கிறார்.

அடுத்தபடியாக ஸ்பென்சரது உயிரியல் ஒப்புவமை (Organic Analogy) மிகவும் பிரபல்யம் பெற்றது. இந்த பரிணாமக்கொள்கையே எவ்வித சந்தேகமின்றி ஸ்பென்சரின் சமூகவியல் கொள்கையின் அத்திவாரம் எனலாம். இந்த உயிரியல் ஒப்புவமை கொள்கையானது இரண்டாம் தர நிலையில் உள்ளது எனினும் இதுவும் அவரது சிந்தனை முறையில் பங்கேற்று இருக்கின்றது, உயிரியல் ஒப்புவமை போன்றதே சமூகம் எனும் கருதுகோளை ஸ்தாபித்து, பின்னர் அதற்கு எதிராக வரும் கண்டனங்களை தர்க்கரீதியாக எதிர்த்து வாதாடிக்கொண்டு போனார். ஆனால் அவரின் தர்க்கமே அவரின் கருத்தியலின் வீழ்ச்சிக்கு காரணமாயும் இருந்தது. காரணம் இது அவரது அறிவியலின் உள்நோக்கங்களை பழுதாக்கி விட்டது.

ஸ்பென்சர் உயர் அங்கிகளுக்கும் சமூக அங்கிகளுக்கும் இடையில் ஒத்த தன்மைகளை நோக்கியுள்ளார்.

(i) சமூகமும் அங்கிகளும் சடப்பொருட்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டப்படுவது அவற்றில் வெளிப்படையாக காணப்படும் வளர்ச்சியே ஆகும்.

(ii) இரண்டும் பருமனில் வளர்ச்சியடைகின்றன. அவற்றில் காணப்படும் அமைப்புக்களில் மிதமான சிக்கலான தன்மைகள் ஏற்படுவதினால் இந்த வளர்ச்சி பூர்த்தியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) அங்கிகளுக்கும், சமூகத்திற்கும் இடையில் ஒன்றில் மற்றையது தங்கி சார்ந்து இருக்கவேண்டிய பாகங்கள் காணப்படுகின்றன. இரண்டிலும் காணப்படும் அமைப்பில் உள்ள வேற்றுமைகள் ஒவ்வொரு பரிணாமத்திலும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இரண்டிலும் உள்ள அமைப்புகளின் வேறுபாட்டிற்கேற்ப அவற்றின் தொழிற்பாடும் வேறுபட்டுக்கொண்டே போகும். பரிணாமத்திற்கேற்ப அமைப்பின் மாற்றம் எப்படி முன்னேறுகின்றதோ அதே போலவே தொழிற்பாடுகளும் முன்னேற்றமடைகின்றன.

(iv) சமூகத்திற்கும் அங்கிகளுக்கும் உள்ள பரிணாமம் அவை இரண்டின் அமைப்பிலும் செயற்பாட்டிலும் வேறுபாடுகளை காட்டுகின்றது. இரண்டிலும் உள்ள இவ்வேறுபாடுகள் ஒன்றை மற்றையது அந்நிலையில் இருப்பதற்கும் வரைசெய்கிறது.

(v) கல்வியின் ஆயுட்காலம் போல சமூகத்தின் ஆயுட்காலமானது ஏனைய அலகுகளினதோ அல்லது பகுதிகளினதோ ஆயுட்காலத்திலும் நீளமானது.

சமூகங்களுக்கும் அங்கிகளுக்கும் இடையில் காணப்படும் முக்கியமான வேற்றுமைகளை ஸ்பென்சர் மறுசீரமைத்துள்ளார், வகுத்துள்ளார். ஆனால் அவற்றை மேலோட்டமான வேற்றுமைகள் எனக்கருதினார். பிரதானமான வேற்றுமைகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

(i) ஓர் அங்கியின் பகுதிகள் சேர்ந்து முழுமையான பண்பாகின்றது. ஆனால் ஒரு சமூகத்தில் அதன்பகுதிகள் தங்கு தடையின்றி சுயமாக உள்ளன. பெரும்பாலும் அவை அங்கும்இங்குமாக சிதறிக்கிடக்கின்றன.

(ii) அங்கிகளுக்கு ஒரு குறிக்கப்பட்ட புற அமைப்பு அல்லது வடிவம் இருப்பதுபோல சமூகத்திற்கு இருப்பதில்லை அங்கிகளுக்கு கைகால்கள் போன்ற புற உறுப்புக்கள் காணப்படுகின்றன.

(iii) அங்கிகளின் பாகங்கள், அங்கிகளில் ஒட்டிக்கொண்டிருப்பது போல சமூகத்தின் பாகங்கள் ஓர் இடத்தில் நிலையாக இருப்பதில்லை. அவை அந்த சமூகத்துடன் சார்ந்து பொருந்திய வண்ணம் காணப்படுவதில்லை.

(iv) ஓர் அங்கியின் நனவு நிலை உணர்வானது அதன் உடலின் மூளை என்ற பகுதியிலேயே குவிந்திருக்கின்றது. ஆனால் சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவு நிலை உணர்வுகள் சமூகம் எங்கும் வியாபித்துக்காணப்படு கின்றது.

(v) ஓர் அங்கியின் பாகங்கள் அந்த அங்கியின் முழுமைக்கும் நலனுக் குமாகவே இருக்கின்றன. சமூகத்திலோ, சமூகம் முழுவதும் அதன் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் நன்மை தருவதற்கென அமைகின்றது.

இப்படியாக, அங்கிக்கும் சமூகத்திற்கும் இடையில் காணப்படும் வேற்றுமைகள், உயிரியல் ஒப்புவமை பற்றி ஸ்பென்சர் விளக்குவதற்கு ஒருபோதும் தடையாக இருக்கவில்லை. இரண்டிற்குமிடையே வலு வான ஒரு சமாந்தரபோக்கை ஸ்தாபிக்கவும் எத்தனித்தார். உதார ணமாக ஒரு அங்கியின் சீரணமண்டலத்தை ஒரு சமுதாயத்தின் உற் பத்தியில் ஈடுபடும் கைத்தொழில் முறைகட்கு ஒப்பிட்டார், ஓர் அங் கியின் குருதிச்சுற்றோட்டத்தை சமூகத்தின் ஏற்றுமதி இறக்குமதி முறைக்கு ஒப்பிட்டார். இதேபோல ஓர் அங்கியின் நரம்பு தொகு தியை, சமூக கடமைகளை ஒழுங்குபடுத்தும் பகுதியுடன் ஒப்பிட்டார். இவ்வாறு மேலும் அவர் பல நிலைகளை காட்டி தான் எடுத்துக் கொண்ட பொருளை விளக்க முற்படுகின்றார்.

தொகுத்து நோக்கும் போது, சமூகவியல் இன்று ஒரு அறிவியல் துறையாக வளர்வடைவதற்கு அத்திவாரமிட்ட கோட்பாட்டாளர் களில் ஸ்பென்சர் இயற்கையாகவே ஞானம், அறிவுத்திறன் மிக்கவராக காணப்படுகின்றார். தான் எடுத்துக்கொண்ட துறைக்கு அணிசேர்த்து விளக்கி வாதிட்டுள்ளார். இயற்கைவாதியால் முன்வைக்கப்பட்ட பரிணாமக் கோட்பாட்டை, சமூக நடத்தைகளுடன் ஒப்பிட்டு சமூகப் பரிணாமக் கோட்பாடாக நிறுவினார். அதேபோல உயிரிகளுக்கும் சமூகத்திற்கும் உயிரியல் ஒப்புவமை கண்டு அதன்வழி சமூகத்தை வரையறுத்தார். இது போன்ற முயற்சிகள் தான் பின்னர் சமூகவியல் கண்ட வளர்ச்சிக்கு வித்திட்டது என்றால் மிகையில்லை.

**உசாத்துணைகள்**

1. Shankar Rgo, C. N; Sociology - Primary Principals of Sociology with Introduction to Social Thought
Chand & Company LTD. Ramangar, New Delhi 1993.

2. Tom Bottomere and Robert Nisbet - A History of Sociologica Aualysis; Hein Emann, London, 1973.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டுக் கோட்பாடு
# Conflict Theory

பகீரதி ஜீவேஸ்வரா

'முரண்பாடு' என்ற எண்ணக்கருவுக்கான விளக்கத்தை இன்று உலகில் வாழும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வடிவில் உணர்ந்திருப்பர். இது தனிமனிதனொருவன் தனக்குள்ளே உணர்ந்து கொண்டதாக இருக்கலாம்; தனிமனிதனொருவன் இன்னொரு தனிமனிதனுடன் உணர்ந்து கொண்டதாக இருக்கலாம்; தனிமனிதனொருவன் ஒரு குழுமத்துடன் எனவும், குழுமம் ஒன்று இன்னொரு குழுமத்துடன் எனவும் கூட உணர்ந்து கொள்ளப்படலாம். சிலவேளைகளில் இவை இவற்றின் கூட்டாகவும் வடிவம் பெறலாம். இது முரண்பாடு சார்ந்த உலகளாவிய நோக்கு.

சமூகவியற் துறை 'முரண்பாடு' என்ற எண்ணக்கருவை உள்வாங்கி அதற்கான உச்சப்பயன்பாட்டை வழங்கி அதற்கென ஒரு கோட்பாட்டைக் கட்டியமைத்தது 1950 ற்குப் பின்னான காலப் பகுதிகளிலேயாகும். இவ்வெண்ணக்கருவுக்கு சமூகவியல் துறையில் முக்கியத்துவம் வழங்கப்பட்டபின் அது தொடர்பான அக்கறையும் அதிகரித்துள்ளதெனலாம்.

காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட சமூகவியலாளர்கள் சமூகம் என்ற கட்டமைப்பினுள்ளே எழும் பல்வேறுபட்ட முரண்பாடுகளையும் அதன் விளைவுகளையும், அதற்கான காரணங்களையும், தீர்வுகளையும் தத்தமது படைப்புலங்களினூடே வெளிப்படுத்தியுள்ளார்கள். இக் கோட்பாடு சார் எழுச்சிக்கு முன் தொழிற்பாட்டு வாதத்தினூடாகவே சமூக யதார்த்தத்தின் முரண்பாட்டு இயல்புக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. காலப்போக்கில் தொழிற்பாட்டுவாதம் பழமை பேணும் தன்மைகொண்டதாகவும், சமூகமாற்றத்துடன் அதிகம் தொடர்புபடாமலும், அதனால் சமூக முரண்பாட்டைப் பகுப்பாய முடியாததாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொக் வுட் (Lock Wood) என்பவர் "சமூகங்களின் இயந்திர மயமான செயன்முறை முரண்பாடுகளைத் தவிர்க்கமுடியாதபடி, வசப்படுத்த முடியாதபடி அமைக்கப்பட்டுள்ளது" என்கிறார்.

உதாரணமாக,

(1) அதிகார வேறுபாடுகள் - சில குழுக்கள் ஏனையோரைச் சுரண்டு வதை உறுதிப்படுத்துவதோடு, சமூக அமைப்பில் முரண்பாடு, பதட்டம் என்பவற்றைக் கட்டமைக்கிறது.

(2) சமூகங்களில் குறைவான வளங்களின் இருப்பு - தவிர்க்க முடியாதபடி இந்த வளங்களின் விநியோகத்தில் போட்டிகளைக் கூட்டி விடுகிறது.

(3) சமூக அமைப்பில் வேறுபட்ட விருப்புக்களைக் கொண்ட குழுக்கள் வேறுபட்ட இலக்குகளைத் தூண்டுகின்றன. அவை ஒன்றை யொன்று மேம்படப் போட்டியிடுவதில் முரண்பாட்டின் முகிழ்ப்பு உறுதியாகிறது.

சமூகவியல்துறையில் முரண்பாட்டின் கோட்பாடுசார் வளர்ச் சிக்குப் பங்களித்தவர்களில் ஐரோப்பாவில் கம்புளோவிச் (Gumplowicz) றட்சன்கூவர் (Ratzenhofer), சைமல் (Simmel) ஆகியோரும், அமெரிக்காவில் சம்னர் (Sumner), சிமோல் (Small), பாக் (Park) ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தவிர கார்ல் மாக்ஸ் (Karl Marx) றால்வ் டரன்டோவ் (Ralf Darendorf) லூயி கொசர் (Lewis Coser) ஆகியோர் முரண்பாட்டுக் கோட்பாட்டின் மூல கர்த்தாக்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள முரண்பாட்டை அடையாளம் கண்ட உள்ளடக்கத்தை அடியாகக் கொண்டு முரண் பாட்டுக் கோட்பாடு, இயங்கியல் முரண்பாட்டுக் கோட்பாடு, முரண் பாட்டுத் தொழிற்பாட்டுவாதம் என இரண்டு வகையாக வேறு படுத்தப் படுகிறது. இவர்களுள் மார்க்ஸ், டரன்டோவ் ஆகிய இரு வரும் இயங்கியலினூடாக முரண்பாட்டைப் பார்த்தவர்கள். சைமல் கொசர் ஆகிய இருவரும் தொழிற்பாட்டு வாதத்தினூடு முரண்பாட் டிற்கு விளக்கம் கொடுத்தவர்கள்.

மாக்ஸிசக் கோட்பாடு சமூகவியல் கோட்பாட்டிற்கு வெளியில் அதிகம் விருத்தியடைந்தாலும், நவீன முரண்பாட்டுக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு மறுக்கப்பட முடியாதது. சமகால



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் கோட்பாட்டில் இன்றும் செல்வாக்குச் செலுத்தும் சமூக அமைப்பை மார்க்ஸ் புரட்சிகர வகுப்பு முரண்பாடு, சமூக மாற்றம் என்பனவற்றின் விருத்தியில் கண்டார். எந்தவொரு சமூகத்தினதும் பொருளாதார அமைப்பின் உள்ளார்ந்த இயல்புகள், அச் சமுதாயச் சமூகத்தைக் கூடுமானவரையில் பாதுகாப்பதுடன், தவிர்க்க முடியாதபடி அவை புரட்சிகர வகுப்பு முரண்பாட்டைக் கூட்டும் வலுக்களும் ஆகின்றன என்றார். இத்தகைய புரட்சிகர வகுப்பு முரண்பாடு இயங்கியலானதாகவும், கருத்தமைவானதாகவும் அமைந்து வகுப்புக்களைப் புறந்தள்ளுவதுடன், சுரண்டப்பட்ட வகுப்பு மேலாண்மையைத் தூக்கியெறிவதாகவும், வெற்றிகரப் பொருளாதார அமைப்பில் மேலாண்மைக் குழு தமது அழிவுக்குத் தாமே விதையிடுபவர்களாகவும் மாறுகிறது என்கிறார்.

இங்கு திட்டமிட்ட வடிவுக்குள் சமூக உறவுகள் காட்டப்படும்போது (முதலாளி - தொழிலாளி) இந்த உறவுகள் முரண்பட்ட விருப்புக்களுடன் மிகுதியாகின்றன. இந்த உண்மை சமூக அமைப்புக்கள் திட்டமிட்டவகையில் முரண்பாடுகளைக் கூட்டிவிடுவதாகக் காட்டுகின்றது. இங்கு முரண்பாடு விருப்புக்களின் எதிரான துருவங்களில் வெளிப்படுத்தப்படுகிறது. அத்துடன் சமூக அமைப்பில் மாற்றத்திற்கான ஒரு முக்கிய காரணியாகவும் மார்க்ஸால் பார்க்கப்படுகிறது

இதே இயங்கியல் வடிவத்தினூடு முரண்பாட்டை நோக்கிய இன்னுமொருவர் றால்வ் டரன்டோவ் இவர் சமூகத்தை இரண்டு முகம் கொண்டதாகப் பார்த்து ஒன்று உடன்பாடு, மற்றது முரண்பாடு என்றார். இவர் சமூக ஒழுங்கு என்பது கட்டளையிடும் இணைக்கப்பட்ட அமைப்புக்களின் (Imperatively Co-operative Association) நிறுவனமயமாக்கத்தை உள்வாங்கி நிற்பதாகப் பார்த்தார். இவ்வமைப்பு அதிகார உறவுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. எந்த கட்டளையிடும் இணைக்கப்பட்ட அமைப்பும், அடிப்படையில் பாத்திர வகைப்பாட்டில் இரண்டு வகையாகப் பார்க்கப்படுகிறது.

(1) ஆள்பவர் - தமது அந்தஸ்தைப் பேணுவதில் அக்கறையாகவும்

(2) ஆளப்படுபவர் - அதிகாரத்தை மீள் விநியோகம் செய்வதில் அக்கறையாகவும் இருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிறுவனமயமாக்கம் சுற்றுவட்டமானது. அதனுள் முரண் பாடு என்பது சமூகக் கட்டமைப்பு ஒழுங்குகளினுள் எதிரான சக்தி களிடையே பிடிவாதமாக எழும் ஒரு தொடர். முரண்பாட்டிற்கான தீர்வு ஒரு அமைப்பு நிலையில் தவிர்க்க முடியாதபடி எதிரான சக்தி களிடையே இன்னொரு முரண்பாட்டிற்கு வழிகோலும். இந் நிறுவன வடிவில் ஒரு பகுதியினர் கீழ்ப்படிவதாகவும், ஒரு பகுதியினர் புரட்சி செய்வதாகவும் அமைந்திருக்கும் பாத்திரங்களே எதைத் தொடர்வது என்று தீர்மானிக்க வேண்டும்.

மாக்ஸாலும், டரன்டோன்வாலும் சமூக அமைப்பு என்பது முரண்பாட்டின் தொடர்நிலையாகப் பார்க்கப்படுகிறது. முரண்பாடு சமூகக் கட்டமைப்பினுள் தவிர்க்க முடியாதபடி அமைந்துள்ள எதி ரான விருப்புக்களால் கூட்டப்படுகின்றன. இருவரும் எதிரான விருப் புக்கள் மேலாண்மை அடிநிலைக் குழுக்களிடையே உள்ள அதிகாரப் பகிர்வின் வேறுபாடுகளில் தெறிப்படைவதாகப் பார்க்கின்றனர். விருப்புக்களே இரு முரண்படு குழுக்களாகத் துருவப்படுவதாகப் பார்த்தனர்.

முரண்பாட்டைத் தொழிற்பாட்டுவாதத்தினூடு பார்த்தவர் களில் சைமலும், கொசரும் விலக்கப்பட முடியாதவர்கள்

சைமல் சமூக உறவுமுறைகள் திட்டமிட்ட உள்ளடக்கத்தினுள் நிகழ்கின்றன என்றும், இவற்றை தொடர்புடைய சமூகத் தொடர் பற்ற உயிரின இடைக்கலப்புக்களால் வகைப்படுத்தப்பட முடியும் என்றும் கூறினார். முரண்பாட்டுத்தொடர் என்பது சமூக அமைப் பின் எங்கும் உள்ள வடிவமாயினும், இது எல்லா வகையிலும் அமைப்பை உடைப்பதாகவோ சமூக மாற்றத்தை வழிநடத்து வதாகவோ இருக்காது என்றார். சமூக முழுமையைப் பாதுகாக் கவும், சில உப குழுக்களைப் பாதுகாக்கவும் முரண்பாடு முக்கிய மூல இயக்கமாக உள்ளது என்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

இங்கு முரண்பாடு என்பது ஒரு சுற்று வட்டத்தொடராகப் பார்க்கப்படுகிறது. குழு அமைப்பு முரண்பாட்டைத் தீர்மானிக்கும். அது இன்னொரு முரண்பாட்டைப் பாதிக்கும். மூன்றாவது முரண் படு குழு அதனை முடிவுக்குக் கொண்டு வரும் வரை அது தொட ரும். இங்கு முரண்பாடு என்பது தொடர்பற்ற குழுக்களுக்கு ஒருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைவுக்கான அடிப்படையை வழங்கும் ஒன்றாகப் பார்க்கப் படுகிறது. சைமல் முரண்பாட்டை விருப்புக்களின் எதிரொலிப்பாகப் பார்க்காது பகைமை இயல்பூக்கங்களில் இருந்தும் எழும்புகின்றன என்றார் சமூக முழுமையையும், உப அலகுகளையும் பேணுவதற்கு முரண்பாடுகளின் நேரான விளைவுகளைப்(**Positive Effects of Conflict**) பகுப்பாய்வதில் கூடிய அக்கறை கொண்டு ஒற்றுமைப்பாட்டையும், ஐக்கியத்தையும் அது எவ்வாறு தூண்டுகிறது என்பதனை ஆராய்ந் தார்

மாக்ஸ், டான்டோவ் ஆகிய இருவரும் முரண்பாட்டின் பிரிவு களுக்கு அதிக அழுத்தம் கொடுத்தனர். சைமல் முரண்பாட்டின் ஒருங்கிணைக்கப்பட்ட விளைவுகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கிறார்.

கொசர் சமூக உலகை வேறுபட்ட ஆனால் ஒன்றுடன் ஒன்று இடைத்தொடர்புள்ள பகுதிகளின் அமைப்பாகப் பார்த்தார். இவ்வ னைத்துச் சமூக அமைப்பும் சமமின்மைகளை, பதட்டங்களை, விருப் புக்களின் முரண்பாடுகளை வேறுபட்டதொடர்புடைய பகுதி களிடையே வெளிப்படுத்தும் கொசரின் முரண்பாட்டு நோக்கு எழுத்துக்களில் மிகவும் விரிவான வடிவமாக உள்ளது. முரண்பாட்டின் காரணிகள், அதன் செறிவு, காலம் செயற்பாடு என்பன பற்றி மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

கொசர் முரண்பாட்டின் நேர்விளைவுகளாக சமூக ஒருங்கிணை வைக் கூட்டுதல், புதிது புனைதலை ஊக்குவித்தல், படைப்பாக்கத் திறனை விருத்திசெய்தல், பகைமையை ஆராய்தல், அமைப்பின் பொருத்தப்பாடின்மைக்கான உயர் குழு மீது கவனம் செலுத்துதல் என்பவற்றை முன்வைக்கிறார்.

முரண்பாட்டுக் கோட்பாட்டின் புத்துயிர்ப்பில் சமூகப் பிரச்சனை களை விளங்கிக்கொள்ளும் அணுகுமுறைகளில் குறிப்பாக மாக்ஸிச, நவீன மாக்ஸிச விழுமியங்களுக்கும், விடுப்புக்களுக்கும் முக்கிய அழுத் தம் கொடுத்து விழுமிய முரண்பாட்டு நோக்கு விருத்தியடைந்துள் ளது. இவ் விழுமிய முரண்பாட்டு நோக்கு மீது தீவிர விமர்சனம் செலுத்தியோரில் கெனத் வெஸ்தீசிஸின் (**Kenneth Westheses**) பங் களிப்பு குறிப்பிடத்தக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளுக்கான தீர்வுகளாக அண்மைக் காலங்களில் அதிகாரப் பகிர்வீடு, அதிகாரப்பரவலாக்கல், முரண்பாட்டுத் தீர்வு முறை மாற்றுக் கருத்துக்களை மதித்தல் என்பனவும் முன்வைக்கப்படுகின்றன. ஒரு கற்கை நெறியாகவும்கூட இது இன்று வளர்ச்சி காணும். ஆர்வக் குழுக்கள் தம் நலன்காக்கப் பயன்படுத்தும் தந்திரோபாயம் இது என்ற விமர்சனங்களும் இவை தொடர்பாக முன்வைக்கப்படுவதுண்டு. எவ்வாறெனினும் முரண்பாட்டின் தீர்வு என்பது சமநீதியை அனைவருக்கும் தருவதாக அமையும் போதே அர்த்தமுள்ளதாகும்

**உசாத்துணைகள்:**


1— Das. Dr A. — Advanced Sociological Theories,
Manu Enterprises, Educational Publishers, 1992, 1993.

2— Warshay, Leon. H — The Current State of Sociological Theory; A critical Interpretation,
New York; David Makay Company, 1975.


---

அழகே! உன்னை நீயே அன்பில் காணவேண்டும்
உனக்குமுன் உள்ள கண்ணாடியில் அல்ல!

— தாகூர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் - நவீனத்துவம்
## Post - Modernism

அன்ரனி எட்மன் றிச்சேட் B.A, (Hons)

'பின்நவீனத்துவம்' என்கின்ற பதம் இன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. அதேவேளையில் ஒரு பிரச்சினையாகவும் அலசி ஆராயப்படுகின்றது. சில துறைகளில் குறிப்பாக மானிடவியல், உளவியல், சமூகவியல், பொருளாதாரம், கலை, தத்துவம் போன்றவற்றில் ஒரு கோட்பாடாகவும் பயன்படுத்தப்படுகின்றது. நவ பழமை பேண் சமூகவியலாளர்கள், திறனாய்வாளர்கள், பழமை வாத நவ மாக்சிஸ்டுகள், பெண்ணிலைவாதிகள் ஆகியோரும் பின் நவீனத்துவம் பற்றி ஆய்வுகள், விமர்சனங்கள் செய்வதில் அனைவருக்கும் பொதுவான ஈடுபாடு உண்டு. எப்படியாயினும் பெரும்பாலான ஆய்வாளர்கள் இப் பதத்தினை ஈடுபாட்டுடனும், விருப்பத்துடனும் ஆராய்ந்துள்ளனர். இதன் தத்துவார்த்த வேர்கள் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் முளைவிட்டனவாயினும், இப்பதம் 1970துகளிலேயே முக்கியத்துவத்திற்கு உட்பட்டதெனலாம். இவை ஆரம்ப காலங்களில் பின்னவீனத்துவக் கருத்துக்கள் கலைகள், கோட்பாடுகளாகவே இருந்தது ஆயினும் பிற்பட்ட காலங்களில் சமூகக் கோட்பாடுகளாக மிளிர்வதையும் பார்க்கின்றோம்.

பின் நவீனத்துவத்தில் எழுச்சியை கருத்து நிலைகளின் இறப்பு (End of Ideology) எனும் நிலையில் தொடர்புபடுத்தியும் பார்ப்பதுண்டு. டானியல் பெல் (Danial Bell), லிப்செற் (Lipset) ஆகியோர் 1950களில் கருத்து நிலையின் இறப்பு என்ற கருதுகோளை முன்மொழிந்தார். முதலாளித்துவம், சோஸலிசம், சமூக ஜனநாயகம் ஆகிய கருத்துக்கள் எல்லாம் எடுத்துரைப்புகள் எனக் கூறி, இவையனைத்தும் நடைமுறையில் சாத்தியமாகா ''நற்சமூகம்'' என்ற கருத்தாக்கத்தை முன்வைக்கின்றனவென விமர்சிக்கப்பட்டது. 1974 இல் டானியல் பெல் 'கைத்தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்ட சமூகத்தின் வருகை'' (The Coming of Post Industrial Society) என்ற நூலில் தொழில்நுட்ப சிறப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சியாளர்களின் தொழில் நுட்ப அறிவு காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தை ஆதிக்கம் செய்யும் புதிய நிலைமை சமூகத்தில் தோன்றியுள்ளதென்றும், விஞ்ஞானத்தின் வளர்ச்சி சமூக அமைப்பிலும் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். மேலும் பின் நவீனத்துவச் சிந்தனையாளர்களில் லியோதார் (J.F.Lyotard) குறிப்பிடத்தக்கவர் 1977இல் கியூபெக் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக் கிணங்க வெளியிட்ட அறிக்கை முக்கியம் பெறும் இது முன்னேறிய சமூகங்களில் காணப்படும் தற்கால அறிவுநிலை பற்றியதாகும். இவ் அறிக்கையே 'பின் நவீனத்துவ நிலைமை - அறிவு பற்றிய அறிக்கை', (The Post - Modern Condition; A Report on Knowledge) ஆகும். பின்நவீனத்துவத்தின் செல் நெறியை இந்நூல் விரிவாக ஆராயும்.

நவீனத்துவம் (Modernism) எனும் சொல் 18ம் நூற்றாண்டின் புத்தொளிக்கால சிந்தனையாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட தொன்றாகும். விஞ்ஞானம் தற்சார்பற்றதாய் இருத்தல் வேண்டுமெனவும், ஒழுக்கம், சட்டம், விஞ்ஞானம் ஆகிய துறைகள் சர்வவியாபகமான கோட்பாட்டடிப்படைகளைக் கொண்டுள்ளனவென்றும், கலை இலக்கியங்கள் சுயாதீன இயல்புடையனவெனவும், புத்தொளிகாலச் சிந்தனையாளர்கள் வாதிட்டனர். விஞ்ஞானமும், கலையும், உலகு, மனிதன் என்பன பற்றிய சிறப்பான புரிந்துணர்வை தரவல்லதாகவும் சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் பேணவல்லதாகவும் வளர்த்தெடுக்கப்படலாமென நம்பப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறானதாய் இவைகள் அமைந்தன. விஞ்ஞானத்திலும், கலையிலும் நிறுவனமயமாதல் ஆதிக்கம் பெறத் தொடங்கியது. இதனால் இவையிரண்டும் மனித வாழ்க்கையுடன் கொண்டிருந்த நெருங்கிய பிணைப்பிலிருந்து விடுபடலாயின. விஞ்ஞானம் சாதன நிலைப்பட்டதாகவும், ஒழுக்கம் நடைமுறைப்பயன் பற்றியதாகவும், கலை உணர்ச்சி வெளிப்பாடாகவும் சிறப்புத்துறையாளர்களின் பணியாக அவர்களின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் வந்தது. இதுவரை காலமும் உலகம் ஏதோ ஓர் ஒழுங்கிற்கு உட்பட்டதாய் இருக்கிறதென்ற நம்பிக்கை பொய்த்துப் போயிற்று. புலனுக்கு மெய்யானதாகத் தோன்றியதெல்லாம் தொடர்ச்சியான இயக்கமும் மாற்றமுமே என்றாயிற்று. கால்நடையாகவோ அல்லது குதிரையிலோ செல்லுவதிலும் பார்க்க மிகவேகமாக பயணிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பல்லாயிரம் அடிகளிற்கு மேல் விமானத்திலிருந்து பூமியைப்பார்க்கும் அனுபவம் மனிதனுக்கு அவனது வரலாற்றில் முதன் முதலாக ஏற்பட்டது. சமூக வாழ்க்கையிலும் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. நகரங்களில் ஏற்பட்ட குடித்தொகைப் பெருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் புதியவொரு வாழ்க்கை முறையை ஏற்படுத்தியது. ஆரவாரம் மிக்க நகரவாழ்க்கை கலை - இலக்கியங்களின் முதன்மைப் பொருளாயிற்று இந் நிலையில் நவீனத்துவப்பண்பாடு (Modern Culture) நாளாந்த வாழ்க்கை விழுமியங்களை மாசுபடுத்தி விட்டது என விமர்சனக் கோட்பாடுகள் கூறும் ''கீழ்ப்படிவின்மையும், தற்காதலும் போட்டியும் நவீனத்துவப் பண்பாடு எமக்குக் கற்பித்த சிற்றின்பவாத நிலைப்பாடுகளாகும் என டனியல் பெல் குறிப்பிடுவார். நவீனத்துவப் பண்பாட்டின் நோக்கங்களையும், இலட்சியங்களையும் பின்னமைப்பு வாதச் சிந்தனையாளர்கள் விமர்சிப்பதும் இங்கு முக்கியம் பெறும் அம்சங்களாகும்

இந்நிலையில் பின்நவீனத்துவம் பல கருத்துக்களை எமக்கு வெளிப்படுத்துகிறது சமகால மேற்கத்தைய கைத்தொழில் வாழ்க்கை முறைக்கும், வெளித்தோற்றத்திற்கும் பின்நவீனத்துவம் எதிர் வினையாக அமையும்.

அவையாவன;

1- கைத்தொழில் புரட்சி, உடலினால் மேற்கொள்ளப்படும் வேலையை ஓரே தன்மையான மூளை உழைப்பினையும், மனித சிந்தனை முயற்சியையும் மதிப்பிறக்கம் செய்தது.

2- வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் வாழ்க்கைச் சமநிலையைக் குழப்பியுள்ளது.

3- பிழையான தொழில் நுட்பத்தினால் சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள அழிவு பல பிரச்சினைகளை உருவாக்கியமை.

4- தரப்படுத்தப்பட்ட கைத்தொழில் வடிவங்கள் ஊடாக தனிநபர்கள் சுதந்திரமான செயற்பாட்டினால் பெற்ற திருப்தியானது தீவிர தனியுரிமையின் (Monopoly) பல வடிவங்களினால் இழக்கப் பட்டு விட்டது.

5- சுதந்திரமாக கற்றலை மேற்கொண்ட நிலையை மிகை நிகழ்ச்சித் திட்டம் (Over Programming) பெருமளவில் மாற்றமடையச் செய்துள்ளது. கற்றலும் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக மாறியுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்தில் பின்வரும் அம்சங்கள் இடம் பெறும்.

5 1 மக்களுக்கு தொடர்ச்சியாக கற்பிக்கப்படுகிறது

5 2 மக்கள் சமூகமயப்படுத்தப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130744

5.3- பரிசோதிக்கப்படுகின்றனர்.
5.4- இயல்பாக்கம் பெறுகின்றனர்.
5.5- திருத்தப்படுகின்றனர்.

6- அதிகாரமும், சமத்துவமின்மையும் புதிய நவீன அமைப்பில் இரு துருவங்கள் ஆகிவிட்டன

7- புதிய சர்வதேச ஏகாதிபத்தியத்தின் விளைவுகளான;

7.1- சேரிகள் (Slums)
7.2- பசி, பட்டினி (Desitution and hunger)
7.3- விசேட குடியிருப்புக்கள் (Ghettos)
7.4- தொற்றுநோய்கள் (Epidemic Diseses)
7.5- இறந்த கால மதிப்புக் குறைக்கப்படல்
7.6- இன்றும் மீதியாயிருப்பவற்றை காலத்திற்கு ஒவ்வாதன எனல்.

8- சிறப்புத்தேர்ச்சி (Specialization), தொழில்சார் வித்துவத்தன்மை (Professionalization) ஆகியவற்றில் ஏற்படும் பரிணாமங்களின் காரணமாக ஏற்படும் புதிய நிலைமை. இந் நிலைமையில் மனிதர்களின் தேவைகள் எவை, வேண்டப்படாதவை எவை என சிறப்புத் தேர்ச்சியாளர்களே தீர்மானிக்கின்றனர் இதனால் மக்களின் சுதந்திரங்களும், உரிமைகள் பற்றியும் குழப்பம் தோன்றியுள்ளது.

9- உலக மயமாக்கல் (Globalization) செயற்பாட்டினால் விளைந்தவை; பல்தேசியங்ககள், முகம் தெரியாத பணிக் குழுவினர், அபிவிருத்தி தொழிநுட்ப மாதிரிகள், புவிசார் அரசியல் தேசங்கள் என்பனவாகும். இவற்றினால், தேசங்களுக்கிடையிலான எல்லைத்தகராறுகள் அதிகரித்து வரும் குற்றச்செயல், வன்முறை, போதைப்பொருள்பாவனை, உளவியற் பிரச்சினைகள் கடன்கள், வளவிரயம், சுற்றாடல் பாதிப்பு, ஜனநாயகச் செயற்பாட்டில் ஆர்வமின்மை, மனித உறவுகளில் சுருக்கம், சுய இலாபங்கட்கு முன்னுரிமை கொடுக்கும் மனப்பக்குவம் போன்றன உருவாகியுள்ளது. இவ் விளைவுகளின் பிரதிபலிப்புக்களாக, கடந்த காலத்தைய பொது விழுமியப் பண்புகளின் சிதைவு, மேற்கத்தைய நாகரிகம் தான் உயர்வானது என்ற அழுத்தம், பொருளாதார வளர்ச்சியே விரும்பப்படும் இலக்கான தன்மை, விஞ்ஞான அறிவு, விஞ்ஞானத்தின் நியாயத்தன்மையில் கொள்ளும் ஆழ்ந்த நம்பிக்கை போன்றன உருவாகியுள்ளது.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொஸாக் (Roszak) என்னும் அறிஞர் கூறுவதுபோல "சாதாரண மனிதன் எல்லைப்படுத்தப்பட்டு விட்டான். அறியாமையை அடிப்படையாகக் கொண்ட அறிவினை சிறப்புத்தேர்ச்சியில் உருவாக்கி விட்டனர். இன்னொருவரின் சிறப்புத்தேர்ச்சியில் ஏனையோர் தங்கிவாழும் அபாயநிலை தோன்றியுள்ளது. சாதாரண மனிதனின் சிந்தனைக்கு மதிப்புயாது? பூச்சியம். சில நிபுணர்கள் அறிந்திராத விடயங்களை சாதாரண மனிதர் அறிந்து வைத்திருக்கின்றனர் சாதாரண மனிதர்கள் பாலியல் வாழ்க்கையில் அறிவுள்ளவர்கள். எதிர் காலக் கனவுகளில் இலட்சியங்களில் ஆற்றல் உள்ளவர்கள் பிள்ளைகளுடனான உறவுகளில் தேர்ச்சி உள்ளவர்கள் தேர்தல்களில் வாக்களித்தலில் தேர்ச்சி உள்ளவர்கள். ஒழுக்கங்கள், விருந்தோம்பல் பண்புகள், கலைகள், தேவைகள் ஆயகிவற்றில் பரிச்சயம் ஆனவர்கள்" என்று குறிப்பிடுகின்றார்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஏற்பட்ட அபிவிருத்தி உற்பத்தித்துறைகளில் பெரும் மாற்றங்களை ஈட்டியுள்ளன இவற்றில் 5 விளைவுகளை அறிஞர் பில் (Bill) அடையாளம் கண்டுள்ளார். அவையாவன;

அ- பண்டங்களின் உற்பத்தியில் இருந்து சேவைகளை உற்பத்தி செய்யும் நிலைமைக்கு முக்கியம் அளிப்பதில் சார்பளவான மாற்றம்.

ஆ- அரசாங்க நிறுவனங்கள், சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி, அபிவிருத்தி போன்ற துறைகளில் அதிக அக்கறை காட்டல்.

இ- தொழில்சார் நிபுணர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் ஒரு வர்க்கமாக வளர்ச்சி பெறுவதும், அவ் வர்க்கத்தின் செல்வாக்கு வளர்ச்சி அடைவதும்.

ஈ- புத்தாக்கம், கொள்கை வகுத்தல் போன்றவற்றுக்கு கோட்பாட்டு ரீதியான அறிவுக்கு முதன்மை அளித்தல்.

உ- தொழில் நுட்பவியலின் ஆதிக்கமும், தொழில் நுட்பவியல் ரீதியான கணிப்புக்களின் ஆதிக்கமும் ஆகிய விளைவுகளை இனம் காட்டுவார்

எனவே நவீனமயமாக்கம், நவீனத்துவம் ஆகியவற்றின் விளைவுகளால் ஏற்பட்ட தாக்கங்களை தவிர்ப்பதற்கான மாற்றுவழிகளாக பின்வருவனவற்றை பின்நவீனத்துவம் முன்வைக்கும். அவையாவன;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. போட்டிக்குப் பதிலாக பகுத்தறிவு வாதத்தையும், ஒத்துழைப்பையும் முதன்மைப்படுத்துதல்.

ஆ. சிறப்புத் தேர்ச்சிக்குப் பதிலாக முழுதளாவிய பார்வையை முதன்மைப்படுத்துதல்.

இ. தனிநபர் திருப்திக்குப் பதிலாக சமுதாயத்தின் திருப்திக்கு முன்னுரிமை வழங்கல்.

போன்றன மாற்றுவழிகளாக பின்நவீனத்துவவாதிகளால் கூறப்படும். கூடவே கோட்பாட்டு ரீதியாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பின்வரும் சிந்தனைகள் முன்வைக்கப்படும்.

(அ) பண்பாட்டு மாற்றம் சம்பந்தமான சிந்தனை; நவீனத்துவம் என்பது பண்பாட்டு வேற்றுமையாக்கத்தின் தொடர்ச்சியான தொழிற்பாடு. ஆனால் பின்நவீனத்துவமானது பண்பாட்டு வேற்றுமையாக்கத்தினை தடுத்து நிறுத்தும் ஒரு தொடர்ச்சியான செயற்பாடு எனலாம்.

(ஆ) நவீனத்துவம் ஒரு அணுகு முறையாகத் தொகுக்கப்பட்ட பண்பாட்டு உருவாக்கமாகும். அதேநேரம் பின்நவீனத்துவம் ஓர் அர்த்தமுள்ள பண்பாட்டு உருவாக்கம் ஆகும்.

(இ) விபரிப்பு (The Concept of Narrative) பிரதிநிதித்துவப் படுத்தல் (Representation) அமைப்பியலின்மை (De - Construction) வேற்றுமையாக்கமின்மை (De - Differentiation) அதிகாரம் (Power) ஆகிய கோட்பாடுகளை பின்நவீனத்துவ வாதிகள் பயன் படுத்தியுள்ளனர்.

இவைகள் குறித்ததொரு அறிவுத்துறை சார்ந்தவை அல்ல. அறிவுத்துறையில் வெவ்வேறுபட்ட பரப்புக்களில் இவைகள் பயன்படுத்தப்படுகின்றன. இது பல்வகையான விவகாரங்கள் தொடர்பான வினாக்களை கிளப்பியுள்ளது. புத்தாக்க கண்ணோட்டங்களை தட்டி எழுப்பியுள்ளது. சமூக விஞ்ஞானங்களில் செல்வாக்கு மிக்க எடுகோள்களை ஆய்வுக்குட்படுத்தி உள்ளது. இவைகளில் இருந்து இவற்றின் தாக்கத்தினை புரிந்து கொள்ளலாம்.

பின்நவீனத்துவ சமூகம் என்பது தொழில் நுட்ப முன்னேற்ற முடைய சமூகமாகும். இச் சமூகம் எல்லா வகையான எடுத்துரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களையும், அவற்றின் விதிப்புரைகளையும் நிராகரிக்கிறது. விஞ் ஞானமும், தொழில் நுட்பமும் தமது சாதனைகளின் நடைமுறைப் பயன்பாட்டினாலேயே அனைவரது அங்கீகாரத்தையும் பெறுகிறதே யல்லாது வேறு எத்தகைய நியாயப்படுத்தல்களையும் வேண்டி நிற்பதில்லை. இதனால் எடுத்துரைப்புக்கள் தமது முக்கியத்துவத்தை இழந்து விடுவதுடன் பகுத்தறிவின் மேலாதிக்கத்தினால் அவை படிப் படியாக அற்றுப்போய் விடுகின்றன. பின்நவீனத்துவ அறிவு எத்த கைய சித்தாந்தத்தின் வலைக்குள்ளும் அகப்படாது சுயாதீனமாக சிந்தித்து முடிவெடுக்கவும், சொல்லவும், கருத்து வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு பரஸ்பரம் அங்கீகரித்துக் கொள்ளவும், ஒத்திசை யற்ற சமூக நடத்தைகளை சகித்துக் கொள்ளவும் உதவுகிறது.

பின்நவீனத்துவ வாதிகள் சிலர் பாரம்பரிய சமூகவியல் கோட் பாடுகளை விமர்சிப்பதும் உண்டு. பின்நவீனத்துவ சமூகத்தில் ஏற் பட்டுள்ள மாற்றங்களை கவனத்திற்கெடுத்து செயற்படுத்துவதற்கு பாரம்பரிய சமூகவியல் அதிகம் உதவுவதில்லையென லியோதார் குறிப்பிடுவார். இவருடைய அபிப்பிராயப்படி இன்றுவரை சமூகவிய லானது பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் இரு காட்டு ருக்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்று தொழிற்பாட்டுவாதம் (Functionalism) இரண்டாவது முரண் பாட்டுக் கொள்கை (Conflict Theory) ஆகும். இவ் இரண்டு கோட்பாடுகளினாலும் தற்கால மனித சமூகம் பற்றிய பகுப்பாய் வினை செய்ய முடியாது. இவற்றிக்குப் பதிலாக பயன்வழி நிலைப் பாடுடைய சமூகவியற்கொள்கையொன்று லியோதாரால் பிரேரிக்க செய்யப்படும். இக் கொள்கை எத்தகைய வரலாற்றுப் பணிகளை யும் முன் மொழியாது பயன்வழி நோக்கில் யதார்த்தத்தை ஆதார மாகக் கொண்ட விதிகளின் அடிப்படையில் சமூகத்தை புரிந்து கொள்ள முயற்சிக்கின்றது. பின்நவீனத்துவம், பௌதீகவதீதம் கடந் ததும் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பிற்பட்டதும், பன்முகத் தன்மை கொண்டதும், பயன் வழிப்பட்டதுமான சமூக ஒழுங்காக லியோ தாரால் கணிப்பிடப்படும்.

ஹேகல், மாக்ஸ் ஆகியோரின் சிந்தனைகள் உட்பட சர்வவியா பகத்தன்மை கொண்டவை எனக் கூறப்படும் சகல கோட்பாடுகளிற் கும் எதிரான நிலைப்பாடுடையதாய் பின்நவீனத்துவம் காணப்படு கிறது. இயற்கை பற்றியதும், மனிதன் பற்றியதுமான உண்மை விளக்கம் என முன்வைக்கப்படும் சகல விதமான விளக்கங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நம்பிக்கையற்றுள்ளது. முழுமையின் பரிணாமம், தொழிலாளரின் விடுதலை, வர்க்க பேதமற்ற சமுதாயம் போன்ற எடுத்துரைப்புக்கள் எல்லாம் இன்று தம் சிறப்பை இழந்து விட்டதென லியோதார் வாதாடுகின்றார்.

பின்நவீனத்துவத்தில் நீதி நெறிகள், தர்மசாஸ்திரங்கள் தொடர்பான அம்சங்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. தென்னாசி புலங்களில் பின்நவீனத்துவத்தை சர்வதேச பின்னணிகளில் பார்க்க வேண்டும் என்பதும் இங்கு எம் கவனத்திற்குரியதாகும். இதன் வழி, ஏகாதிபத்திய வல்லாதிக்கத்தின் கட்புலனாகாத அம்சங்களான மேலாதிக்கம், சுரண்டல் ஆகியவற்றை விடயப் பொருட்களாக ஆக்க முடியும். இதனால் முழு மனிதத்துவத்திற்கும் சாதகமான பயன் கிட்டும் எனலாம்.

சமகால மேற்கத்தைய கைத்தொழில் சார் நவீன வாழ்கை முறைக்கு தென்னாசியாவில் இருந்து கிடைக்கும் எதிர்த்தாக்கம் ஒன்றுண்டு. அதுவே தென்னாசியாவின் பாரம்பரிய பெருமைகளின் மீது அம் மக்களுக்கு அதுவே இவர்களை ஒன்றிணைக்கும் உந்து சத்தியும், அறநெறிகளை உருவாக்கும் செல்வாக்கான காரணியும் எனலாம்.

சுருங்கக் கூறுவதாயின், பின்நவீனத்துவம் சமூக உறவுகளையும் அரசியல் நடைமுறைகளையும் கலை இலக்கியங்களையும் தனியொரு கோட்பாட்டின் அடிப்படையில் வைத்து விளக்க முயல்வதை நிராகரிக்கிறதெனலாம் இதனாலேயே லியோர்தாரும் ஏனைய பின்நவீனத்துவவாதிகளும் முழுமையான அணுகுமுறைக்குப்பதிலாக தனித்தனியாக பகுதி பகுதிகளாக பிரித்துப் பார்க்கும் அணுகுமுறையை முன்வைக்கின்றனர் எனலாம்

உசாத்துணைகள் :


1- Docker, John - Post - Modernism and Popular Culture, Cambridge University Press, 1994.

2- Ruchi Barithiya - From historicity to Post modernity; South Asian Publications, 1994.

3- Rubington Earl Martin .S Weinberg - the Study of Social Problems, Oxford University Press, 1981.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையியல்

# சமூக அளவை முறை
## Socio - Metric Method.

வினிபேபி திருச்செல்வம்
B. A. (Hons)

சமூகத் தொடர்புகளின் இயல்புகள், ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களின் மனப்பாங்குகள், பண்புகள் என்பவற்றை அளந்தறியும் ஒரு முறை சமூக அளவை முறையாகும்; பல குழுக்களுக்கு இடையில் உள்ள உறுப்பினர்கள் அல்லது ஒரு குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கிடையே காணப்படுகின்ற தொடர்புகளை, அளவு சார்ந்த விளக்க வரையறைகளுடன் கணக்கிடுகின்ற ஒரு செயல்முறை ஆகும். சிறிய முறையிலான பகுப்பாய்வும், புள்ளியியலும் இணைந்த ஒரு முறையாக இது உள்ளது.

இம்முறை 1934 ஆம் ஆண்டு ஜே.எல் மொறினோ (J.L.Moreno) என்ற உளவியல் அறிஞரால் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. We Shall Survive என்ற இவரது நூலில் இம்முறை வெளிப்படுத்தப்பட்டது. புள்ளியியல் முறைகளைப் பயன்படுத்தி அளக்க முடியாத தொடர்புகளை அறிய உளவியல் அறிஞர்களால் முதன்மையாகவும், முக்கியமானதாகவும் பயன்படுத்தப்பட்டு வந்த இம்முறையானது சமூகவியல் சார்ந்த சிக்கல்களை ஆராய்வதிலும், தற்பொழுது பயன்படுகின்றது. இம்முறைமூலம் மக்கள் பிறர்மீது கொண்டுள்ள எண்ணங்களை வெளிப்படுத்தும் இடைவினை அளவுகளை அறிய முடியும். இம்முறையானது;

I) சிறுகுழுக் கட்டமைப்புகள் (Small Group Structure)
II) ஆளுமைக் கூறுகள் (Personality Trait)
III) சமூகத் தகுதி நிலை (Social Status)

என்பவை பற்றி ஆராய துணையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்வழி, குழுக்களின் தலைமைப் பண்புகள், சிறுபான்மைக் குழுக்களின் எண்ணங்கள், மனநிலைகள், நம்பிக்கைகள் போன்ற விடயங்களை அறிய முடிகிறது. மேலும், குழுக்களில் அங்கம் வகிப்போரின் விருப்பு-வெறுப்புக்களின் மாறுபட்ட தோற்றங்களையும் அறிய முடியும்.

சமூக அளவை முறையில் தரவு திரட்டல் என்பது வினாக்கொத்து, பேட்டிமுறை அல்லது நேர்காணல் முறை, அவதானிப்பு முறை என்பவற்றைப் பின்பற்றிப் பெறப்படும். மாணவர்களை வழி நடத்தும் ஒரு ஆசிரியர், ஒரு சமூக ஆய்வாளர் போன்றோருக்கு சமூகவியல் தரவு திரட்டல் முறைகள் பயன்படும். இந்த முறையியலை எந்த இடத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் பிரயோகித்து, தேவையான தரவுகளைப் பெறமுடியும். குழுக்களுடைய பண்புகள், உறவு முறைகளை அறிகின்ற அதே நேரம்; சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகள், குளறுபடிகள், சமூகச் சிக்கல்கள் என்பவற்றையும் இனங்கண்டு, அவற்றிற்குத் தகுந்த தீர்வு காண்பதற்கும் இம் முறை பயன்படுகிறது.

நடைமுறையில் எங்கள் கல்விப்புலங்களில் சமூகஅளவை முறை பெரிதும் பயன்படுவதனைக்காணலாம். குறிப்பாக, ஒரு மாணவனின் சமூக வளர்ச்சி அல்லது சமூக அபிவிருத்தியை அறியும் தேவையில், (Social Development) சிறுவர்கள் எத்தகைய நண்பர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்? தமது செயற்பாடுகளில் யாருடன் அதிகம் பங்கு கொள்ள முற்படுகின்றனர்? போன்ற விடயங்களை அறிந்து, அதற்கேற்ப மாணவர்களின் வளர்ச்சியை நெறிப்படுத்த அல்லது வழிநடத்த சமூக அளவை முறை மிகவும் உபயோகமாக இருக்கும்.

அத்துடன் மாணவருடையேயான சமூகத் தொடர்புகள், உறவு முறைகள், கருத்து நிலைகள், முரணான சிந்தனைப் போக்குகள், ஒத்திசைவுத் தன்மைகள், மனவெழுச்சி நிலைகள் போன்றவற்றை அறிதலிலும் இம் முறை கை கொடுக்கும். இவ்விடயங்களை அறிய; அவதானிப்பு முறை, நேர்காணல் முறை, வினாக்கொத்து முறை பயன்படும். அத்தகைய ஒரு மாதிரி வினாக்கொத்து பின்வருமாறு அமையலாம்:

1) ஒரு மாணவன்; வகுப்பறையில் யாருக்கு அருகில் அமர்கிறான்?

2) யாரைப்பற்றி அதிகம் அக்கறை காட்டுகிறான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) எவருடன் சேர்ந்து செயற்படுகின்றான்?

4) விளையாட்டுக்களில் யாருடன் பங்கு கொள்கிறான்?

5) வகுப்பில் யாரில் அதிகம் பழக்கமுடையவராயிருக்கிறான்?

6) எம்மாணவன் எல்லோராலும் அதிகம் விரும்பப்படுகிறான்?

7) யாரை அதிகம் எல்லோரும் ஒதுக்குகின்றனர்?

மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு விடைகாண முற்படும்போது, குறித்த மாணவ சமூகத்திலுள்ள தலைவர்கள் (Leaders), தனித்திருப்போர் (Isolaters), சிறுகுழுக்கள் (Cliques) ஆகிய பிரிவினரை இனங்கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறாக; பொதுவான ஒரு பிரச்சினை அல்லது கொள்கை பற்றிய மக்களின் மனப்பான்மைகளை அறிந்து கொள்ளவும் இம்முறை பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இவவாறாக, ஒரு சமூகத்தின் கட்டமைவு, செயற்பாடுகள் என்பவற்றின் சமூகப் பண்புக் கூறுகளைப் பற்றி செய்தி சேகரிக்கின்ற ஒரு செயற்பாட்டு முறையாக, சமூகத்தில் உள்ள சிக்கல்களை அறிந்து, அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை, திட்டங்களை உருவாக்குவதற்கும், அவை தொடர்பான தரவுகளைச் சேகரிக்கவும் இம்முறை பயன்படுத்தப்படுகின்றது.

இம்முறையினுடைய வெற்றி என்பது இரு விடயங்களில் தங்கியுள்ளது.

1) ஆய்வில் பயன்படுத்தப்படும் வினாக்களும், கூற்றுக்களும், தெளிவாகவும், விளக்கமாகவும், எளிமையாகவும் அமைதல்.

2) விடையளிப்போரின் முழு ஒத்துழைப்பு

உசாத்துணைகள்:


1) WrightsMan Selltiz & Cooks; Research Methods in Social Relations.

2) Louise H. Kidder: Published for the Society for the Psychological Study of Social Issues (4th Edition)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பண்பாட்டு நோக்கில் சமயம்
# Religion-A Socio Cultural Perspective

ச. கிருபானந்தன். B.A, (Hons)

சமயம் பற்றிய பாரம்பரிய அணுகுமுறைகளில் கோட்பாட்டு ரீதியாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏதுவும் ஏற்படவில்லை என லாம். அங்கு மூதாதையர் கண்டு வைத்திருந்த கருத்துக்கள் அப்ப டியே கடைப்பிடிக்கப்பட்டு வந்திருப்பதனைக் காணலாம். பின்னர் தான் சமயத்தின் மானிடவியல் ஆய்வுகள் பிறந்தன அவர்களுடைய தரமான கோட்பாடுகளின் உள்ளும் சிறிய சிறிய வேறுபாடுகள் காணப் படவே செய்தன. இது ஒரு வகைச் சந்தேக நிலையைத் தோற்றுவித் தது. இதன் விளைவாக இன்று வரை மானிடவியல் ஆய்வுகள் தொடர் கின்றன மரபு ரீதியான அணுகுமுறையிலிருந்து நவீன அணுகுவரை ஆய்வு செய்யப்படும் பொருள் ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் ஆய்வுப்பார்வை, ஆய்வுமுறை என்பவற்றிலேதான் வேறுபாடு காணப் படுகின்றது.

சமயம் பற்றிய அணுகுமுறைகளின் போக்குகளைப் பார்க்கின்ற போது, இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சமயம் பற்றி மானிட வியலாளர்களால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் அதற்கு முன் இருந்த கருத்து நிலைகளில் இருந்து வேறுபட்டன. புதுமையான தன்மையி னைப் பெற்றன. லியோ ஸ்ரெயின் பேர்க் (Leo Stein berg, 1953) என் பவர் கூறியது போல மரபு ரீதியாக வழி வழியே இருந்து வருகின்ற சிந்தனைகளை வெறுமனே மெருகூட்டுவதனால் மட்டும் புதிய கருத் தினைக்கண்டு விட்டோம் என்று சொல்வதிலே பயன் எதுவும் இல்லை. முற்றிலும் புரட்சியான பகுத்தறிவு ரீதியான கருத்துக்களை உருவாக் குவது அவசியம். இல்லாவிட்டால் இத்துறையிலே முன்னேறவே முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் பற்றிய அணுகுமுறையிலே புதிய திருப்பத்தினை அல்லது புரட்சியினை ஏற்படுத்தியவர்களுள் Durkheim, Weber, Freud, Malinowski போன்ற பலருக்கும் முக்கிய பங்கு உண்டு. Durkheim இனுடைய விவாதங்களிலே பெருமளவில் தெய்வம் சார்ந்த புனிதத் தன்மை (Sacred) புனிதமின்மை (Profane), இயற்கை, கூட்டுச்செயற் பாடு, கூட்டு மனப்பாங்கு என்பவற்றுக்கு முக்கியமாக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. வெபரினுடைய முக்கிய பங்களிப்பாக ஒத்து ணர்தல் ஆய்வு முறை (Vestehendan Methodolgy) இணை அறிமுகப் படுத்தியதனைக் குறிப்பிடலாம். Freud இன் முக்கிய பங்களிப்பாக தனி நபர் காரணங்களையும் கூட்டுக் காரணங்களையும் சமாந்தரமாகப் பார்த்தமையினைக் குறிப்பிடலாம்.

மலினோவஸ்கியினுடைய முக்கிய பங்களிப்பாக, பொதுவான சமூக அர்த்தங்களுக்கும் சமயத்திற்கும் இடையே காணப்படுகின்ற ஒற் றுமை வேற்றுமைகளைத் துருவித்துருவி ஆராய்ந்திருப்பதனைக் குறிப் பிடலாம்.

இன்று சமயம்பற்றிய பகுப்பாய்வு என்பது ஒரு பண்பாட்டுப் பரி மாணமாகப் பார்க்கப்படுகின்றது. Parsons, Shils (1951) போன்றவர் கள் குறிப்பிடுவதுபோன்று ஒரு பண்பாட்டினுடைய நிலைப்பாட்டை யும் நகர்வுப் போக்கினையும் அப் பண்பாட்டுச் சமூகத்தின் சமய நிலைப் பாடு சமயப்போக்குகள் என்பவற்றைக்கொண்டு அறிய முடியும். சம யம் என்பது மனிதபண்பாட்டு வரலாற்றின் ஆரம்பம் முதலே இருந்து வந்துள்ளது. உலகின் எல்லாப்பகுதிகளிலும் ஏதோ ஒரு வகையில் மத நம்பிக்கைகள் இருந்துள்ளன. சமயத்தின் பெயரால் நன்மைகளும் ஏற் பட்டுள்ளன, தீமைகளும் ஏற்பட்டுள்ளன. இன்று நாம் நவீன கோட் பாடுகள் மிகவும் பரந்துள்ள ஒரு வெற்றியடைந்த நிலையில் வாழ்கின் றோம். எனினும் மேலே குறிப்பிடப்பட்ட மானிடவியலாளர்களின் கோட்பாடுகளைச் சூழ்ந்தே இன்றைய பல கோட்பாடுகளும் உருவாகி யுள்ளன என்பதனை மறந்துவிடமுடியாது.

சமயக் குறியீடுகள் அர்த்தங்களை உள்ளடக்கியிருப்பதன் மூலம் வரலாற்றினூடாக பண்பாட்டுக்கோலங்களை நடத்தி வருகின்றன. இவை மக்களிடையே செய்திப்பரிமாற்றத்தை நிகழ்த்துவதற்கான கரு வியாகவும் பயன்படுகின்றது. இச் சமயக் குறியீடுகள் மரபுவழியான எண்ணக்கருக்களுக்கு அழுத்தங்கொடுக்கின்ற வகையில் செயற்பட்டு வருகின்றன என இனங்காணப்படினும் இதன்மூலம் வாழ்க்கையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமானதாக இருக்கின்ற மனப்பாங்குகளையும் அவர்களின் அறிவின் அபிவிருத்திப் போக்குப்பற்றியும், அசைவுப் போக்குகள் பற்றியும் அறியமுடியும்.

சமயச் சடங்குகள், காரணங்கள், வழிபாட்டு முறைகள் போன்ற சமய நிகழ்வுகளிலே இருக்கின்ற அறிகுறிகள் அல்லது அடையாளங்கள் (Sign), குறியீடுகள் (simbol), பொருள் தெரிவித்தல் (denotation), குறிப்புகள் (Signification), செய்திப் பரிமாற்றம் (Communication) போன்றவற்றிலே எமக்கான அறிவார்ந்த தேவைப் பொருள்கள் பல சேமிக்கப்பட்டுள்ளன என Langer (1962) குறிப்பிடுவதுபோல சமயத்தின் கற்கை நெறியுடன் தொடர்புடைய பகுதிகளை அவற்றுக்கே உரிய சிறப்புத் தன்மைகளை அறிகின்ற வகையிலே சமூக மானிடவியலில் பல சந்தர்ப்பங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறியீடு (symbol) என்ற பதம் மிகவும் விரிவான பொருளைக் கொண்டது. இதுபற்றி விளங்கவேண்டுமாயின் முதலில் குறியீடுகள் என்பதன் சரியான அர்த்தத்தினைக் கண்டுகொள்ள வேண்டும் இது இலகுவாகச் செய்யக்கூடிய விடையமல்ல. பண்பாட்டுப் பற்று விருப்பு மற்றும் வேறுபட்ட பண்பாட்டு வகை பற்றிய விடையங்களையும் குறியீடுகளை இனங் காண்பதன் மூலம் அறிந்துகொள்ளலாம். குறியீடுகள் ஒரேநேரத்திலேயே பலவிடயங்களைக் காட்டுகின்றன. நாம் சாதாரண வாழ்க்கையிலே பல குறியீடுகளை பயன்படுத்துகின்றோம். இவற்றில் சில வெளிப்படையான குறியீடுகளாக இருக்கும் இன்னும் சில மறைமுகமான (oblique), உருவகமான (Figurative), பொருள்களைக் கொண்டிருக்கும். லங்கேர் (Langer) என்பவர் குறிப்பிடுவதுபோல குறியீடுகள் பல விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பல செயல்கள் நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தரங்களை மதிப்பீடு செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. உறவு முறைகளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இக்குறியீடுகள் எண்ணக் கரு என்ற வாகனத்தின் மீது பயணம் செய்கின்றன எனக் கூறலாம். எண்ணக் கருக்கள் குறியீடுகளினாலே ஏற்படுகின்ற அர்த்தங்களாகும். எனவே சமயத்தின் சமூகவியலை விளங்குவதற்கு அதன் குறியீடுகள், எண்ணக்கருக்கள் என்பவற்றைப் பின்பற்றி அணுகப்படவேண்டும். இங்கு நிலையான அறியத்தக்க வடிவங்களின் அனுபவத்திலிருந்து சூக்குமமான விடயங்களைக் குறியீட்டால் அறியமுடிகின்றது. சமூகத்தின் பண்பாட்டுச் செயற்பாடு பற்றிய விடயத்தை எடுத்து நோக்குகின்றபோது அச் சமூகத்தின் புற மெய்ம்மை, உள்ளடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(positivecontent) என்பன அச் சமூக செயற்பாட்டின்படி குடியீட்டு வடிவங்களுடன் இணைந்திருப்பதனைக் காணலாம்.

சமூக நிகழ்வுகளின் குறியீட்டுப் பரிமாணங்கள் அதிகமாக திட்ட வட்டமான உண்மைகளுடன் எப்பொழுதும் நேரடியாக ஒத்திருக்கும் என்பதில்லை, உளவியல் ரீதியான செயற்பாடுகளினால் இக் குறியீட்டு வடிவங்கள் மாற்றி உணரப்படலாம். அல்லது பல்வேறு அணுகு முறைகளால் மக்களால் உணரப்படலாம். எனவே இது ஒரு தெளி வில்லாத சூக்குமவடிவில் இருக்கும். மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் பல விடயங்கள் உளவியல் ரீதியாகவும் நடக்கக் கூடும், சமூக ரீதியாகவும் நிகழக்கூடும், பண்பாட்டு உள் இணைப் புக்களாலும் நிகழக்கூடும். இதில் பண்பாட்டு உள் இணைப் புக்களால் நிகழ்தல் என்பது மிகவும் ஆழமான விடயமாக இருக்கின் றது. இதனுள்ளே இருக்கின்ற பரம்பரையாக வருகின்ற உரிமைத் தன்மை என்பது பொதுவாக ஏனைய சமூக உளவியல் தன்மைகளி லிருந்து நுணுக்கமான வேறுபாட்டைக் கொண்டுள்ளது என Parson, Shils போன்றவர்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்கள். நீண்டகால மாகவே தொடர்ந்துவருகின்ற பண்பாட்டுமாதிரிகளின் குறியீடுகள் மிகவும் சிக்கலான தொர்புகளைக் கொண்டிருக்கும். தகவல்களைப் பெறுவதற்காக அந்த மக்களுடைய சிக்கலான விழுமிய முறைகளைப் பார்க்கவேண்டுமென்றால் முதலில் முக்கியமாக அவர்களது மரபின் முக்கிய கூறுகளை அறிந்து கொள்ளவேண்டும் என்பது Geertz போன் றோரால் வலியுறுத்தப்படுகின்றது. இங்கு சிக்கல் தன்மை என்பத னால் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து வருகின்ற தன்மைகள் மட்டும் கருத்திற் கொள்ளப்படவில்லை. அவ்வப்போது நிகழுகின்ற உளவியல், சமூக, அரசியல் பண்பாட்டு மாற்றங்களும், சிலவற்றின் மீதான தனி நபர் விருப்பமும் போன்ற பல்வேறு காரணிகளின் செல்வாக்குகள் அவ் வப்போது புகுவதன் மூலம் பண்பாட்டு மாதிரிகள் மிகவும் சிக்கலாகி விடுகின்றன. ஒருவனது வாழ்க்கைக் காலத்திற்கு முன்பிருந்த ஒரு உயிரி யல் ரீதியான உண்மையினை அறியமுடியும் (உதாரணம்: எலும்புக் கூடுகளைப் பரிசோதித்தல்) ஆனால் தொடர்ந்து இயங்கிக்கொண்டி ருக்கின்ற பண்பாட்டு மூலங்களை அறிவதற்கு சிறப்பான முறையில் ஆய்வுகள் செய்யப்படவேண்டும். பண்பாட்டு மூலங்கள் ஒருவரது மர ணத்துடன் நின்றுவிடுவதில்லை, அவை அடுத்த சந்ததிக்கும் கடத்தப் படுகின்றன. இவ்வாறு கடத்தப்படும் போது அவற்றிலே பல மாற் றங்கள் இருக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூக மக்களின் அல்லது குழுக்களின் புனிதப் பொருட்களினுடைய குறியீட்டுத் தொழிற்பாடுகளை அறிவதன் மூலம் அம் மக்களுடைய வாழ்க்கைத்தரம், அவர்களின் ஒழுக்க முறைகள், தொனி (Tone), மக்களுடைய தனிப்பண்புகள் (Ethos) என்பவற்றைச் சேர்த்துத் தொகுக்கமுடியும். மேலும் குறியீடுகள் மூலம் அம் மக்களுடைய ஒழுக்கம், அழகியற்பாணி (aesthetic style) மனநிலை (mood), அவர்களின் உலகம் மீதான பார்வை அவர்களின் மனப் படங்கள் என்பன போன்ற அவர்களின் உண்மையான சிந்தனைப் போக்குகளை அறிய உதவுகின்றன.

சமயத்தின் நம்பிக்கைகளும், செயற்பாடுகளும் ஒரு குழுவினுடைய தனிப் பண்புகளைக் காட்டுகின்றன, இதனை மறுபக்கமாகக் கூறினால் ஒரு குழுவினுடைய தனிப்பண்பினை சமய நம்பிக்கைகள், செயற்பாடுகள் என்பன காட்டி நிற்கின்றன. உண்மையில் உலகியல் ரீதியான விபரிப்புக்கள், நடவடிக்கைகளின் உண்மைநிலை, வாழ்க்கைகள் கருத்தியல் ரீதியாக இணைக்கப்பட்டு ஒரு வாழ்க்கைப் பாதையைக் கொடுக்கின்ற அதே வேளை இவை உலக பார்வையை ஒரு உணர்வு ரீதியாக நம்பச் செய்கின்றன. இவ்வாறாக உலகியல் வாழ்வுடனான இதன் எதிர் வடிவமும் பரஸ்பர உறுதிப்பாடும் என இரண்டு அடிப்படை விளைவுகளை இவை கொண்டிருக்கின்றன.

முன்னோர் வழிபாடு சமூகத்திலே மூத்தோரது அதிகாரம் இருந்ததனை விளக்குகின்ற ஒரு பிரதிபலிப்பாக அமையலாம். சமூகத்தில் ஒருவரது பாலியல் முதிர்ச்சியடைந்த நிலையினை, அல்லது தகுதி நிலையினை இனங்காட்டுவதாக சடங்குகள், கிரியைகள் என்பன பல் வேறு சமூகங்களிலும் நிகழ்த்தப்பட்டுள்ளன - நிகழ்த்தப்படுகின்றன. இக்கிரியைகள் அல்லது சடங்குகளே ஒவ்வொருவரினதும் தகுதி நிலையினை அவர்களுக்கு அறிவித்து அதற்கேற்ப சேர்த்துக் கொள்ளுகின்றது.

இவற்றிலே வெளிப்படையாக காணப்படுகின்ற ஒழுக்கங்கள், அழகியல் ரீதியான விருப்பங்கள் என்பன குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்பின் உள்ளீடாக இருக்கின்ற வாழ்க்கை நிபந்தனைகள், விதிமுறைகள், ஏற்புடைமைகள் என்பவற்றினாலே உருவாக்கப்படுகின்றன. ஆனால் நடைமுறை நிலையில் சில விடயங்களில் சமூகத்திற்குச் சமூகம் மாற்றம் ஏற்படுவதில்லை. இதற்கு உதாரணமாக ஒழுக்கம் பற்றிய உணர்வு, பணிந்து வேண்டுகின்றதன்மை போன்ற

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைக் குறிப்பிடலாம். சமயக் குறியீட்டு வடிவங்கள் சமூகத்தின் ஏனைய பகுதிகளின் மீது அதிகாரத்தினைச் செலுத்துவதோடு வலு வாகவும் செயற்படுகின்றது. குறிப்பாக இயற்கை அதீதத்திற்கும் வாழ்க்கையின் பாணிக்கும் இடையே ஒரு ஒப்புமையைக் கொடுக்கின்றது.

பல வகைப் பண்புகள் நிறைந்த அற்புதங்கள், ஐதீகக் கதைகள் என்பன போன்ற தீவிர விபரிப்புக்கள் எல்லாவற்றையும் சிறிய கருத்து நிலைகளாக மட்டும் நாம் கொண்டுவிட முடியாது. இவை கூட அச் சமூகச் செயற்பாட்டுக்கான ஆதாரமாய்ச் செயற்படமுடியும். சமய ஒழுங்குகள் பற்றி எழுதப்பட்ட சமய நூல்களின் படி அல்லது வழக்கத்தின் படி தினமும், அல்லது வாரம் தோறும், அல்லது ஆண்டு தோறும், அல்லது சில மணிநேரத்திற்கு ஒருதடவை எனச் செய்யப் படுகின்ற கிரியைகள் பண்பாட்டை மீள வலியுறுத்தி உறுதி செய்கின்றன.

பண்பாடு வழி வழியாகப் பரிமாறப்படுகின்றது எனக் கூறும் போது ஒரு சமூக வட்டத்தினுள் வழிவழியாக மரபுரீதியாக கொடுக்கப்பட்டவை ஒரு பகுதியாக இருக்கின்றன. மேலும் அரசியல் ரீதியான தொடர்பு, மரபுகளினால் ஏற்பட்ட பல பண்புகள், ஊழியப் பரிமாற்றங்களின் விளைவுகள், சிறுவர்கள் சமூகமயமாதல் போன்ற பலவற்றுடன் தொடர்பு பட்டது. எல்லாப் பண்புகளையும் உள்ளடக்கக் கூடிய ஒரு வரைவிலக்கணத்தை கண்டு கொள்வது கடினமானது. எனினும் பண்பாட்டுப் பரிமாற்றத்தில் சமயத்தின் பங்கினைப் பார்க்கின்றபோது அது சமூகத்தின் செயற்பாடுகளுக்கான ஒரு குறியீட்டு முறைமையாக மனிதர்களில் நீண்டதாக நீடிக்கின்ற மன நிலைகள், உந்தல்கள் (Motivation), மாற்றங்கள் என்பவற்றினது வலுவான ஒரு நிலையமாக விளங்குகின்றது. சமயம் சமூக உண்மைகளில் இருந்து வெளிப்படுவதோடு அது எண்ணக்கருக்களால் சூழப்பட்டது. எனவே சமயக் குறியீடுகள் மனநிலைகளினதும், உந்தல்களினதும் முழு உண்மைகளைக் காட்டுகின்றது.

பண்பாட்டுக் கூட்டங்களின் மாதிரிகள் குறியீட்டுக் கூட்டங்களால் விளங்கப்படுகின்றன. இக் குறியீட்டுக் கூட்ட ஒழுங்கமைப்புக்கள் அச் சமூக மக்கள் ஒருவருடன் ஒருவர் கொள்ளுகின்ற உறவு மாதிரிகளையும், அபிலாசைகளையும், அவை பெறப்படும் முறைகளையும் உணர்த்தி நிற்கும். மேலும் உடலியல், உயிரியக்கவியல், சமூக உளவியல் தன்மைகளையும் சமாந்தரமாகக் காட்டும். மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலச் செய்தல் அல்லது பார்த்துச் செய்தல் (Imitating or Simulating), என்பவற்றையும் அது காட்டுகின்றது. இங்கு மாதிரி (Model) என்பதும் முக்கியம் பெறுகின்றது. மாதிரி என்பதற்கு இரண்டு வகையில் அர்த்தம் கொடுக்கப்படும்;

1) ஒரு கருத்தை ஏற்படுத்துவது
2) ஒரு கருத்தால் ஏற்படுவது

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதும் அவர்களுடைய பயன்பாட்டிலுள்ள பாவனைகளும் இதிலே முக்கியம் பெறும்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்றபோது மனித அனுபவங்களிலே ஆழமானதாக வேரூன்றி இருக்கின்ற ஐதீகங்கள், புனை கதைகள் அற்புதங்கள், குறியீடுகள், குறியீட்டுச் சின்னங்கள், என்பவற்றை உலக முழுமை ஒழுங்கிலே பார்க்கின்றபோது அங்கு குறிக்கப்பட்ட உலக ஒழுங்கு பேணும் தன்மையும், கற்பனைத் திட்டங்களும் சமாந்தரமாகத் தொழிற்படுவதன் மூலம் மனித செயற்பாடுகளுக்கு சமயம் ஒரு ஆதார சுருதியாக இருப்பதோடு சமூக பண்பாட்டு ஒழுங்கு நிலையின் மையமாகவும் விளங்குகின்றது.

**உசாத்துணைகள்:**

Durkheim, Emile - The Elementary forms of Religious Life, the Free Press, New York, 1965.

Malinowski, B - Magic, Science and Religion, Boston, Beacon Press, 1948.

Wallace Antony. F. C; Religion, An Anthropological View, New York, 1965.

Geertz. C - Ideology as a Cultural System, New York, 1964.

பக்தவத்சல பாரதி சீ, பண்பாட்டு மானிடவியல் சென்னை, 1990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை இறையியல் - ஒரு அறிமுகம்
## Liberation Theology - An Introduction

டொறின் அருளானந்தம்

இறையியலானது காலத்தின் வெளிப்பாடாய், மனித வரலாறு, விஞ்ஞான முன்னேற்றங்கள், சமுதாய மறுமலர்ச்சி நிகழ்வுகள், தனி மனித ஆளுமை வளர்ச்சி, அரசியல் அமைப்புகள் போன்றவற்றை பிரதிபலிப்பதாய் இன்று வளர்ந்து வருகிறது. இறையியல் இன்றைய சூழ்நிலையையும் விசுவாசத்தையும் மோதவிட்டுப்பார்க்கிறது. அப் போது கிறிஸ்தவ விசுவாசம் இன்றைய சூழ்நிலையுடன் கலந்து ஒரு புதுப்பொருளோடு வெளிவருகிறது. கிறிஸ்தவ விசுவாசம் மாறுபட்ட சூழ்நிலைகளுடன் கலக்கும் போது அந்தந்த நாட்டிற்குரிய இறையி யல் உருவாகிறது. அதனால்தான் இன்று விடுதலை பற்றிய இறையியல் அரசியல் பற்றிய இறையியல், வன்முறை பற்றிய இறையியல் என பல இறையியற்கொள்கைகள் எழுந்துள்ளன. கி. பி. 12ம் நூற்றாண்டில் இருந்து இறையியல் ஒரு விஞ்ஞானமாக வளர ஆரம்பித்தது.

''இறையியல் ஒரு விஞ்ஞானம் மட்டுமல்ல, அது மனிதனை கடவுளோடு இணைக்கும் அன்பிலிருந்து பிறக்கும் ஒரு ஞானமாகும்'' என்கிறார் தோமஸ் அக்கியூனாஸ் (Thomas Acquinas) எனும் இறை யியலாளர்.

''இறைவன் மனிதனானபடியால் மனிதனே எல்லாவற்றிற்கும் அளவீடு'' என்கிறார் கார்ல் பார்த் (Karl Barth) எனும் சமூகவிய லாளர். எவ்வாறெனினும் உலகத்திற்கு அப்பாற்பட்ட சக்திகளையே ஆராய்ந்து வந்த இறையியலில் தற்போது பெரும் மாற்றங்கள் ஏற் பட்டு வருகின்றன.

இந்த வகையில் கி. பி. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மார்க் சியம் இறையியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம். தனி மனித முதலாளித்துவ அடிமைத்தனத்திலே சிக்குண்டு தவித்த வேளையில் மறையானது அவர்களுக்கு விடுதலை வாழ்வு வழங்கத் தவறிவிட்டது என்கிறார் கார்ல் மார்க்ஸ். இவ்வுலகில் நிம்மதியிழந்து கவலைக்கடலில் மூழ்கியிருந்த ஏழை மக்களுக்கு மறு உலகில் நிம்மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும் என்று மதம் பசாங்கு செய்து, அநியாயங்களையும் அட்டூழியங்களையும் எதிர்த்து வாழாமல், ஏற்று வாழவேண்டும் என்று போதிக்கின்றது; அநீதிகளை, ஊழல்களை உள்ளவாறே மத நிறுவனங்கள் பேணிப்பாதுகாத்து வருகின்றன என மத அமைப்புகளை கார்ல் மார்க்ஸ் வன்மையாகக் கண்டிக்கிறார். கார்ல் மார்க்ஸினதும் ஏனைய சில மெய்யியலாளர்களினதும் விமர்சனங்களின் வழி விளைந்ததுதான் விடுதலை இறையியல் எனலாம். இறையியல் நவீனப்படுத்தப்பட வேண்டும். இன்றைய மனிதனின் ஏக்கங்களுக்கு சமுதாய தாக்கங்களுக்கு பதிலளிப்பதாய் விளக்கந்தருவதாய் அமையும் போதுதான் அது விடுதலை அன்பை வளர்ப்பதாய், புதிய நீதியான சமத்துவமான சகோதரத்துவம் மிக்க சமுதாயத்தினை காண உதவும் என்பது விடுதலை இறையியலின் அடிப்படையாகும்.

விடுதலை இறையியலானது, ஒடுக்கப்பட்டு, வறுமை, புறக்கணிப்பு போன்றவற்றால் பாதிப்படைந்த லத்தீன் அமெரிக்காவை மையமாகக் கொண்டு பிறந்தது. கி. பி. 18ம் 19ம நூற்றாண்டுகளில் சமுதாய ஈடுபாடுகளில், மறுமலர்ச்சி செயற்பாடுகளில் பின்தங்கியதாகவும் பொருளாதாரத்தில் வலிமை மிக்க குழுக்களோடு ஒன்றிணைந்து செயற்பட்டதோடு, அடிமைப்படுத்துகின்ற, ஆதிக்கம் செலுத்துகின்ற தீய சக்திகளை எதிர்த்து வெற்றி கொள்ள தவறிவிட்டது. இச் சூழ்நிலையில் தான் பௌலோ பிறேய்றோ **(Paulo Freiro)** விடுதலை இறையியலை அடக்கப்பட்டவர்களின் ஒரு கற்கை நெறியாகவே உருவாக்கினார்.

இந்த வகையில் லத்தீன் அமெரிக்கத் திருச்சபையானது மறுமலர்ச்சியடைய ஆரம்பித்தது. மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுக்காத முதலாளித்துவ அமைப்பினை முற்றாக விட்டுவிட்டு, மனிதனை மனிதன் சுரண்டி வாழ்வதிலிருந்து விடுதலை பெற்றுக்கொடுக்கக்கூடிய சோஷலிச அமைப்பினை கட்டி எழுப்புவதில் மக்கள் தீவிரமானார்கள். பணக்கார திருச்சபை என்ற போர்வையை கழற்றிவிட்டு ஏழ்மைத் திருச்சபையாக மாறுதலின் மூலமாக ஏழைகளோடு ஒன்றித்து நிறைவில்லாத அமைப்புக்களை திருத்துவதன் மூலமாக விடுதலைப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் விடுதலை இறையியலாளரின் கருத்தானது

இங்கு விடுதலை எனும் பதம் மனிதனின் சமூக அமைப்பு ரீதியான விடுதலையோடு உளவியல் ரீதியான விடுதலையையும் குறிக்கின்றது. விடுதலையை நோக்கி போய்க்கொண்டிருக்கும் மனிதன் உரிமையுணர்வு, கடமையுணர்வு, பண்பாட்டுணர்வு கொண்டவனாக இருக்கவேண்டும். அதுவே முழுமையான விடுதலையை அவனுக்கு ஈட்டித்தரும் என விடுதலைக்கு விரிவான ஒரு கருத்தியலை விடுதலை இறையியல் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை பற்றிய இறையியல் பல வகைகளிலே நம்மை சிந்திக்க வைக்கிறது. இன்றைய உலகில் திருச்சபையின் பணி என்ன என்ற கேள்விகளை கேட்டு அவற்றிலிருந்து விடைதேட வைக்கிறது. இந்த வகையில் எமது புலங்களில் காணப்படும் சாதி வேறுபாடு, இன வேறுபாடு, பால் வேறுபாடு போன்ற பிரச்சனைகளுக்கு அது தீர்வு காட்டுகின்றது.

அனைத்து வகையான அடிமைத் தனங்கள், பாகுபாடுகளுக்கெதிராக விழிப்புணர்வினை விடுதலை இறையியல் எமக்குத் தருகின்றது. இன, மத, பால் ரீதியான பாகுபாடுகள் எல்லாம் பாவத்தையே வெளிப்படுத்துவன; இவற்றில் இருந்து மனிதனை மீட்கும் ரட்சகரே இயேசு என்ற கருத்தியல் மக்கள் மனங்களில் முதன்மைப்படுத்தப்படுகிறது

எளியோருக்கு நற்செய்தி சொல்லவும்,
சிறைப்பட்டோர் விடுதலையடைவர்,
குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும்,
ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும்
ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும்
அவர் என்னை அனுப்பினார் (லூக் 4:18-15)

நீதியான சமூகத்தை நிர்மாணிப்பதே இயேசு வருகையின் அர்த்தமாகின்றது. அதுவே இயேசுவை வழிபடுபவர்களின் வாழ்வுமாக வேண்டும் இச்சிந்தனை இன்றைய எமது மத அமைப்புக்களிடையே தவிர்க்கமுடியாதபடி வேர்விடத் தொடங்கியுள்ளமையை காணமுடிகிறது

உத்தியோக பூர்வமாக விடுதலை இறையியலை அங்கீகரிக்காத போதிலும் நடைமுறை செயற்பாட்டில் ஒடுக்கப்பட்டவர்க்கு குரல் கொடுப்பதிலும், அவர்களை தூக்கிவிடுவதிலும் எங்கள் புலங்களில் திருச்சபையின் ஈடுபாடு இன்று பலமுனைகளிலும் வெளிப்படக் காணலாம். மாறும் சமூக சூழல் நிலைமைகளில் சமயமும் தவிர்க்க முடியாதபடி மாற்றங்காண்பதனை இது புலப்படுத்தும்.

## உசாத்துணைகள் :


1. Kupuswamy - 'Elements of social Psychology', Konarck Publishers, Pvt, Ltd, 1991.
2. பற்றிக், வின்சென்ட்; விடுதலை இறையியல்; நான் வெளியீடு 1986
3. Rev. Fr. யேசுதாசன்; இன்றைய உலகில் திருச்சபை; மறைக் கல்வி நடுநிலையம் 1985
4. லூக்கா - புதியஏற்பாடு: 1997.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடலின் சமூகவியல்

# யாழ்ப்பாண சமுதாயத்தில் வீடியோ கலாசாரம்
# Video Culture In Jaffna Society

தி. கிருஷ்ணகுமார்

யாழ்ப்பாண சமுதாயத்தில் சாதி, மதம், பிரதேசம் என்ற வகையில் எல்லா மட்டங்களிலும் வீடியோவின் செல்வாக்கு இனங் காணப்பட்டுள்ளது. புதிதுபுதிதாக அறிமுகம் ஆகும் பொருட்களை உபயோகிப்பதன் மூலம் தமது சமூக நிலையை உயர்த்திக் கொள்ள முடியும் என்ற ஆழமாக வேரூன்றிய சிந்தனையின் அடித்தளத்திலிருந்தே வீடியோ தொடர்பான உளப்பாங்கும் உருவாக்கப்பட்டுள்ளது எனலாம். ஒரு சமூகத்தின் அல்லது மக்கள் கூட்டத்தின் அல்லது நாட்டின் நலன், அபிவிருத்தி என்ற நோக்கில் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த 20 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் எமது சமூகத்தைப் பொறுத்தவரை வீடியோவை ஒரு பயனான வெகுசனத் தொடர்புச் சாதனம் என்று ஏற்றுக் கொள்வதில் பெரும் இடர்பாடு ஏற்படுகிறது.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை வெகுசனத் தொடர்புச் சாதனங்களாக மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ளும் பலரும் வீடியோ தொடர்பான செயற்பாடுகளை ஒரு வெகுசனத் தொடர்புச் சாதனம் என்ற வகையில் பிரித்தறிவதில் சிரமப்படுகிறார்கள். இந்நிலை வீடியோவுக்கு மட்டும் உரியதாக உள்ள இடர்பாடன்று. இதே பிரச்சினையைச் சினிமாத்துறையும் எதிர்நோக்கியிருக்கிறது. சினிமா, வீடியோ என்ற இரண்டையும் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் என்ற தன்மையில் வைத்து நோக்குவதற்கப்பால் அவற்றைப் பொழுது போக்குச் சாதனங்கள் என்று மட்டுந்தான் பலரும் அறிந்து வைத்துள்ளார்கள். பத்திரிகை, வானொலி, தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி என்பவற்றைப் பொழுது போக்குச் சாதனங்களாகப் பயன் படுத்தினாலும் அவற்றை வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் என்று ஏற்றுக் கொள்வதில் எல்லா மட்டங்களிலும் உடன்பாடு உண்டு.

மேலும், வீடியோவை வெகுசனத் தொடர்புச் சாதனம் என்று ஏற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிக்கல் வீடியோவால் வந்ததன்று. அது சினிமாவால் வந்த ஒரு பிரச்சினை ஆகும். ஏலவே தென்னிந்தியச் சினிமாப் படங்களின் தாராளமான இறக்குமதியால் மலிந்துகிடத்த யாழ்ப்பாண மக்களின் இரசனை உணர்வு, புதிய புதிய விடயங்களைத் தெரிந்துகொள்வதற்குப் பதிலாகத் தென்னிந்தியப் பண்பாடு கலாசாரம் என்பவற்றை அறிந்து கொள்வதோடு அடங்கிவிட்டது. தென்னிந்தியப் பண்பாடு கலாச்சாரம் என்பவை யாழ்ப்பாண சமுதாயத்தைப் பொறுத்தவரை புதியதல்ல ஏதோ ஒருவகையில் இரண்டும் தொடர்புபட்டவை. எனவே, தமக்குத் தெரிந்த, தம்முடன் இரண்டறக்கலந்த ஒரு வாழ்க்கை முறையைக் கற்பனை நயத்துடன் சினிமாத் துறை தற்போது தருகின்றது. அதையொரு வெகுசனத் தொடர்புச் சாதனமாக ஏற்றுக் கொள்வதற்கு மேலாகப் பொழுதுபோக்குச் சாதனம் என்றே கருத வேண்டியுள்ளது.

சினிமாவின் செல்வாக்கினால் வீடியோவுக்கும் இந்த நிலை ஏற்பட்டது. வீடியோவின் வருகையைத் தொடர்ந்து தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட எல்லாச் சினிமாப்படங்களும் வீடியோப் பிரதிகளாக வெளிவந்தன. சினிமாப் படங்களை மலிந்த விலையில் விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்தில் பார்க்கக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கைக்கெட்டியது. இதனால் பெரும்பாலான யாழ்ப்பாண மக்கள் வீடியோ என்றதும் சினிமாப் படங்களைப் பார்க்கும் ஒரு ஊடகம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் காரணமாக, யாழ்ப்பாண மக்களில் 95 வீதமானோர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில்லை. வீடியோவின் செல்வாக்கிற்கும் அதுதொடர்பான மக்களின் ஈடுபாட்டிற்கும் தொலைக்காட்சி தொடர்பான பரவல் போதாமை பிறிதோர் காரணமாகும்.

மேலும், யாழ்ப்பாண சமுதாயத்தில் சாதி அமைப்பு ஏதோ ஒரு வகையில் பேணப்பட்டே வருகிறது. இவ்வாறான கட்டமைப்பின் கீழ்த்தான் சமுதாய இயக்கத்துக்குத் தேவையான அனைத்துக் கூறுகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, எமது சமுதாயத்தில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் சாதிக் கட்டமைப்புக்கு இணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக நிகழ்ந்து கொண்டிருக்கிறதேயொழிய, அதனை உடைத்துப் புதிய சமூக அமைப்பை உருவாக்கும் தன்மையில் இல்லை. வீடியோ தொடர்பான செயற்பாடுகளும் நிலவுகின்ற இந்த அமைப்புக்கு விதி விலக்காக அமைந்துவிடவில்லை. மாறாக, அதற்கு வலுவூட்டுவதாகவே உள்ளது.

ஆரம்பத்தில் வீடியோ தொடர்பான கருவிகளைப் பொருளாதார வளம்படைத்த மேல்மட்டகுழுவினரே தமது சொந்தமாகக் கொண்டிருந்தனர். ஆனால், இவற்றைப் பெறுவதில் சிரமமின்மையும் அதே நேரம் மலிந்த விலையும் ஏற்பட்ட போது, அடுத்த நிலையில் உள்ளவர்களும்கையாளும் ஒரு கருவி என்ற கருத்து நிலைபெற்றுள்ளது.

மேலும், சினிமாத் துறை யாழ் நகரப்பகுதியை மையமாகக் கொண்டு செயற்பட்டபோது சாதி மத பேதமின்றி யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் யாழ் நகருக்கு வந்த மக்கள் ஒன்றாக இருந்து படங்களைப் பார்த்தனர். சினிமாவின் வருகையால் நகரப்பகுதியில் ஏற்பட்ட ஒரு தற்காலிக சமத்துவமாக இது நோக்கப்பட்டது. ஆனால், வீடியோவின் வருகைக்குப் பின்னர் கிராமங்கள் தோறும் மினிசினிமாக்கள் தோன்றியமையால் சாதி, குலம், கோத்திரம் என்ற வகையில் தனித்தனியே மக்கள் ஒன்று கூடியிருந்து வீடியோ காட்சிகளைக் காண்கிறார்கள். தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து எல்லோரும் ஒன்றாகக் இருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை வீடியோ இல்லாமற் செய்துள்ளது. இதனால், சாதி ரீதியான உணர்வுகள் மேலோங்கி வருகின்றன.

தற்போதுள்ள நாட்டு நிலமை காரணமாக இரவுநேர வீடியோ காட்சிகள் என்பது குறிப்பிட்ட சில குறிச்சிகளையும், பகுதிகளையும் உள்ளடக்கியதாகவே உள்ளது. ஒரு பகுதியைவிட்டு இன்னோர் பகுதிக்குக் கடந்து செல்ல முடியாத நிலையில் குறிப்பிட்ட பகுதி மினிசினிமாக்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட நிலையில், நிலவுகின்ற அமைப்புத் தொடர்ச்சியாகப் பேணப்படுவதைக் காணமுடிகிறது.

மேலும், இப்படித்தான் வாழவேண்டுமென்ற வரையறைக்குள் நிற்கும் யாழ்ப்பாண மக்கள் அதற்கு ஏற்றவகையில் பிள்ளைகளின் சமூகமயமாக்கற் செயற்பாட்டிலும் குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். இதற்கு அடுத்தபடியாகப் பாடசாலை, விளையாட்டுக் குழுக்கள், சனசமூக நிலையம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் பக்க பலமாக இருந்து வந்துள்ளன. ஆனால், சினிமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் புதியதோர் தொழில்நுட்பம் சார்ந்த கலை வெகுசனத் தொடர்புச் சாதனமாகப் பிரசித்திபெற்ற இந்த நூற்றாண்டின் ஆரம் பத்திலிருந்து பிள்ளைகளின் சமூகமயமாக்கற் செயற்பாட்டில் அதன் பங்கு அவதாரிக்கப் பட்டுவந்தது. அதன் தொடர்ச்சியாகத் தொலைக் காட்சியும் இறுதியாக வீடியோவும் பிள்ளைகளின் சமூகமயமாக்கற் செயற்பாட்டில் பிரதான பாத்திரத்தை வகிப்பதைக் காணலாம். இவற்றுள் வீடியோவின் செல்வாக்கே யாழ்ப்பாண சமுதாயத்தில் இன்று முதலிடம் பெறுகிறது.

சினிமாத் திரையரங்குகள் யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட காலத் தில் அவை பெருமளவுக்கு யாழ்நகரப் பகுதியைச் சார்ந்தவையாகவும் ஒரு சில யாழ்குடாவின் ஏனைய சிறு நகரங்களை ஒட்டியும் இருந் தன. இந்த நிலையில் ஒரு சினிமாப்படம் திரைக்கு வந்துவிட்டால் வயது வந்தவர்களைப் பொறுத்தமட்டில் சுதந்திரமான முறையில் இத்திரையரங்குகளுக்குச் சென்று படங்களைப் பார்க்க முடிந்தது. இது வயதுவந்தவர்கள் என்ற நிலையில் ஒரு பிரச்சினைக்குரிய விடய மாக அமையவில்லை. எனினும், சினிமாவின் செல்வாக்கிற்குட்பட்ட வர்களாகவே இவர்கள் இருந்துள்ளனர். சிறுவர்கள், மாணவர்கள், யுவதிகள் போன்ற மட்டத்தினர் தன்னிச்சையான முறையில் இத்த கைய திரையரங்குகளுக்குச் செல்வதில்லை, போக்குவரத்து குடும்பத் தில் நிலவும் கட்டுப்பாடு, இயல்பான பயம் என்பன போன்ற பல காரணிகள் இதற்கு அடிப்படையாகும். ஆனால், நகரப்பகுதியில் இந்த மட்டங்களின் செல்வாக்கு ஓரளவுக்கு இருந்துள்ளதென்பது உண்மை. இத்தகைய தொரு சூழ்நிலையில் சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் போன்றோர் திரைப்படங்களைப் பார்ப்பதாயின் தம் பெற்றோருடன் அல்லது உற்றார் உறவினருடன்தான் செல்ல வேண்டி இருந்தது. எனவே, பெற்றோரும், உறவினர்களும் தம்மைச் சார்ந்து நிற்கும் இந்த வயதுக் குழுவினர்களுக்குப் பயன்பாடுடையதும், முன் மாதிரியானதுமான படங்களைக் காட்டுவதில் துணையாக இருந்த னர். இந்நிலையில் அறிவை மட்டுமன்றி உறவுரீதியான ஒரு வலிமை யையும் ஏற்படுத்துவதாக அமைந்தது. எனவே, இங்கு சமூகச் சீரழி வை ஏற்படுத்தவல்ல சினிமாப்படங்கள் திரைக்கு வரினும், அவை யாழ்ப்பாண சமுதாயத்தின் முதுகெலும்பாக விளங்கும் மாணவர்கள், சிறுவர்கள் போன்றோரைச் சென்றடைவதில்லை.

தொலைக்காட்சியின் வருகையுடன் இந்தநிலை முழுவதாக மாறி யது, ஒரு பொழுது போக்குச் சாதனம் வீட்டு வாசலை, விறாந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன ... யாழ்ப்பாணம்

யை அடைத்துவிட்ட நிலையில் வசதிபடைத்த மக்கள் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தைத் தொலைக்காட்சியுடன் கழித்தனர். ஆனால், சிறுவர்களும் மாணவர்களும் கல்விகற்க வேண்டிய நேரத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவழித்தனர். இதுவே, பிரச்சினைக்குரிய விடயமாகக் கருதப்பட்டது. எனினும், அரசு வழங்கும் ஒளிபரப்புச் சேவைகள், அவை சினிமாப் படங்களாகவோ அல்லது வேறு நிகழ்ச்சிகளாகவோ இருக்கலாம், பொது மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பயனுடையனவாகவே இருக்குமென்ற வகையில் ஒவ்வொருவரும் தமக்குள் சமாதானப்பட்டுக் கொண்டனர். இந்த நிலை இவ்வாறிருக்க, வடக்கு கிழக்கில் மூண்ட போரினால் யாழ்ப்பாணத்துக்கு மின்சாரம் தடைப்பட்டது. இதனால், தொலைக்காட்சி பார்க்கும் மக்கள் கூட்டம் அத்தகைய வாய்ப்பை இழக்க நேரிட்டது. இது ஒருவகையில் தம்பிள்ளைகளின் ஈடேற்றத்துக்கு வழிசமைப்பதாக இருக்கும் என்று பல பெற்றோர் கருதினர். அதாவது, மின்சாரம் நின்று விட்டதால் இனித்தொலைக்காட்சி பார்க்க முடியாது. அதேவேளை நகரப்பகுதித் திரையரங்குகளுக்கும் மூடுவிழா நடந்துவிட்டது. பிள்ளைகள் இனி ஒழுங்காக இருப்பார்கள், பாடசாலை - ரியூட்டரி - வீடு என்பவற்றோடு நின்றுவிடுவார்கள் என்றெல்லாம் எதிர்வு கூறப்பட்டது. ஆனால் இதற்கு மாறாகவே எல்லாம் நடந்தன.

சினிமாவும் தொலைக்காட்சியும் செயலிழந்து போகின்ற வேளையில் வீடியோ இடம்பிடித்துக் கொண்டது. வீடியோக் கடை, மினிசினிமா, வீடியோ படப்பிடிப்பு என்றெல்லாம் இதன் பரப்பு விரிவுபட்டது. வீட்டு மூலைக்குள் ஒதுக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் இயந்திரங்கள் கூட ஜெனரேற்றராக (Generater) உருப்பெற்றது. யாழ் நகரத்திரைகளில் எந்தச் சினிமாப்படத்தைப் பார்க்கச் சென்றார்களோ எதைப்பார்க்க முடியாதிருந்ததோ அவையெல்லாம் வீட்டில் - அயலில் - மினிசினிமாக்களில் என்றெல்லாம் அழகாகக் காட்டப்படுகின்றன. சினிமாத்துறை தரும் கதைப்படம் தவிர்ந்த வேறொன்றையும் அதிகம் அறியாத யாழ்ப்பாண மக்கள், குறிப்பாக இளைஞர், யுவதிகள், மாணவர்கள், சிறுவர்கள் போன்றோர் இத்தகைய சினிமாப் படங்களின் கற்பனை வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கியுள்ளார்கள். இவர்களின் யதார்த்த வாழ்வுக்கு வீடியோ வழங்கும் சினிமாக் கற்பனை உலைவைத்துள்ளது. அதிமனிதர், அதீதகாதல் என்பவற்றைச் சித்திரிக்கும் படங்களின் செல்வாக்கால் இளைஞர் யுவதிகள் மத்தியில் இருக்க வேண்டிய இயல்பான இலட்சியங்கள், அபிலாசைகள் சிதைந்



27842

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் தவறான வழியில் நடாத்தப்படுகிறார்கள். இத்தகைய மோசமான சூழ்நிலையில் நீலப் படங்களின் (Blue Film) காட்சிகளும் யாழ்ப்பாண சமுதாயத்தின் உயிர்மூச்சில் கைவைத்துள்ளன. உலகளாவிய ரீதியில் தடைசெய்யப்பட்ட இத்தகைய படங்கள் எமது சமுதாயத்தில் மறைமுகமாக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சீரழிவுகள் பெரும்பாலானோரால் உணரப்படுவதில்லை.

மேலும், பாரம்பரிய நடைமுறைகள், வழக்காறுகள், விழுமியங்கள் என்பவற்றுக் கூடாகவே புதியவற்றைப் பார்க்கும் யாழ்ப்பாண சமுதாயத்தில் வீடியோவின் வருகை பாரம்பரிய நடைமுறைகளைப் புறக்கணிப்பதாக, அதன்மேல் ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்து விட்டது. இந்த எதிர்நிலைத் தன்மை சமூகத்தின் எல்லாமட்டங்களிலும் மிக வேகமாக ஊடுருவியமையால் ஒரு மெதுவான, ஆனால் கடுமையான சமூகப்பண்பாட்டுச் சீரழிவை உண்டுபண்ணுவதாக அமைந்துவிட்டது. இங்கு பண்பாட்டுச் சீரழிவு என்னும் போது அது வீடியோவில் சினிமாப் படங்களைக் காண்பிப்பதால் உண்டாகும் சமுதாயச் சீர்கேடுகளையும், நிகழ்வுகள் 'மற்றும் வைபவங்களை வீடியோ பண்ணுவதால் உண்டாகும் விளைவுகளையும் குறித்து நிற்கிறது.

விவரணப்படம், பக்திப்படம், காட்டூன்படம் எனப் பலவகைப் படங்கள் இருக்கின்ற போதும் யாழ்ப்பாண சமுதாயத்தில் கதைப் படங்களே வகை தொகையின்றி வந்து குவிந்துள்ளன. முழுக்க முழுக்கக் கற்பனையால் மெருகூட்டப் பெற்ற இத்தகைய தென் இந்தியச் சினிமாப் படங்கள் சமூக நோக்கு, பொதுநோக்கு, மனிதநேயம் என்பவற்றைக் கடந்து வெறும் வருவாய் நோக்கை அடிப்படையாகக் கொண்டவை அல்லது அரசியல் இலாபம் கருதிச் செயற்படுபவை. இத்தகைய போக்கால் படமாளிகை உரிமையாளர்கள் பணவருவாய் பெறலாமேயொழிய பண்பாட்டுக்காப்பாளர்களாகிவிட முடியாது. இதை இன்னோர் வகையில் சொன்னால் பண்பாட்டைவிற்றுப் பணம் சம்பாதிக்கும் தென்னிந்தியச் சினிமாத்துறை வீடியோ வடிவில் யாழ்ப்பாண சமுதாயத்தை இன்று ஆட்டிப்படைக்கிறது எனலாம்.

இத்தகைய சினிமாப் படங்களைப் பார்க்கும் யாழ்ப்பாண மக்கள் அவற்றில் வரும் கற்பனைக் காட்சிகளை ஏதோ தமக்கு நேர்ந்துவிட்ட ஒரு சம்பவமாகவே நோக்குகிறார்கள். மொழி ரீதியாகத் தென்னிந்தியாவும், யாழ்ப்பாணமும் கொண்டிருக்கும் நெருக்கமான உறவே இத்தகைய எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. உண்மையில் சமூகநிலைமைகளில் தென்னிந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான பாரிய வேறுபாடுகள் உள்ளன. இதைக் கருத்தில் கொண்டே யாழ்ப்பாண மக்களில் ஒருசாரார் வீடியோவுக்கென்று படங்களை யாழ்ப்பாணத்தில் தயாரிப்பதை விரும்புகிறார்கள்.

மேலும், நிகழ்வுகள், வைபவங்களை வீடியோ பண்ணுவதென்பதும் யாழ்ப்பாண சமுதாயத்தைப் பொறுத்தவரை பண்பாட்டைப் புறக்கணிக்கும் ஒரு செயலாகவே அமைந்துள்ளது. எந்தக் காரியத்தையும் நாள்கோள் நட்சத்திரம் பார்த்து ஆரம்பிக்கும் ஒரு வழக்காறு வீடியோ மோகத்தால் சிதைக்கப்படுகிறது. திருமணவீட்டில் வீடியோவின் வருகைக்காகச் சுபநேரத்தைத் தவறவிடத் தயாராக இருக்கும் மக்களை இன்று காண முடிகிறது. அதேபோல பூப்புனித நீராட்டு விழாவில் பருவமடைந்த ஒரு பெண் வீடியோ படப்பிடிப்பாளரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளவேண்டியும் அதே வேளை சினிமாப் படங்களில் வரும் காட்சிகளின் பின்னணிக்கு ஏற்ற வகையில் பாவனை செய்ய வேண்டிய அவலமும் ஏற்படுகிறது. இன்னும், யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரியத்தில் மதக் கோட்பாடுகளுடன் நெருக்கமான உறவினைக் கொண்டுள்ள மரணச் சடங்குகளிலும் வீடியோ படப்பிடிப்புக்கள் கேலிக்கிடமான முறையில் நடக்கின்றன. உணர்வுபூர்வமாகச் செய்யப்படும் இத்தகைய சடங்குகளும் வீடியோ மோகத்தால் வெறும் பாவனையாகிவிட்ட நிலையில் இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையே இன்று யாழ்ப்பாண மக்கள் மத்தியில் காணப்படுகிறது. உள்ளவன் இல்லாதவன் என்ற பாகுபாடின்றி எல்லோரும் எடுத்ததற்கெல்லாம் வீடியோப் படப்பிடிப்பு என்ற வகையில் நடந்துகொள்வதால் ஒரு நிகழ்வின், பண்பாட்டின் உள்ளார்ந்த வல்லமை என்பது ஒப்பீட்டு அளவில் உண்மை நிலையை இழந்துள்ளது.

இவ்வாறு சினிமாப் படங்களைப் பார்த்தல், நிகழ்வுகளை வீடியோ பண்ணுதல் என்ற இருவழிச் செயற்பாடுகள் மூலம் யாழ்ப்பாண சமுதாயத்தில் வீடியோவின் செல்வாக்கு மிகப்பலமாக இருப்பதை இனங்காணமுடிகிறது

**உசாத்துணைகள்**


1. Mannel Alvaryado (ed) -Video world - Wide, An International Study, Unesco. 1988.
2. Biryukov N.S, Telivision & its Doctrines. Progress Pub. 1981
3. சண்முகலிங்கன் என். கனவுகளிலிருந்து வாழ்வுக்கு - தொலைக்காட்சி தொடர்பான சமூக உளவியல் தரிசனம், பொன்விழா மலர் வசாவிளான் ம. ம. வித். 1995.

# நகரமயமாக்கம் - நகரத்துவம்
# Urbanisation and Urbanism

A. Robinson B. A. (Hons)

கைத்தொழில் புரட்சியோடு ஆரம்பமாகிய நகர மயமாக்கமானது இருபதாம் நூற்றாண்டில் ஓர் உலக முறைமையாகக் காணப்படுகின்றது. கைத்தொழில் தொழில்மயமாக்கம் அடைந்த நாடுகள் அனைத்திலும் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையோர் நகரப்பகுதிகளிலேயே வாழ்கின்றனர். நவீன நகர வாழ்வானது நகரத்தில் வாழ்வோரை மட்டும் அன்றி, அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. 1900 ம் ஆண்டிற்கு முன்பு அனேகமான நகர அமைப்புக்கள் மேற்குலகிலேயே காணப்பட்டன. ஆயினும் கடந்த ஐந்து தசாப்தங்களில் மூன்றாம் உலக நாடுகளில் பல்வேறு நகரங்கள் தோற்றம்பெற்றன. உலக சனத்தொகை வளர்ச்சியோடு ஒப்பிடும் போது நகர சனத்தொகை வளர்ச்சி மிகவேகமாக அதிகரித்துச் செல்கின்றது. ஐக்கியநாடுகள் சபையின் கணிக்கப்பீட்டின்படி 1975இல் உலக சனத்தொகையின் 39 வீதமானோர் நகரத்தில் வாழ்ந்தனர். இத்தொகை 2000ம் ஆண்டளவில் 50% ஆகும் எனவும்; 2025 இல் 63 வீதமாகும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது; அத்துடன் இக்காலப்பகுதியில் இதன் ஐம்பது வீதமான சனத்தொகை கிழக்கிலும், தெற்காசிய நாடுகளிலும் காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நகரத்தில் மக்கள் பெருந்தொகையாக வாழ முற்படும் நிலைமையே நகர மயமாக்கம் எனப்படும். நவீன உலகின் மிகப் பிரதான அம்சமாக நகரமயமாக்கம் விளங்குகின்றது. ஆரம்பத்தில் நகரங்களானவை நீண்ட காலத்தில் தோற்றம் பெற்றன. ஆனால் இந்நூற்றாண்டில் மிகக் குறுகிய காலத்தில் மிக விரைவான நகரமயமாக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பான சிந்தனை சமூகவியல் அறிஞர்கள் மத்தியில் தோற்றம் பெறலாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் நோக்கிலே தங்களது தேவைக்கான உணவு உற்பத்தியை மேற்கொள்ளாத, பெருந்தொகை மக்கள் நிரந்தரமாக வாழும் பிரதேசமே நகரம் எனப்படும். நகரமயமாக்கம் என்பது கிடைக்கக் கூடிய மிகையுணவு உற்பத்தி (Availability of a food Surplus) என்பதிலேயே தங்கியுள்ளது. விவசாயிகள் தமது சுயதேவைப் பூர்த்தி மட்டத்திற்கு மேலாக உற்பத்தி செய்கின்றபோதே, ஏனைய பெருந்தொகையான மக்கள் விவசாயத்தைக் கைவிட்டு, அதற்குப்பதிலீடாக வேறும் பல விவசாயம் சாராத, தாங்கள் சிறப்பானது எனக்கருதும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். இவ்வாறான செயன்முறைகளில் ஈடுபடுவோர் விவசாயிகள் போன்று அல்லாது மிகவும் குறைவான நிலப்பரப்பில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறே ஆரம்பத்தில் நகரங்கள் தோன்றின. ஆயினும், நகரத்தின் வளர்ச்சியும் பரம்பலும், கைத்தொழில் புரட்சியின் தூண்டுதலுக்கு உள்ளானது. கைத்தொழில் புரட்சியானது, வீதிகள், புகையிரதப் போக்குவரத்து விமான சேவை, கப்பல் போக்குவரத்து போன்ற வசதிகளில் அதீத வளர்ச்சி ஏற்படுத்தியதோடு, தொழில்நுட்ப வளர்ச்சியானது, குளிரூட்டல் தகரத்தில் அடைத்தல், இரசாயனப்பொருட்களின் பாவனை என்பவற்றினூடாக, சேமிப்பு முறைறமைகளையும் உருவாக்கியது.

நகரம் தொடர்பான ஆய்வில் சமூகவியலாளர்கள், நிலப்பயன்பாடு பற்றி மட்டும் கவனம் செலுத்தவில்லை. மாறாக சமூக ஒழுங்கமைப்பு, வாழ்வு முறைறமை, நகர வாழ்வின் சமூக பொருளாதாரத் தாக்கங்கள் என்பவை பற்றியும் கருத்தில் கொள்கின்றனர். நகர வாழ்வு தொடர்பான சமூகவியல் ஆய்வுகள், சிக்காகோ (Chicago) பல்கலைக்கழகத்திலேயே தோற்றம் பெற்றன. 1900ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலே (1920-40) நவீன நகர நிலைமைகள் தொடர்பான கருத்துக்கள் முதன் முதலாக தோற்றப்பெற்றன. நகரச்சமூகவியல்பரப்பில், றொபேட் பாக் (Robert Park), ஏணெஸ்ற் பேகெஸ் Urnest Burgess). லூயிஸ் வேத் (Louis Wirth) என்போர் முன்னோடிகளாக விளங்குகின்றனர். இவர்களாலேயே நகரச் சமூகவியல் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இவர்கள் இரு பிரதான அணுகு முறைகளை முன்வைத்றனர். Park (1952), "Eeological Approach," (உயிரினச் சூழலியல் அணுகுமுறை) என்பதனையும்; Wirth (1938), "Urbanism As A Way of Life," (நகரத்துவம் ஓர் வாழ்வு முறைறமை) என்பதனையும் முன்வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரச் சூழலியல் (Urban Ecology)

நகரச் சமூகவியலாளர்களில் முன்னோடியான பாக், உயிரினச் சூழலியல் (Urban Ecology), என்ற பதத்தினை, பௌதீக விஞ்ஞானத்தில் இருந்து பெற்று, அதனை நகர நிலைமையினை விளக்குவதற்குப் பயன்படுத்தி உள்ளார். மனித குடியிருப்புக்களின் பௌதீக ஒழுங்கமைப்பின் மீது (Physical Arrangement) தாக்கம் செலுத்துகின்ற, இயற்கையான சமூக சூழல் காரணிகள் மீது, நகர ஆய்வு தொடர்பான உயிரினச் சூழலியல் அணுகுமுறை (Ecological Approach) கவனம் செலுத்துகின்றது. இயற்கை சூழலில் வேறுபட்ட உயிரினங்கள் வாழ்கின்றபோது, அச் சூழலில் வாழும் உயிரிகளிடையில் ஓர் சமநிலை (Equilibrium) காணப்படுகிறது. இவ்வாறே, இவ் அணுகு முறையினை முன் வைத்த ஆய்வாளர்கள் நகரக் குடியிருப்புக்கள் மத்தியில் வாழ்கின்ற மக்களிடையே, ஓர் சமநிலை நிலவுகின்றது என்பதனை விளக்குகின்றார்கள்.

நகரங்கள் எழுமாற்றாக தோன்றியவை அல்ல, மாறாக சூழலின் சாதகத் தன்மைகளை மையமாகவைத்தே அவை உருவாகின. இயற்கையான சூழலில் போட்டி, உட்புகுதல் வெற்றிபெறுதல், (Competition, Invasion, Succession) என்பவை மூலமாகவே நகரங்கள் உருவாகின்றன. இருப்பிட அமைவின் தன்மை, மீள் இருப்பிட அமைவு, நகர்வு என்னும் அம்சங்கள் (Location, Relocation, Movement) நகரச் சூழலில் சமநிலையினைப் பாதிக்கின்றன. நவீன நகரங்கள் ஆரம்பத்திலே உருவாகிய போது மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளுதல், உற்பத்திப் பொருட்களை விநியோகம் செய்தல் என்பனவற்றிற்கு வசதியான பகுதிகளிலே, தொழிற்சாலைகள் தோற்றம் பெற்றன. மக்கள் கூட்டங்கள், தொழில் இடங்களைச் சூழக் குடியேறின. இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வெவ்வேறுபட்ட இயல்புகளை உள்வாங்கிக் கொண்டனர், அபிவிருத்தி அடைந்த தேவைகள் கவர்ச்சிமிக்கவையாக மாறின, போட்டி நிலைமைகள் தோன்றின. நிலத்தின் பெறுமதியும், வரியின் அளவும் உயர்ந்தது இவை அனைத்தும் மக்கள் நகரின் மத்திய சூழலில் வாழ்வதில் பல சிக்கல்களைத் தோற்றுவித்தன. மத்திய பகுதியானது வியாபாரம் பொழுது போக்கு என்பனவற்றின் கேந்திரமாக மாறியது. வசதி மிக்க மத்தியதர, நகரத்தில் வாழ்ந்த மக்கள், நகரை விட்டு வெளியேறி, புற நகர்களில் குடியேறினர். வறியவர்களோ நகரத்தின் நெருக்கமான பாழடைந்த, வாடகை குறைவான வீடுகளில் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனுதவும் பகுதி

## நகரத்துவம்: ஓர் வாழ்வு முறைமை.
## Urbanism: As A Way Of Life

நகரச் சமூகவியலாளரான வேத் என்பவர், 'நகரத்துவம் ஓர் வாழ்வு முறைமை' எனும் இரண்டாவது சிந்தனை முறையினை முன்வைத்தவர். இவர் நகரின் உள்ளக வேறுபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மாறாக, நகரத்துவம் ஒரு சமூக நிலை (social existance) என்கிறார். நகரத்துவம், நகரவாழ்வின் இயல்பும், கருத்தும் என்பதே இவரது வாதம்.

சமகால நகரம் என்பது முழுமையாக மக்கள் தொகை எனும் கருத்தினை/ காரணியினை மட்டும் வைத்து அளவிடப்படுவதில்லை. மாறாக பண்பாடு, சமூக உறவு, சமூகவாழ்வு என்பவற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகளை அடிப்படையாக வைத்தே ஆராயப்படுகின்றது. நவீன மனிதனின் வாழ்விடமாகவோ அல்லது தொழில் தளமாகவோ மட்டும் நகரம் விளங்குவதில்லை. நகரமானது, அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வாழ்வு முறைகளை கட்டுப்படுத்துகின்ற, அவற்றுக்கு இடையே இடைவினையினை ஏற்படுத்துகின்ற மையமாக விளங்குகின்றது.

நகரமக்களின் இடைவினைக் கோலங்களுக்கே வேத் அதி முக்கியத்துவம் கொடுக்கிறார். நகரத்தில் மக்கள் மிக நெருக்கமாக வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் ஒருவர் ஒருவரை அறிந்து கொள்வதில்லை. மரபுரீதியான கிராமங்களில் மக்களிடையே நெருங்கிய உறவும், தனிப்பட்ட முறையிலான அறிமுகமும் காணப்படும். இதற்கு முற்றும் மாறுபட்டதாக நவீனநகரத்தில் அறிமுகம் அற்ற தன்மை (impersonality) காணப்படும். நகர வாசிகள் இடையே உறுதியான இடைவினை இடம்பெறுவதில்லை. வீதியில் சந்திக்கின்றனர்; வேலைத் தளங்களில் ஒருவர் ஒருவரைக் கடந்து கொள்கின்றனர்: ஆயினும் அவர்கள் தம்மிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதில்லை. நகர மக்களின் நகர்வு (mobility) வேகம் அதிகமாக இருந்தாலும் அவர்கள் இடையேயான பிணைப்பு மிகவும் நலிவுற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. இந்நிலையினை வேத் மேலும் விளக்கும் போது, நகர மக்களை, 'அறியப்பட்ட அன்னியர்கள்' (familier strangers) எனக் குறிப்பிடுகின்றார்.

நகரச் சூழலில், அன்றாட வாழ்வில் அறியாத நிலை (impersonality) என்பது சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாதது. பொதுவாக இந்நிலமை சமூகவாழ்வின் உண்மை நிலையாகும், நகரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவம் சமூகத்தின் ஓர் பகுதி அல்ல. மாறாக இது பரந்துபட்ட சமூக அமைப்பினை வெளிப்படுத்துவதோடு, செல்வாக்கும் செலுத்துகின்றது. நகர வாழ்வு முறைமை என்பது, வேத்தைப் பொறுத்தவரை முழுமையான நவீன சமூகத்தின், சமூகவாழ்வின் பண்பாகும்.

மேற்குறிப்பிடப்பட்டது போல் நகரவாழ்வு என்பது எப்போதும், அறியப்படாத ஆழமற்ற உறவுமுறைகளைக் கொண்டதல்ல. அதற்குள்ளே வேறுபட்ட அம்சங்களும் நெருக்கமான உறவு முறைமைகட்கும் இடம் உண்டு. பரந்த அளவிலான நகரத்துவம், பல்வேறுபட்ட துணைப்பண்பாடு உருவாக்கத்திற்கு ஆதாரமாக அமைகின்றது. வேறுபட்ட அரசியல், சமய, சமூக பொருளாதார இன பின்னணியினைக்கொண்ட மக்கள் ஒன்றுசேர்கின்ற போது, பல்வேறு துணைப் பண்பாடுகளும், துணைச் சமூகங்களும் உருவாக வழிபிறக்கின்றது.

பாரிய நகரம் அந்நியர்களின் உலகமாகும் (world of strangers). இருப்பினும் அது தனித்துவமான, தனிப்பட்ட உறவு முறைகளை வளர்ப்பதிலும், உருவாக்குவதிலும் பங்குகொள்கின்றது. நகரத்தில் ஒருவன் நுழைந்ததும், மிகவிரைவாக அவன் அந்நகர மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றான். விரைவாக அச்சமுதாயத்தில் கலந்து கொள்கிறான். ஆனால் இவ்வாறான ஒரு நிகழ்வு, கிராமச் சூழலில் இடம் பெற, மிகவும் நீண்டகாலம் செல்லும் என்பதில் ஐயம் இல்லை. வேறுபட்ட அந்நியர்கள் நகரில் வாழ்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் 'அறிமுகமாகாத நண்பர்கள்' (potential friends). பரந்துபட்ட வாழ்க்கை வடிவங்கள் (life styles), ஆர்வங்கள் என்பவை மட்டில் மக்கள்; உள்ளக, வெளி நகர்வுகளில் பங்குகொள்கின்றனர். குறித்த ஒரு குழுவில் அல்லது, அமைப்பில் மக்கள் பங்கு கொள்ளும்போது, மக்கள் தம்மிடையே திருப்திகரமான உறவுமுறைகளையும், தொடர்பு முறைகளையும் உருவாக்கிக் கொள்ளவும், விருத்தி செய்யவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

## நகரத்துவம் உருவாக்கப்பட்ட சூழல்
## Urbanism and the created environment

மாக்சிய கோட்பாட்டாளர்களான, டேவிட் காவி (David Harvey), மனுவல் காசில்ஸ் (Manuel Castells) என்பவர்கள், நகரத்துவம் என்பது, உருவாக்கப்பட்ட சூழல், என வாதிடுகின்றனர். நகரத்துவம் என்பது, பாரிய அரசியல், பொருளாதார மாற்றங்களின் அடியாக ஆராயப்படவேண்டும் என்கின்றனர். கைத்தொழில்மய முதலாளித்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Industrial Capitalism), என்பதன் மூலம் உருவாக்கப்பட்ட, சூழல் இயல்புகளில் ஒன்றே நகரத்துவம் என காஸி கூறுகின்றார். நவீன உலகில் நகரம் - கிராமம் என்பவற்றுக்கு இடையே பாரிய வேறுபாடுகளைக் காணமுடியாது. விவசாய முறைமை இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. உற்பத்தி நடவடிக்கைகள் சந்தை நிலமைகளை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. மீளமைப்பு என்பது நவீன நகரத்துவத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. நகரமயமாக்கற்போக்கு, சந்தை அமைப்பின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. நகரமயமாக்கற்போக்கில், பாரிய தொழிற்சாலைகளைக் கட்டுதல், தொழில்நுட்ப ரீதியான உற்பத்தி, அபிவிருத்தி, ஆய்வுத்திட்டங்கள் போன்ற அனைத்தும்; அரச, தனியார் துறைகளால் மேற்கொள்ளப்படுகின்றது. இச் செயன் முறை, நகரமயமாக்கத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்துகின்றது.

காசில்ஸ்சைப் பொறுத்தவரை, நகரம் என்பது - 'நகரப்பகுதி' எனும் குறிப்பானதோர் அமைவிடத்தினைக் குறிப்பது அல்ல. மாறாக இது கூட்டு 'நுகர்வின்' (Collective Consumption), ஒரு பூரணவடிவம். நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உருவாகும் பொருட்கள், சேவைகளை மக்கள் நுகருகின்றனர். யார், எதை, எங்கே நுகர்வது, எங்கே கட்டுவது என்பவை வரிவிதிப்போடு தொடர்புபட்ட சந்தைச் சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்றன. உயிரினச்சூழல் அணுகுமுறைக்கு மாறாக, இவ்வணுகுமுறையானது இயற்கை இட அமைவில் மட்டும் அன்று (Natural Spatial Process) நிலவும், உருவாக்கப்பட்ட சூழலும் சமூக, பொருளாதார அம்சங்களோடு எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதிலும் கவனம் செலுத்துகின்றது.

சமூகவியல் தந்தையார்களில் ஒருவரான வெபர் (Max Weber) நகரம் என்பது, ஆழமான தனித்துவத்தன்மையினை விருத்தி செய்யும் மையம் என்கிறார். நவீனத்துவக் கோட்பாடானது. ''நகரச்சூழல்'' என்பது, மக்கள் வளர்ச்சி, நகர்வு, ஒருங்கிணைவு என்பவற்றின் மையம் எனக் கூறுகின்றது. மக்கள் நெருக்கமாக வாழ்ந்து, புதிய நாகரீக முறைமைகளை உருவாக்குகின்றார்கள். ஏனெனில், இங்கு ஒருவர் இன்னொருவரின், ஆர்வம், விருப்பு, கருத்தியல் என்பவற்றினை ஏற்க வேண்டிய தேவை உருவாகின்றது. இவ்வகையில் நகரமானது அதில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் புதிய பண்பாட்டு அம்சங்களைத் தோற்றுவிப்பதன் மூலமாக, சமூக அபிவிருத்தியின் ஊக்கியாகச் செயற்படுகின்றது. மூன்றாம் உலக நாடுகளிலும், நகர மையங்களானவை முற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கு சிந்தனையினை தூண்டுபவையாகவும், தனித்துவத் தன்மையினை வலுவூட்டுவதாகவும், மரபு ரீதியான தடைகளைத் தகர்த்தெறிபவையாகவும் காணப்படுகின்றன.

நகரமயமாக்கமானது, ஒருபுறம் முற்போக்குமிக்கதாகவும், முன்னேற்றத்தை தோற்றுவிப்பதாகவும் காணப்படுகின்றது. மறுபுறமாக நகரமயமாக்கம், விரும்பத்தகாத விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது. ஐரோப்பிய அனுபவத்தைப்போல் அன்றி, மூன்றாம் உலக நகர வாசிகள், பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். வாழ்விட வசதி இன்மை, வேலையின்மை, சுகாதாரவதியின்மை, வறுமை, சூழல் மாசடைதல், போக்குவரத்துவசதியின்மை, போன்ற பிரச்சினைகளை, மூன்றாம் உலக நகர குடியிருப்பாளர்கள் எதிர்நோக்குகின்றனர். சிறு குடில் வாழ்விட அமைப்புகள், சேரிக்குடியிருப்புக்கள், சட்ட உரிமையற்ற குடியிருப்புக்கள் என்பவை மூன்றாம் உலக நகர சூழலில் பொதுவாகக் காணப்படும் அம்சங்களாகும். இத்தகைய நிலைமையானது வரலாற்று ரீதியான, சமகால, பரந்துபட்ட மாற்றங்களினூடாகவே ஆராயப்படவேண்டும்.

**உசாத்துணைகள்**

Alexander, Theron, Human Development in an Urban Age. Prentice, Hall, New Jersoy, 1973.

Bordo, John W., Urban Sociology, A Systematic Introduction, E. F. Peacock Publishers, U. S. A., 1992.

Germani, Gino, Modernization, Urbanization, and the Urban Crises, Little Brown and Company, Boston, 1973.

Giddens, Anthony, Sociology, Polity Press, New York, 1993.

Pahal, R. E., Readings in Urban Sociology. Persimmon Press. Oxford, 1968.

Safa, Helen, I., Towards a Political Economy of Urbanization in Third World Countries, Oxford Urbanization Brass, Delhi, 1982.

Wallace. Samuel E., The Urban Environment, The Dorsey Press Home Wooed, 1980.

Webster, Andrew, Introduction to the Sociology of Development, The Macmillan Press, London, 1984.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும், எமது சமூகமும்: ஒரு சமூகவியல் நோக்கு.
# Education and Our Society; A Sociological View

ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை
M. A ; M. phil, Dip in Ed.

1. வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்து வருகின்ற பல நாடுகளில் கல்வி எல்லாப் பிரஜைகளுக்கும் அடிப்படை உரிமையாக அரசே வழங்கிவருகின்றது.

2. குறிக்கப்பட்ட வயது வரைக்கும் கட்டாயக்கல்வி நடைமுறையிலும் உண்டு.

3. இக் கட்டுரையில் இரண்டு நோக்கங்கள் அடங்குகின்றன, ஒன்று எமது சமூகத்தில் இன்றைய நிலையில் கல்வியின் செயற்பாடு, இரண்டாவது, கல்வித்துறையில் பல்வேறுபட்ட அடைவுகளின் தன்மை. (The Question of Differential Educational Attainment) என்பனவாகும்.

கல்வியும் சமூகமும் என்ற நோக்கில் ஆய்வுகளும், மாறுபட்ட கருத்துக்களும் அணுகுமுறைகளும் எம் மத்தியிலே முன்வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒரு சிலவற்றை எடுத்து நோக்குவோம்.

## செயற்பாட்டுவாத நோக்கு:

இரண்டு முக்கியமான வினாக்களுக்கு செயற்பாட்டுவாதிகள் இத்துறையில் விடைகாண முற்படுகின்றார்கள். (அ) சமூகத்திற்கு கல்வியின் ஒட்டுமொத்தமான செயற்பாடு என்ன? (ஆ) சமூகத்தின் ஏனைய தொகுதிகளுக்கும், கல்விக்கும் இடையே காணப்படும் பொருத்தப்பாடுகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வினா; விழுமியங்களை ஒட்டுமொத்தமாகச் சீர்ப் படுத்தி, சமூகத்தை எவ்வாறு கல்வி ஒருங்கிணைத்து வைத்திருக்கின் றது என்பதைச் சுட்டி நிற்கின்றது.

இரண்டாவது வினா; கல்விக்கும் சமூகப் பொருளாதாரச் செயற் பாடுகளுக்குமுள்ள தொடர்பினை ஆராய்ந்து இது எவ்வாறு சமூ கத்தை ஒருங்கிணைத்து வைத்திருக்கின்றது என்பதை வினவி நிற் கின்றது.

மேலே குறிக்கப்பட்ட இரண்டு கேள்விகளுக்குமுள்ள மையப் பொரு ளாக "சமூகத்தின் ஒருங்கிணைப்பு" முக்கியத்துவம் பெறுவதை நாம் காணலாம்.

### எமில் டூர்கைம்:

இவர் பிரான்ஸ் நாட்டு சமூகவியலாளர், ஒரு சமூகம் வலுவுள்ள தாக இயங்க வேண்டுமானால் அங்கு பெரும்பாலும் ஒருமைத்தன்மை (homogeneity) காணப்படவேண்டும். ஒரு குழந்தையை இவ்வொரு மைத்தன்மைக்கு உட்படுத்த உதவுவது கல்வியே, என்பது இவரின் நிலைப்பாடு. இம்மாதிரியான ஒருமைத் தன்மைகளுக்கு ஒருவர் இணங் கிப் போகவில்லையென்றால் அந்நபர் அச்சமூகத்தின் அங்கத்தவராக இருப்பது மிகவும் கடினம். எனவே ஒரு குழந்தையானது வளர்ந்து வரும்பொழுது தனது விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டவும், விட்டுக்கொடுக்கவும், தான் வாழுகின்ற சமூகத்தில் தன்னை ஒரு அங்கமாக எண்ணித் தன்வாழ்க்கையை நடாத்தக் கல்வி பயன்பட வேண்டும். இந் நிலையில்தான் சிறுவர்களுக்கு எமது சமூகத்தின் வர லாறு கற்பிக்கப்படவேண்டுமென்ற தவிர்க்கமுடியாத தேவை ஏற்படு கின்றது. எமது சமூகத்தின் யதார்த்த நிலையை நாம் பார்க்கின்ற போது எமது வரலாறு திரிபு படுத்தி உண்மைக்குப் புறம்பான முறை யில் பாடநூல்களை உருவாக்கி எமது பிள்ளைகளுக்குக் கட்டாயப் படுத்தித் திணிக்கப்படுவது மிகவும் வேதனைக்குரியது.

குடும்பம், சகபாடிகள் எனப்படும்போது இவை இரண்டும் மட் டுப்படுத்தப்பட்ட உறவுமுறைகளைக் கொண்ட சிறிய அமைப்புக்களா கவே காணப்படுகின்றன. ஆனால் ஒரு பிள்ளை பள்ளிக்கூடம் செல் லும் போது அங்கு பரந்துபட்ட உறவு முறைகளுக்குட்படுத்தப்படு கின்றது. பள்ளியில் பிள்ளையின் ஊட்டங்கள், ஒரு "குட்டிச் சமூ கத்தில்" வாழுகின்ற பயிற்சியைக் கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடக்கம், உள்ளாந்தர ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து விரிவுபடுத்தும் வாய்ப்பு, தலைமைத்துவம், நாட்டுப்பற்று, சமூக உணர்வு போன்ற நற்பண்புகள் பெரும்பாலும் சீராக நிர்வகிக்கப்படுகின்ற பள்ளிக் கூடங்களின் ஊடாகவே வளர்கின்றன. இம்மாதிரியான கருத்துக்களுடன், தல்கொட் பாசன்ஸ், டேவிஸ், வில்பேர்ட் மூர் போன்ற அறிஞர்களும் சார்ந்து நின்றாலும் ஒரு சிக்கலான, காலத்திற்கேற்ற சந்தேகங்கள் எழத்தான் செய்கின்றன. இச் சந்தேகங்களுக்குரிய வாதப்பிரதி வாதங்களை நாம் பின் பார்ப்போம்.

## தாராண்மை வாதநோக்கு:

தற்கால நவீன சமூகத்தில் கல்வியின் செயல்முறை பற்றி முன் வைக்கப்பட்டுள்ள சிந்தனையின் தாராண்மைப் போக்கினைப் பார்ப்போமானால், சுருங்கக் கூறின்:

(அ) கல்வி ஒருவரைத் தன்னிறைவுகாண வழிவகுக்கின்றது.

(ஆ) கல்வி ஒருவரின், உள, உடல், மனவெளுச்சி, ஆன்மீகம் போன்ற உள்ளாந்திர ஆற்றல்களை விருத்தி செய்ய வழிவகுக்கின்றது. இலவசக் கல்வி எல்லோருக்கும் கொடுக்கும்போது இம்மாதிரியான ஊக்கல்கள் இடம்பெறுகின்றன.

(இ) தகுதிகாண் போட்டிகளின் வாயிலாக கல்வியில் பெறுபேறுகள் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் பதவிகளும் கொடுக்கப்படுகின்றன. ''தகுதி'' என்பதன் பொருள் சமூகத்திற்குச் சமூகம், நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இதை வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராயலாம்.

(ஈ) கல்வியின் வளர்ச்சியால் சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படும்.

(உ) தொழிலாளர் கல்வியில் மேம்பட அவர்களின் கேள்வியும் மாற்றமடையும், அவர்கள் தமது பொருளாதார வளத்தை மேம்படுத்தப் பலமான ஒரு நிலையில் நிற்க முடியும்.

மேற் குறிப்பிட்ட எண்ணக் கருக்களை முன் வைக்கும் தாரண்மை வாதிகள், இவைகள் எல்லாம் இன்றுவரை அடையமுடியவில்லையென்றாலும், உலகம் இக் குறிக்கோள்களை நோக்கியே போய்க் கொண்டிருக்கின்றது எனக் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி – மாக்சீசவாத நோக்கு:

இவர்களின் கல்விசார் பிரச்சனைகளை நோக்குவோமாயின் முக்கியமான ஒரு வினாவின் அடிப்படையில் இங்கும் கல்வி பற்றி ஆராயப்படுகின்றது.

பொருளாதார அடிக்கட்டுமானம் எவ்வாறு கல்விச் செயல் முறையை உருவாக்குகிறது? அதாவது முதலாளித்துவத்துக்குத் தேவையான தொழிலாளர் வலுவை எவ்வாறு கல்விச் செயல்முறை உருவாக்கிக் கொடுக்கின்றது என்பதாகும்.

## லூயிஸ் அல்தூசர்:

உற்பத்தியை மீழ் உற்பத்திசெய்ய தொழிலாளர் வலுவை மீழ் உற்பத்தி செய்வதே முதலாளித்துவக் கல்வியின் அடிப்படை என்பது இவரின் கருத்து. மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாகக் கல்விச் செயல் முறையானது இறுதியில் அடிக்கட்டுமானத்தால் வடிவமைக்கப்படுகின்றபடியால் உற்பத்தி உறவுமுறைகளைப் பிரதி பலிப்பதுடன் முதலாளித்துவத்தின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதாகவே கல்வியின் நோக்கம் அமையும். ஆகவே முதலாளிகளின் வருமானத்தைப் பெருக்க தொழிலாளர்கள் சந்ததி சந்ததியாக மீழ் உற்பத்தி செய்யப்பட்டு அவர்கட்கு சிறப்புத் தேர்ச்சி அதற்குரிய கல்வி மூலம் கொடுக்கப்பட வேண்டும்.

முதலாளி – தொழிலாளி என்ற வர்க்க ரீதியான பொருளாதார - சமூக அமைப்பு இறுக்கமாக வேரூன்ற வேண்டுமாயின், அடக்கு முறையிலும் பார்க்க, கருத்தியல் ரீதியாக மக்களின் உள்ளங்களை வடிவமைக்கவேண்டும். அதாவது கருத்தேற்றம் செய்யப் படவேண்டும். இக் கருத்தேற்றம் பல்வேறுபட்ட பொதுசனத்தொடர்பு சாதனங்களால் செயற்படுத்தப்படுகின்றன. அவைகளில் முக்கிய மானவை சட்டம், மதம், தொடர்புசாதனங்கள், கல்வி.

இம்மாதிரியான கருத்தேற்றத்தைத் தொழிற் புரட்சிக்கு முற்பட்ட காலத்தில் மத அமைப்புக்கள் மேற்கொண்டு வந்தன, ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் கல்வியின் வாயிலாகச் செயற்படுத்தப்படுகின்றன. ஆக கல்வியானது பொதுவாக உலகிலும், குறிப்பாக மேற்கு நாடுகளிலும் ஆளும் வர்க்கத்தைப் பாதுகாக்க உதவும் கருவியாகவே காணப்படுகின்றது என்பது மாக்சிய வாதிகளின் நிலைப்பாடு. இவர்களின் கருத்தை நிலைநாட்டு முகமாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பட்டன. உதாரணமாக நியூயோர்க் நகரில் உள்ள ஒரு உயர் நிலைப் பள்ளியில், சாமுவேல் பவுள்ஸ், ஹேபேர்ட் ஜின்ரிஸ், மேயர் போன்ற பிரபல்யமான சமூகவியலாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் ''ஆளுமையும் கல்வியில் பெறுபேறுகளும்'' என்ற எண்ணக்கருவை மையப் படுத்தி 237 உயர் வகுப்பு மாணவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவர்களில் குறைந்த புள்ளிகள் எடுத்து கீழ்மட்டத்தில் உள்ள மாணவர்கள் பெரும்பாலும், புதிய சிந்தனை, ஆக்கிரமிக்கின்றபோக்கு சுதந்திர உளப்பாங்கு உடையவர்களாகக் காணப்பட்டனர். எனவே இவர்கள் பள்ளிக்கூட நிர்வாகத்தால் தண்டிக்கப்பட்டனர் என்றும், அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், பணிவும் கட்டுப்பாடும் உள்ளவர்களாகக் காணப்பட்டதோடு நிர்வாகத்தினால் பாராட்டப்பட்டனர் என்றும் கண்டுள்ளனர். அதாவது ''கேள்வியின்றி அதிகாரத்திற்குப் பணிவதே உயர் பண்பு'' என்ற உளப்பாங்கு வளர்க்கப்படுகின்றது. பள்ளிக்கூடங்கள், ஏறுநிரை வரிசையில் 'அதிகாரம்' என்ற கருப் பொருளின் பின்னணியில் அமைக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் உத்தரவைப் பிறப்பிக்க, மாணவர்கள் பணிந்து போகின்றார்கள். கல்வியின் யதார்த்த நிலையைப்பார்க்கின்றபோது, 'குடத்திலிருந்து குவளைக்கு' என்ற அடிப்படை எண்ணக்கருவின் ஊடாகவே கல்வி புகட்டப்படுகின்றது. அதாவது குடத்தில் உள்ள நீரை, வெறுமையான குவளைக்குள் ஊற்றுவது போன்று பொருள்படும். குடம் - ஆசிரியர், குவளை - மாணவன். யார் குடத்திற்குள் நீரை நிரப்பியது? உயர் குழாம், ஆக, ஒரு மாணவன், உயர் குழாம் எதை எண்ணுகிறதோ அதையே கற்றுக் கொள்கின்றான். ஆசிரியர் அதற்கு ஓர் ஊடகமாக உள்ளார். இது மாக்சியவாதிகளின் நிலைப்பாடு, பெரும்பாலும் இதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

## வர்க்கமும் கல்வியில் அடைவும்:

கல்வி, சந்தர்ப்பம், சமூக ஏற்றத்தாழ்வு என்ற நூலில் றெமண்ட் பூடோன் என்ற பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த சமூகவியலாளர் வர்க்கமும் கல்வியில் அடைவும் என்ற எண்ணக்கருவை அலசி ஆராய்ந்துள்ளார். கல்வியில் சமசந்தர்ப்பம் காணப்பட்டாலும், வர்க்க ரீதியாக மாணவர்களிடையே வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். உதாரணமாக, தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு மாணவனும் மத்திய உயர் வர்க்கத்தைச் சேர்ந்த மாணவனும் ஒரு குறிப்பிட்ட வாண்மையை நோக்கிப் படிக்கின்றார்கள் என வைத்துக்கொள்வோம்; இந்நிலையில் கீழ்மட்டத்திலிருந்து வந்த மாணவன் பெரும்பாலும் தன் சூழலைவிட்டு விலகவேண்டி ஏற்படும், அதன்காரணமாக உளவியல் ரீதியாக



130744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்படுத்தப்பட அதிகமான வாய்ப்புகள் உண்டு. ஆனால், மத்திய வகுப்பு மாணவனுக்குப் பெரும்பாலும் சூழல் சுற்றாடல் அவனுக்குப் பொருத்தப்பாடு உடையதாகவே இருக்கும். மேலும் வேறொரு கோணத்திலிருந்து நோக்குவோமாயின், கீழ்மட்டத்தில் உள்ள மாணவனுக்கு, அவன் படிக்கக் கூடியவனாக இருந்தாலும், மேற்படிப்புக்குப் போக நிதிப் பிரச்சனையை அவன் எதிர்கொள்ள நேரிடும். இதன் காரணமாக, தனது குடும்ப நிலையினை மனதில்கொண்டு கல்விச்கும் தராதரத்திற்குமேற்ற ஒரு தொழிலைச் செய்ய நேரிடும். ஆனால் மத்திய வகுப்பைச் சேர்ந்த மாணவன், இரண்டு வருடங்கள் ஒரு வகுப்பிலே தடைப்படநேர்ந்தாலும், குடும்பப்பின்னணியின் காரணமாக, காலந்தாழ்த்தி மேல் நோக்கிப்போக வாய்ப்புகள் அதிகம் உண்டு. எனவே, ஒரு மாணவன் விவேகமானவனாக இருந்தாலும், வர்க்கமும் அவனது கல்வியின் அடைவிலே செல்வாக்குச் செலுத்துகின்றது என றேமன்ட் வாதிடுகின்றார்.

மேற்கூறப்பட்ட சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் எமது நாட்டின் கல்வி வளர்ச்சியினை நோக்குவோமாயின், குருகுலக் கல்வி, திண்ணைக் கல்வி, நிலாக்காலக் கல்வி, பட்டறைக் கல்வி, மர நிழற் கல்வி போன்ற வடிவங்கள் ஒருபுறமிருக்க, ஐரோப்பியரின் வருகைக்குப்பின் குறிப்பாகப் பிரித்ததானியரின் காலத்திலும் நாடு சுதந்திரமடைந்த பின்னரும் எமது கல்விநிலை எவ்வாறு இருந்தது என்பதை நாம் ஆராயவேண்டும். 1944 வரைக்கும் சுருக்கமாகக் கூறுவதாயின், தொழிற் பாட்டுவாத அடிப்படையில்தான் எமது கல்விச் செயல்முறையும் அமைந்து காணப்பட்டது. இருந்தும் ஆங்கிலக்கலவி முறையானது எம்மத்தியில் ஒரு புதிய வர்க்கத்தினரை உருவாக்கியது (உயர் குழாம்) எனலாம்.

எல்லோருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி என்ற கொள்கை 1944 இல் கல்வி அமைச்சராகவிருந்த சீ. டபிள்யு கன்னங்கராவினால் அமுல் செய்யப்பட்டதிலிருந்து கல்வியில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. ஆனால் அதுவும் வர்க்க ரீதியான செயல் முறைக்குட்பட்டதாகவே காணப்பட்டது.

கல்வியில் நகரப் பகுதி, கிராமப் பகுதி என்ற வேறுபாடும் நமது நாட்டில் காணப்படுகின்றது. இதை நிரூபிக்கும் வகையில் அனுராதபுர பகுதி மாணவன் ஒருவன் கல்வி சம்பந்தமாகத் தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும்போது, ''கொழும்புக்கு - பால்; எங்களுக்கு கெக்கரிக்காய்'' என்று கூறியதை இளைஞர் தொடர்பான ஜனாதிபதியின் அறிக்கையில குறிப்பிடப் பட்டுள்ளது. இதைவாசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்பாண குடா நாட்டு மாணவன் ஒருவன், "கொழும்பிற்கு - பால்; அனுராதபுரத்திற்கு – கெக்கரிக்காய்; தமிழனுக்கு – காலம் கடந்த பால்மா பக்கற்'', எனக் கூறினான். ஒரு தமிழ் மாணவனின் அடி மனத்திலிருந்து வெளிப்பட்ட இக் கூற்றானது இலங்கையில் கல்வி யானது வர்க்க ரீதியானது மட்டுமல்லாமல் இன அடிப்படையிலும் பாகுபாடு காண்பிக்கப்படுகின்றது என்பதை தெட்டத் தெழிவாக எடுத் துக் காட்டுகின்றது. மேலும் எந்தவொரு அபிவிருத்திச் சிந்தனையா னாலும் 'சிங்கள பௌத்த' அடிப்படையிலேதான் நோக்கப் படுவ தைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்று எம் மத்தியில் செயற்படுத்தப்படுகின்ற "கல்விச் சீர் திருத்தம்'' தமிழர்களுக்கு மேலும் பாதகமான நிலையை ஏற்படுத் தும் என்பதில் ஐயமில்லை. பாடசாலை மறு சீரமைப்பின் கீழ் பல பாடசாலைகளை மூடி விடும்படி உலக வங்கி இலங்கை அரசாங்கத் திற்கு ஆலோசனை கூறி உள்ளது. இப்படியான ஆலோசனைகள் எங் கிருந்து வந்தாலும், தமிழ் பகுதிகளே அதிகம் பாதிக்கப்படுவதும் நாட்டின் அரசியல் மரபு. மேலும் தமிழ் மாணவர்களுக்குரிய பாட நூல்கள், உபகரணங்கள் போதுமான அளவு வழங் கப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் நேர காலத்திற்கும் வினியோகிக்கப்படுவ தில்லை. ஆனால் சிங்கள மொழி படிப்பதற்குரிய பாட நூல் ஏற்க கனவே இங்கு வந்து சேர்ந்து விட்டது. இவ்விடயத்தில் அரசாங்கத் தின் 'தாராள உளப்பாங்கை' இது எடுத்துக் காட்டுகின்றது என லாம் "பயங்கரவதிகளிடமிருந்து மீட்கப்பட்ட யாழ்ப்பாணக் குடா நாட்டில் எத்தனையோ பாடசாலைகளைக் காணவில்லை. கல்வி வல யங்கள் மாணவர்களின் எதிர்கால வளர்ச்சியைப்பற்றிச் சிந்தித்து செயற்பட பாதுகாப்பு வலயம் பாடசாலைகளை மண்ணோடு மண் ணாக்கிவிடுகின்றது. இடம் பெயர்ந்த பிரதான கல்லூரிகளான மகா ஜனா, யூனியன், வசாவிளான் ம. ம. வித்தியாலயம் போன்றவை தமது பழய இடங்களுக்கு இன்றும் போக முடியாத நிலை.

கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை தரம் I முதலியவற்றிக்கு இன விகிதாசார அடிப்படையில் கூட நியமனங் கள் நடைபெறவில்லை என்பதை தமிழர் ஆசிரியர் சங்கம் பலமுறை சுட்டிக்காட்டியும் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

பொதுவாகத் தமிழ் மாணவர்களிடையே உணவு, ஊட்டச்சத்து பற்றாக்குறை தீவிரமாக நிலவுவதையும் பள்ளி செல்லாமை, இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகல் அதிக அளவில் காணப்படுவதையும், 1999இல் வெளியிடப் பட்ட "தொண்டு நிறுவனங்களின் கூட்டறிக்கை" தெளிவாக எடுத் துக்காட்டி உள்ளது. இந்நிலை யாழ்ப்பாணக் குடாநாட்டில் என் றால், வன்னியில் எப்படி இருக்குமென்பதை எண்ணிப் பார்க்க முடி யுமா?

சுருங்கக் கூறின், சில பாடசாலைகளைக் காணவில்லை; மாண வர்களும் அடிக்கடி காணாமல் போகிறார்கள், பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு உரிய நேரத்திற்குப் பாடநூல்கள் கிடைப்ப தில்லை, இவர்களுக்கு ஊட்டச்சத்துப் பற்றாக்குறை, போன்ற பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி தமிழ் மாணவன் காணப்படுகின்றான். இந்நிலையில் "கல்விச் சீர்திருத்தம்" எந்த அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளிக்கும் என்பது கேள் விக்குறியே.

உசாத்துணைகள்:


1. Banks Olive, The sociology of Education, B. T, Batsfored L. T. D. London, 1968.

2. Dr. G. Das, Advanced Sociological theories; Manu Enterprises, Educational Publishers 1992, 1993.

3. Socio - Economic degradation, Jaffna peninsula, by council of NGOO, Jaffna District.

4. Education and nation buidieng in the third Worled, Edited by J. Lowe N. Grant T. D. Williams


---

The triumph of justice is the only peace.

நீதியின் வெற்றிதான் அமைதி எனப்படுவது.

- இங்கர் சால்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடத்தையும் உளமுகிழ்ப்பும்
## Behaviour and Temperment

கலாநிதி. சபா. ஜெயராசா

உளமுகிழ்ப்பும் **(Temperment)** நடத்தையும் தொடர்பான ஆய்வுகள் அண்மைக்காலமாகப் பல பரிமாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தொல்சீர் உளவியலாளர் வரிசையிலே குறிப்பிடப்படும் ஒல்பேட் (1937) என்பவர் உளமுகிழ் நிலையிலிருந்தே மனவெழுச்சிகளும், உளமூட்டங்களும் கிளர்ந்தெழுவதாகக் குறிப்பிட்டார். தோமஸ் மற்றும் செஸ் (1977) மேற்கொண்ட ஆய்வுகளில் இந்தக் கருத்தின் விரிவு தெளிவாயிற்று. உளமுகிழ்ப்பின் வெளிப்பாடாக நடத்தைக் கோலங்கள் அமைவதை அவர்கள் சுட்டிக் காட்டினர். இவ்வாறாக மனித நடத்தையுடனும், ஆளுமையுடனும் தொடர்புடைய உளமுகிழ்ப்பு விரிந்த ஆய்வுக்குரியது.

உள முகிழ்ப்பின் வெளிப்பாட்டு நிலைகளைப் பின்வருமாறு பகுத்தாராயலாம். **(Goldsmith and Campos, 1982, b. 22)**

1. குழந்தை நிலையில் காணப்படும் கணிப்பீடு செய்யப்படக் கூடிய வெளித்துலங்கும் நடத்தைகள்.

2. வளர்ந்தோரிடத்துக் காணப்படும் சிரிப்பு, அழுகை, கடுகடுப்பு, முக வெளிப்பாடு, இயக்க வெளிப் பாடு, குரல் வெளிப்பாடு, மொழிவெளிப்பாடு முதலியவை.

3. தனியாள் வேறுபாடுகளைத் துலங்கவைக்கும் மனவெழுச்சி வெளிப்பாடுகள்.

தமிழர்களுடைய பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்ட மெய்ப்பாடுகள் பற்றிய கருத்துக்கள், உளமுகிழ்ப்பின் இயல்புகளை ஒரு வகையிலே சுட்டிக்காட்டுபவையாக அமைந்தன. சித்த வைத்திய மரபில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமுகிழ்ப்புக்கும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம் பெரும் பூதங்களுக்குமுள்ள தொடர்புகள் குறித்துரைக்கப்பட்டன. உடலில் உள்ள நீர்மையே (நீரின்றியமையாது யாக்கை) உள முகிழ்ப்பை உருவாக்குகின்றது என்று சித்த வைத்திய மரபுவிளக் கியது சீன மரபில் யின் (Yin) யானங் (Yang) என்ற இருள், ஒளி வலுக்களின் சேர்மானமாகவே உளமுகிழ்ப்பு உண்டாவதாகக் கருதப் படுகின்றது. பொதுவான இந்திய மரபில் உளமுகிழ்ப்பு என் பது உடல், உள்ளம், ஆன்மா ஆகிய முப்பொருள்களின் சேர்மான மாகக் கொள்ளப்படுகின்றது.

இந் நூற்றாண்டில் வளர்ச்சியுற்ற உளவியல் ஆய்வுகள் உள முகிழ்ப்பை விளங்கவும், விளக்கவும் விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

பவ்லோவ் (1927) பிராய்ட் (1950) ஐஸ்நெக் (1969) கில் போர்ட் (1959) கற்றெல் (1950) ஒல்போட் (1961) ஸ்யோ பிறிங் (1973) முதலியோர் உள முகிழ்ப்புத் தொடர்பான விரிவான ஆய்வுகளை மேற்கொண்டனர்.

மனிதர்களுக்கு வேறுபட்ட நரம்புத் தொகுதிகள் உண்டென்றும், அவற்றுள் 'ஏ' வகைத் தொகுதிகள் ஒப்பீட்டளவில் இலகுவாகப் பயிற்சிக்கு உட்படுத்தக் கூடியவை என்றும் 'பி' வகைத் தொகுதிகள் இலகுவாகப் பயிற்சிக்கு உட்படுத்த முடியாதவை என்றும் பவ்லோவ் (1927) தனது ஆய்வுகூடப் பரிசோதனைகளில் இருந்து விளக்கினார். கற்றல், உளச்சிகிச்சை உள முகிழ்ப்பு முதலியவற்றை விளக்குவதற்கு இந்த ஆய்வுகள் அடிப்படையாக அமைந்தது. ஆயினும் நடத்தையிய லாளர் நரம்புத் தொகுதியின் இந்த வேறுபட்ட இயல்புகளை ஏற் றுக் கொள்ளவில்லை.

சிக்மன் பிராய்ட் (1950), மனித நடத்தைகளையும், உள முகிழ்ப் பையும் அறிந்து கொள்வதற்கு உள்ளம் என்ற தொகுதியை விளங்கிக் கொள்ளல் முக்கியமானது என்று குறிப்பிட்டுள்ளார். சிறப்பாக நன வில் உள்ளத்தோடு ஒருவரது உள முகிழ்ப்பும் தொடர்புடையது என் பது பிராய்ட்டின் வலியுறுத்தலாயிற்று.

தோமஸ் மற்றும் செஸ், மேற்கொண்ட ஆய்வுகள் (1968, 1977 1984) உள முகிழ்ப்புத்துறையில் புதிய பரிமாணங்களை வழங்கின. 141 தாயரையும் அவர்களது குழந்தைகளையும் ஆய்வுக்குட்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் குழந்தைக்கும் அதன் சூழலுக்குமிடையே நிகழும்பரிமாற்றத்தின் வழியாக எழும் தோற்றப்பாடுதான் உளமுகிழ்ப்பு என விளக்கினார். அதனை அடியொற்றி அவர்கள் குழந்தைகளிடத்துத் தனி வேறுபாடுகளை உருவாக்கும் பரிமாணங்களையும் குறிப்பிட்டனர். (Thomas and Chess, 1977 pp 21-22) அவை வருமாறு

1. செயற்பாட்டு மட்டம்:
உண்ணல், விளையாடல், தொழிற்படல் முதலியன.

2. இயங்குதலின் செறிவு:
துலங்கல்களிற் காணப்படும் வலு வெளிப்பாடு

3. ஒத்திசைவுக் கோலம் : (Rhythmicity)
நித்திரை, பசி, கழிவகற்றல் முதலியவற்றிலே காணப்படும் ஒழுங்கான செயற்பாடு.

4. சூழலோடு தழுவும் திறன்;
நிகழ்வுகளோடும் மாறும் சந்தர்ப்பங்களோடும், புதிய சுவிநிலையிலும் இசைவாக்கம் செய்யும் திறன்

5. துலங்கலை உருவாக்கும் மலர்ச்சி மட்டம்:
துலங்கலை ஏற்படுத்தக் கூடிய தூண்டியின் அளவும் வலுவும்.

6. தாங்கும் திறனும் கவன விரிவும்:
ஒரு செயற்பாட்டில் ஈடுபடும் நேரமும், தடைகள் வரினும் ஒரு செயலைத் தாங்கிச் செல்லக்கூடிய திறனும்

7. கவனக் கலைப் பான்களுக்கு வயப்படுதல்;
செயற்பாடுகளை மாற்றியமைக்கக் கூடிய தூண்டிகளின் இயல்பும் அவற்றின் செறிவும்.

8. உள மூட்டத்தின் தன்மை (Quality of mood)
மகிழ்ச்சி, துன்பம் என்ற எதிர்த் துருவங்கள் ஊடுருவியிருக்கும் இயல்பு.

9. அணுகுதலும் பின் வாங்குதலும்
புதிய தூண்டிகளுக்கு நேரான அல்லது எதிரான தூண்டிகளை வழங்கும் துலங்கற் கோலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடைய ஆய்வு பெருமளவிலே தோற்றப்பாடுகளை அடி யொற்றியதாகவே அமைந்தது. பஸ், மற்றும் பொல்மின் (1975) மேற் கொண்ட ஆய்வுகளில் உள முகிழ்ப்பின் நான்கு பரிமாணங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவை:

1. மனவெழுச்சி வயப்படல்.
2. உள முகிழ்ப்புடன் இணைந்த செயற்பாடு.
3. சமூகமயப்பாடு.
4. உந்தல் வயப்படல்.

இந்த நான்கும் Easi என்ற சுருக்க வடிவத்தாற் குறிப்பிடப்படும்.

உள முகிழ்ப்பைப் பற்றி ஆராய்ந்த ஒருசாரார் அதன் மையப் பொருளாக மனவெழுச்சியை அமைத்து விளக்கினார். இன்னொரு சாரார் உளமுகிழ்ப்புடன் தொடர்புடைய சமூகமயமாக்கலையும் சமூகத்திறன்களையும் விளக்கினர். உளமுகிழ்ப்புடன் தொடர்புடை யதாகக் குழந்தைகளிடத்துக் காணப்படும் பாலியல் உணர்வு வேறு பாட்டை புளொக் (1976) ஆய்வுக்கு உட்படுத்தினார். சிறுவர்களிடத்து காணப்படும் உள முகிழ்ப்புடன் தொடர்புடைய மன முரண்பாடுகளைது ஹே மற்றும் றொஸ் (1982) ஆய்வு செய்தனர். அறிகை கோலங் கள் உள முகிழ்ப்புடன் எவ்வாறு இணைந்துள்ளன என்பதை வேகுன் மற்றும் கொப் (1983) ஆய்ந்தனர். தம்மைத் தாமே ஒழுங்குபடுத்தும் பண்பானது (Self regulation) உள முகிழ்ப்புடன் இணைந்துள்ளமை யை புளொக் மற்றும் புளொக் (1980) ஆய்வு செய்தனர்.

உள முகிழ்ப்புக்கும் ஒருவர், தம்மைத்தாம் பார்க்கும் தற் புலக் காட்சிக்கும் (Self Perception) இடையேயுள்ள தொடர்புக்களை செல்மன் (1980) மற்றும் கேகன் (1983) ஆய்வு செய்தனர். தம் மைப் பற்றிய புலக் காட்சியானது ஒரு குழந்தைக்கு இரண்டு வய தளவிலேயே தோன்றிவிடுவதைக் கேகன் தமது ஆய்வுகளின் வழியா கக் கண்டறிந்தார்.

உயிரியல் சார்ந்த பண்புகளும் வாழ்க்கை நிலைமைகளால் திரட் டிக் கொள்ளப்பட்ட பண்புகளும் ஒன்றிணைந்து உள முகிழ்ப்பை உருவாக்குகின்றன என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கோட்பாடாகும். உடலியற் பண்புகளும் ஒன்றின் மீது ஒன்று தாக்கம் விளைவிக்கும் நிலையின் மேற்கிளம்பலே உள முகிழ்ப்பு என்று குறிப்பிடுகின்றனர். வேறு சில ஆய்வாளர் எழுச்சி ஆட்சி, ஊக் கள் ஆட்சி, அறிகை ஆட்சி ஆகிய முப்பொருளுக்குமிடையே நிகழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களின் மேற்கிளம்பல் தான் உள முகிழ்ப்பு என வரையறை செய்கின்றனர். சிறுவர்களது முதிர்ச்சியின் கோலங்களுக்கும், அறிகை மட்ட முன்னேற்றங்களுக்கு முள்ள தொடர்புகளை ஆழ்ந்து நோக்க வேண்டியதேவை இச் சந்தர்ப்பத்தில் முக்கியமான தென்பதும் வலியுறுத்தப் படுகின்றது. (Rothbart and Derryberry 1981, p. 394)

சிறுவர்களின் உள முகிழ்ப்பை விளங்கிக் கொள்வதற்கு பெற்றோர்களின் அவதானிப்பு அறிக்கைகளை ஆராய்ந்து விளக்கும் ஒரு முறையியலும் காணப்படுகின்றது. மூன்றுவயது தொடக்கம் ஏழுவயது வரையிலான குழந்தைகளின் பெற்றோர்களின் அவதானிப்புக்கென பின்வரும் சில மாதிரி வினாக்கள் வழங்கப்பட்டன.

1. பூங்காக்களுக்கு அல்லது விழாக்களுக்குச் சென்றால் எமது சிறுவர்கள் முன்பின் பழக்கமில்லாதவர்களுடன் தயக்கமின்றிச் சேர்ந்து விளையாடுகின்றார்கள்.

2. கடைத் தெருவுக்குப் போகும் பொழுது யாதாயினும் பொருள்களைக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்காவிடில் அவர்கள் அழுது புலம்பத் தொடங்கி விடுகின்றார்கள்.

3. சிறுவர்கள் முன்பின் பழக்கமில்லாத வேறு சிறுவர்களைக் காணும் பொழுது வெட்கமும், கூச்சமும் அடைகின்றனர்.

4. சிறுவர்கள் விருப்பமான ஒரு செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது பெற்றார் அழைத்தால் சினம் அடைகின்றார்கள்.

5. விருப்பமான ஓர் இடத்துக்குச் செல்லும் பொழுது சமநிலையின்றி முண்டியடித்துக் கொண்டு சிறுவர்கள் ஓடுகின்றார்கள்.

6. சிறுவர்களின் கழிவகற்றும் நேரங்களில் ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன.

7. சிறுவர்கள் கூடுதலாக அவதிப்படுகிறார்களா? சமநிலையுடன் தொழிற்படுகின்றார்களா?

8. விருப்பமற்ற உணவுகளுக்கு அவர்கள் எவ்வாறு துலங்குகின்றார்கள்.

9. பசி வரும் பொழுது அவர்களது வெளிப்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தூக்கத்திலிருந்து தட்டியெழுப்பும் பொழுது அவர்களின் துலங்கல் எவ்வாறு உள்ளது?

11. எச்சந்தர்ப்பங்களில் அவர்கள் பலத்த சப்தம் வைத்து அழுகின்றார்கள்?

12. சராசரியான ஒரு நாளில் கூடுதலான அழுகை வெளிப்படுகின்றதா? சிரிப்பு வெளிப்படுகின்றதா?

13. தனித்த நிலையில் அவர்கள் பொம்மைகளுடன் விளையாடும் பொழுது எத்தகைய துலங்கல் ஏற்படுகின்றது.

14. இராப்பொழுதில் சிறுவர்களின் துலங்கலில் பகற்பொழுதிற் காணப்படாத பண்புகள் இடம் பெறுகின்றனவா?

தமிழ் மரபில் ஒருவரது உளமுகிழ்ப்பைக் குறிப்பிடுவதற்குப் பல எண்ணக்கருக்கள் பயன் படுத்தப் படுகின்றன. அவற்றுள் சில வருமாறு

| | | |
|---|---|---|
| (1) கொதியன். | (2) நெருப்பன் | (3) சாது |
| (4) பசு | (5) நஞ்சன். | (6) சுட்டி |
| (7) சுழியன் | (8) தூங்கி | (9) பயந்தான் கொள்ளி |
| (10) பொறுக்கி | (12) அவியல் | (13) அமுசடக்கி |
| (14) வெளிவாயன் | | |

உளமுகிழ்ப்பின் நெகிழாத்தன்மையானது ஒருவரிடத்து நடத்தைப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுகின்றது சிறுவர்களின் உளமுகிழ்ப்பு உருவாக்கத்திலே குடும்பத்தொடர்புகள் பெரும் செல்வாக்குவகிப்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. துருதுருவென்றிருக்கும் சிறுவர்களுக்கு அறைகூவல்விடுக்கும் செயற்பணிகளைக் கொடுக்காதவிடத்து அவர்களது உளமுகிழ்ப்பில் எதிர் மறைக்கோலங்கள் தோன்றுதலும் நடத்தைப் பிறழ்வுகள் ஏற்படுதலும் கண்டறியப்பட்டுள்ளது. இது ''கவனக்குறைப்பால் எழும் நடத்தைப்பிறழ்வு'' என்று குறிப்பிடப்படும்.

ஒருவரது உளமுகிழ்ப்பானது நுண்மதியுடன் நேரடியான இணைப்பைக் கொண்டிராவிடினும், பள்ளிக்கூட இசைவாக்கம் வகுப்பறை இசைவாக்கம், குறித்த மாணவர் மீது ஆசிரியர் செலுத்தும் அணுகுமுறை முதலியவற்றில் செல்வாக்குச் செலுத்துதலை ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர். (Keogh, 1982) சிறுவர்கள் வளர்ச்சியடைய அறிக்கையில் ஏற்படும் மாற்றங்கள், உளமுகிழ்ப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக சிறுவர்களின் உளமுகிழ்ப்புடன் இணைந்த பிறழ்வு நடத்தைக் கோலங்கள் மூன்றுவகையாகப் பகுத்தாயப்படுகின்றன.

அவையாவன:

(1) அதிக உடலியக்கச் செயல் முறைகளினால் தோன்றும் உடல் சார்ந்த பிரச்சினைக் குரிய நடத்தைகள்.

(2) எதிர்புக்குணவியல்பும் வன் நடத்தைக்கோலங்களும்.

(3) கூச்சமும் சமூகச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்குதலும்.

இவ்வாறாகப் பல்வேறுகோணங்களிலே உளமுகிழ்ப்பைப் பகுத்தாராயக் கூடியதாக இருப்பினும், அதனைத் திட்டவட்டமான அளவீட்டுமுறைக்குள் கொண்டுவந்து அலகிடக் கூடிய வழி முறைகள் இன்னமும் எட்டப்படவில்லை என்பதையும் இத்துறையில் மேலும் ஆய்வுகள் வேண்டப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

## உசாத்துணைகள்:


1· Allport, G.W. Pattern and Growth in Personality, New York; Holt, Rinehart and Winston (1961).

2. Bates, J. The concept of difficult Temperament, Merrill palmer Quarterly, 26-299-319. (1980)

3. Buss, A,H. and Blomin, R Early developing personality traits, Hillsade, NJ Lawrence Erlbaum. (1980)

4. Freud, S. Collected Papers, 5, 316-330. (1950)

5. Kegan, R. The evolving Self, Hawara University Press (1983)

6. Polmin, R. and Dwnns, J. The study of early temperament New Yersey, Erlbaum. (1986)

7. William T. Garrison, and Felton J. Earls, Temperament and Child Psychopathology. Sage, London. (1987)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச் சிதைவு நோய்
## Schizophrenia

பா. விக்னராணி

மனநோயானது உடலியல், உளவியல் மற்றும் சமூகவியல் காரணங்களினால்தான் தோன்றுகிறது. பேய், பிசாசு, காற்று, கறுப்பு, தெய்வக் குற்றம், மந்திரம், மாயாஜாலம், பில்லி சூனியம் போன்றவற்றால் இவை ஏற்படுவதில்லை என மருத்துவ ரீதியாக மறுக்கப்படுகின்றது. எனினும் இவற்றினை நம்புவோர் நம் மத்தியில் இல்லாமல் இல்லை. உடலமைப்பு பாரம்பரியம், குடும்பச் சூழ்நிலை, சமூக - கலாசார - பொருளாதார நிலைகள், பண்பியல் தொகுப்பு மற்றும் மனவளர்ச்சி போன்றவற்றில் குறைபாடுகள் ஏற்படும் போது மனநோய் ஏற்படுகின்றது. அசாதாரண சூழலுக்கான சாதாரண விளைவே மனநோய் என வரையறுக்கப்படுகின்றது.

மனநோய்க்கான சமூக காரணிகளை நாம் விரிவாக நோக்குமிடத்து, ஒவ்வொரு மனிதனின் பண்பியல் தொகுப்பு முதிர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது குடும்பச் சூழ்நிலையே ஆகும். குறையற்ற குடும்ப அமைப்பும் சூழ்நிலையும் அக் குடும்பத்தினரது மனநலம் சீராக இயங்கப் பெரிதும் உதவுகின்றன. பெற்றோர் செய்யும் தவறுகள், அளவுக்கதிகமான கட்டுப்பாடு, குழந்தையின் திறமைக்கு மீறிய எதிர்பார்ப்பு, ஒழுக்க முறைகளைத் கற்றுத் தருவதில் ஏற்படும் முரண்பாடுகள், பெற்றோரின் ஒழுக்க குறைகள் முதலியன குழந்தையின் பண்பியல் தொகுப்பு வளர்ச்சியைப் பாதிக்கும். மேலும் குடும்பத்தின் முரண்பாடு அடிக்கடி இடம் பெயர்வதால் ஏற்படும் மொழி, கலாசார, பழக்க வழக்கக் குழப்பங்கள் முதலியனவும் குழந்தையின் மன நலம் கெடத் தூண்டுகோலாக அமைகின்றன.

அளவுக்கதிகமான வேலைப்பளு திறமைக்கு மீறிய வேலை, திருப்தியற்ற வேலை, மேலதிகாரியின் அச்சுறுத்தல், பதவி நீக்கம் போன்ற பல்வேறு காரணங்களும் மனநோய்க்கு வித்திடுகின்றன. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி பஞ்சம், போர், திடீரென ஒருவரின் மரணத்தால் ஏற்படும் அதிர்ச்சியும் ஏதாவது ஒரு தோல்வியால் ஏற்படும் கவலை, வெட்கம், குற்ற உணர்வு, பயம், பதட்டம், தன்னைப்பற்றி சரியாக உணர்ந்து கொள்ளாத நிலை, போன்ற காரணிகளும் மனநோய் வருவதற்கு தூண்டுகோல்களாக அமையலாம்.

உடலில் சுரக்கும் பலவகை ஹார்மோன்களின் மாற்றங்கள், உடல் தளர்ச்சி, அறுவைச் சிகிச்சைகால மாறுபாடுகள் இவைதவிர மது, கஞ்சா, அபின், போதை மாத்திரைகள் போன்றவைகளைத் தொடர்ந்து உபயோகித்தலும், தொடர்ச்சியான தூக்கமின்மை, தொற்று நோய்களும், வலிப்பு நோயும், தலையில் ஏற்படும் காயங்களும், பல வைட்டமின்களின் பற்றாக்குறையும், உடல் நோய்களுக்காக சாப்பிடும் மாத்திரை, மருந்துகளின் அளவு அதிகரித்தலும், திருமண வாழ்வில் ஏற்படும் பிரிவு, விவாகரத்து, உடலுறவில் ஏற்படும் ஏமாற்றங்கள், காதல் தோல்வி, வேலையின்மை, தனிமை என மனநோய்க்கான காரணிகளின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

இக் காரணிகளை நாம் தெளிவாகப் பார்ப்போமானால் மனநோய் ஏற்படாது பாதுகாப்பதில் சமூகம் கொண்டிருக்க வேண்டிய பாரிய பொறுப்பினை உணரமுடியும்.

மனநோயினை தடுப்பதில் நாம் பாரிய பொறுப்பினை வகிப்பதற்கு மனநோய்க்கான அறிகுறிகளை தெளிவாக அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

### i) சிந்தனையில் குழப்பம்:-

அதாவது மனநோய் உள்ளோரின் சிந்தனையானது அவரது அறிவிற்கும், அனுபவத்திற்கும் பொருத்தமற்றதாக இருக்கும். பெரும்பாலும் இவர்கள் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பார்கள். கூறும் விடயத்தில் ஒன்றுக்கொன்று தொடர்பிருக்காது.

### ii) தவறான நம்பிக்கைகள்:-

மற்றவர்கள் செய்யும் எந்தக் காரியமும் தன்னைத் துன்புறுத்த அல்லது கொலை செய்ய என்று எண்ணி நம்புவது. நான் மிகவும்சக்தி வாய்ந்த மனிதன் என்றும், தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்றும் சொல்வது. உதாரணமாக, நான் இயேசுவின் மறு அவதாரம் என்றோ, நாட்டின் ஜனாதிபதி என்றோ உயர்த்திக் கூறுவர். சில நோயாளிகள் தாம் இறந்து விட்டதாகவும், தம்மைச் சுற்றி இருக்கும் எல்லாமே உயிரற்றுப் போய்விட்டதாகவும் நம்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii) உணர்ச்சி மாற்றங்கள்:—

அதாவது நோயாளி அழவேண்டிய நேரத்தில் சிரிப்பதும், சிரிக்க வேண்டிய நேரத்தில் அழுவதுமான செயல்கள். அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையும், உற்சாகமும் கொண்டு இங்கும் அங்கும் சுற்றியலைந்தும், பேசியும் திரிவர். சிலர் எவ்வித உணர்ச்சியுமில்லாத மரக்கட்டை போல் இருப்பர்.

## கண்ணோட்டத்தில் மாறுபாடு:—

இது பலவகைப்படும். மாயத்தோற்றம், கண்ணெதிரில் எந்தப் பொருளும் இல்லாத நிலையில் பொருளோ, மனிதரோ, மிருகமோ கண்ணெதிரே நிற்பதாகக் கூறும்நிலை. கடவுள் வந்து நிற்பதாகவும் கூறுவார். மாய ஒலி - யாருமே அருகில் இல்லாத போதும், யாரோ பேசுவது, கட்டளையிடுவது போன்று கதைப்பார், கட்டளைப்படி செய்வார். இதிலெல்லாம் ஆபத்தானது, தன்பக்கத்திலுள்ள ஒருவர் தன்னைப்பற்றி கேவலமாகப் பேசுகிறார் என்று எண்ணி அவர் மீது பாய்ந்து அடித்து நொறுக்க ஆரம்பிப்பது. இது போன்றே போலி வாசனை, போலிச் சுவை, போலித் தொடு உணர்ச்சி போன்றனவும் இவர்களுக்கு ஏற்படும்.

ஞாபகசக்தி குறைகள், செயல் மாற்றங்கள், சுய உணர்வில் மாற்றங்கள், தூக்கக்குறைபாடுகள், பேச்சு, எழுத்துக் குறைகள் போன்றனவும் மன நோயினை வெளிக்காட்டும் மேலும் சில அறிகுறிகளாகும்.

இவ் அறிகுறிகளில் ஓரிரு அறிகுறிகளே முதலில் தோன்றலாம். எனவே ஓரெயொரு அறிகுறிகளாக இருப்பினும், அதைக் குடும்பத்தினர் மிகவும் கவனமாக அறிந்து உடனே மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று தகுந்த ஆலோசனை பெற்று சிகிச்சையளிக்க முயல வேண்டும். இவ்வாறு செய்தால் நோய் முற்றிலும் குணம் பெற அதிக வாய்ப்பு உண்டு.

மன நோய்களில் பலவகையுள. அனைத்துமே ஒரேமாதிரியான அறிகுறிகளையும், விளைவுகளையும் ஏற்படுத்துவன அல்ல. எம்மத்தியில் பொதுவாக கூறப்படுவது போன்று மனநோய் எல்லாமே 'பைத்தியம்' அல்லது 'விசர்' அல்ல. இவற்றினை வேறுபடுத்தி பார்க்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். இவ்வாறு வேறுபடுத்திப் பார்க்குமிடத்தே மனநோய்களில் 'மனச்சிதைவு' நோயின் தாற்பரியத்தை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநோய்கள் பொதுவாக இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன, உளமாய நோய் (Psychosis) உணர்ச்சிக் கோளாறுகள் (Neurosis) என்பனவாகும். உளமாய நோயினுள்ளே மனச்சிதைவு நோய் (Schizophrenia), பித்து (Mania), உளச்சோர்வு (Depression) என்பன அடங்கும், உணர்ச்சிக் கோளாறுகளுக்குள், உள நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோய் (PTSD), உளம்சார் உடல் நோய் (Psychosomatic Disease), இசிவு நோய் (Hysteria) பதகளிப்பு (Anxiety), எதிர்த்தாக்க மனச்சோர்வு (Reactive Depression) என்பன போன்ற மனநோய்கள் உள்ளடக்கப்படுகின்றன.

மனநோய்களுள் மிகப்பரவலாக, அதிக நபர்களைப் பாதிப்பது 'மனச்சிதைவு' நோயாகும். இந் நோய் உலகம் முழுவதற்கும் பொதுவான ஒரு நோயாக இருக்கிறது. ஏறத்தாழ எல்லா இடங்களிலும் ஒரே விதமான பரப்பல் காணப்பட்டாலும் இலங்கைத் தமிழரைப் பொறுத்தளவில் இந்நோய் சற்று அதிகமாகவே காணப்படுகின்றது. தமிழர் மத்தியில் அண்ணளவாக நூறு பேருக்கு ஒருவர் என்ற கணக்கில், இந்நோயால் பாதிப்புற்றவர்கள் இருக்கின்றார்கள்.

இந்நோய் தோன்ற பரம்பரை முக்கிய காரணியாகக் காணப்படுகிறது. இந்நோய்க்குரிய காரணங்கள் பற்றி கடந்த 50 வருடங்களில் நடத்தப்பட்ட பல ஆராய்ச்சிகள் இதை நிரூபிக்கின்றன. ஒரே கருவில் தோன்றிய இரட்டையராயின் இவ்வபாயம் 85% என்றும், இரு கருக்களில் தோன்றியவராயின் 45% என்றும் பொதுமக்களுக்கு இந்நோய் வரும் அபாயத்தைக் காட்டிலும் மனச்சிதைவு நோயாளியின் சகோதரர்களுக்கு இந்நோய் வரும் அபாயம் 15% அதிகம் என்பதும் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்நோய்க்குரிய காரணி

நிறமூர்த்தங்களால் கடத்தப்படினும், நிச்சயமாக அடுத்து வரும் சந்ததியினர் இந்நோய்க்கு ஆளாகி விடுவார் என்று கூறமுடியாது. நோய்க்காட்படாது, சுகதேகியாகவும் இருக்கலாம். ஆனால் நெருக்கடியான சூழல் ஏற்படும் போதும், நெருக்கடிகள் அதிகரிக்கும் போதுமே இந்நோய் வெளிப்படும். தற்போது எமது நாட்டுச்சூழலைப்பொறுத்தவரை யுத்தம் ஒரு நெருக்கடி நிறைந்த சூழலாகும். உடலிலுள்ள பல்வேறு நாளமில்லாச் சுரப்பிகளின் ஹார்மோன்களில் ஏற்படும் மாறுபட்ட நிலை, உடல் நோய்கள், திடீரென ஏற்படும் அதிர்ச்சியான சம்பவங்கள் போன்றவையும் இந்நோய்க்கு வெளித்தோன்றத் தூண்டுகோல்களாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தவிர குடும்பச் சூழ்நிலையும் முக்கிய பங்கை வகிக்கின்றது. குழந்தை வளர்ப்பு முறைகளில் ஏற்படும் எல்லா வகைக்குறைபாடுகள், குடும்ப உறவுகளில் குழந்தையின் சக்திக்கு மீறிய திறமைகளைக் குடும்பத்தினர் எதிர்பார்ப்பதும் மிக அதிக சலுகைகள் தருதலும். பெற்றோர் தாம் அடைய இயலா உன்னத நிலைகளைத் தங்கள் குழந்தைகள் மூலம் அடைய வேண்டுமெனக் கனவு கண்டு செய்யும் பிரயாத்தனங்களும் குழந்தையின் மனதைப் பாதிக்கின்றது.

சமூக உறவுகளில் தாய் – சேய் உறவே மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் என மன ஆய்வுக் கொள்கை தெரிவிக்கின்றது. மனச்சிதைவுற்ற தாயின் முறையற்ற பராமரிப்பில் வளரும் குழந்தைகள் எரிச்சலுணர்வுடனும், சோகத்துடனும் இருப்பதைக் காண்பதிலிருந்தும் மேற்கூறிய கருத்தின் உண்மை புலனாகிறது. பின்னாளில் ஏற்படும் சமூக உறவுகளும் தாம்பத்திய உறவுகளும் சரிவர மலர்வதில்லை எனக் கூறப்டுகின்றது.

ஒற்றுமையற்ற குடும்பம், குடும்பத்தின் சீற்ற உணர்வுகளுக்கு வடிகாலாகக் குழந்தை உபயோகிக்கப்படும்போது, பெற்றோரில் ஒருவர் மனப்பாதுகாப்புக் கவசங்களான குற்றம் சுமத்துதல், மறுத்தல், நொண்டிச் சாட்டு முதலியவற்றை அதிகமாக உபயோகித்தாலும், பலாத்காரமான காம இச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தாலும், அத்தகைய குழந்தை சமூக உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் திறனற்று பிறரிடம் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளும், வாய்ப்புகள் இன்றி பிறரைச் சார்ந்து வாழ்ந்து பின் இந்நோய்க்கு ஆளாகும் அபாயமுண்டு.

இந்நோய் பெரும்பாலும் குமரப்பருவத்தினரையும், வாலிபப் பருவத்தினரையும் தாக்குகிறது. எனினும் சிறுவர் விதிவிலக்கல்லர். குமரப்பருவத்தில் மிக அதிகப்பேர் மனச்சிதைவு நோய்க்கு ஆட்படுவதற்கு அப்பருவத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளும் காரணமாயமையலாம்.

மனச்சிதைவு நோயினை மிதமான மனச்சிதைவு நோய் (Simple Schizophrenia) குமரப்பருவ மனச்சிதைவு நோய் (Hebephrenia) நோயாளி அனேகமாக மணமாகாதவராகவும், வேலையற்றவராகவும் இருப்பார். நோயின் அறிகுறிகளாக, பொருளற்ற சிரிப்பு, கண்ணாடி முன் நின்று அடிக்கடி தன் அழகு பார்த்துச் சிரிப்பது, அங்க சேட்டைகள், பண்பாடு சிறிதுமின்றி உணவினை அதிவேகத்துடன் உண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணல் போன்றவற்றை காணலாம். விறைப்புச் சார்ந்த மனச்சிதைவு நோய் ( Catatonic Schizophrenia ) - வசதிபடைத்தவர்களை விட சமூகப் பொருளாதார நிலையில், பின்தங்கியவர்களையே அதிகமாகப் பாதிக்கின்றது. இந்நோய் 15 முதல் 25 வயதுக்குட்பட்டவர்களிடமே அதிகம் காணப்படுகின்றது. குறிப்பாக பெண்களுக்கு இந்நிலை அதிகளவில் ஏற்படுகின்றது. - இவர்கள் எதிலும் விருப்பமின்றி உணர்ச்சி மழுங்கி, கனவுலகில் சஞ்சரிப்பர். சிலர் நாற்காலியின் விளிம்பில் அல்லது தரையில் பதுங்கிய விநோதமான, கடினமான அங்க நிலைகளில் இருப்பர். இதனைமாற்ற எவரேனும் முயற்சி செய்தால் அதைத் தீவிரமாக எதிர்ப்பார் - விறைப்பு சார்ந்த உன்மத்த நிலையினர் (Ecatatonic Excitement) ஒரு குறுகிய இடத்திற்குள் திரும்பத் திரும்ப ஒரேமாதிரிச் செயல்களை அலுக்காமல் செய்து கொண்டிருப்பர் எதிரிலுள்ள அப்பாவிகளைத் திடீரென தாக்குவர். அல்லது ஜன்னல்களை அடித்து நொறுக்குவார். அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை முன்கூட்டியே எவராலும் அறிய முடியாது. உணவு உண்ண மறுப்பதால் வேகமாக எடை இழந்து மெலிவதுடன் இந்நிலை நீடிப்பின் பிணியாளருக்கு மரணமும் சம்பவிக்கும் முறையான மருத்துவம் அவசியம். உடைகளைக் கிழித்துக்கொள்ளுதல், நிர்வாணமாக நிற்றல், முகம் சுளித்தல் முதலியன காணப்படும். - சந்தேகம் சார்ந்த மனச்சிதைவு நோய். (Paranid Scizophrenia) இந்நோய் 30 வயதுக்கு மேல் தான் தோன்றுகிறது. திருமணமானவர்களாக இருப்பர். இவர்களிடம் பொருத்தமற்ற, உண்மைக்குப்புறம்பான, தவறான நம்பிக்கைகள் மேலோங்கி நிற்கும் - மிகுந்த ஆவேச உணர்ச்சிகளுக்கு ஆளாவர். அப்போது அவர்களது செயல் மிகக் கொடூரமானதாகக் கூட இருக்கலாம். தன்னைப்பற்றி மிகப் பெருமையாக நினைத்துக்கொண்டு காரணமற்ற மனத்தளர்ச்சிக்கு ஆளாவர்.

இவற்றினை விட மனச்சிதைவில் சில வகைகளும் உள்ளன. இந்நோய்க்கான சிகிச்சை, நோயாளருக்கு ஏற்றச் சமூக சூழ்நிலையை உருவாக்குவது தான். பெற்றோர் தமது பிள்ளைக்கு மனநோய் ஆரம்பித்துள்ளது என்ற உண்மையை ஏற்க மறுக்கின்றனர், சமூகத்திற்கு பயப்படுகின்றனர். இதனால் நோயாளி சிகிச்சை பெறும் காலம் கடந்து விடுகிறது. எமது சமூகத்தில் மனநோய் பற்றி பலவிதமான தப்பபிப்பிராயங்கள் நிலவுகின்றன இதனால் மனநோய்வாய்ப்படுபவரும். அவரின் குடும்பம் முதலியன படும் துயரங்கள் சொல் அடங்கா, மனநோய் எற்பட்டுவிட்டது என்று முத்திரை இடப்பட்டவர் எதிர்நோக்கும் சமூக எதிர்ப்புகள் பாரதூரமானவை. அவர்கள் மீளக்குடும்ப, சமூக நீரோட்டத்தில் கலந்து ஒன்றிணையவிடாது ஒதுக்கி புறக்கணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. திருமணம், வேலை வாய்ப்பு, முதலிய சாதாரண முன்னேற்ற வாய்ப்புக்களும் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன, இந்த குழப்பமான போர்ச் சூழலில் பொதுமக்களும், போர்புரிபவர்களும் பல விதமான அழுத்தங்களுக்கு ஆளாகி உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

மனநோய்க்கு பொருத்தமான உதவியை நாடுவதில் தடைக்கற்களாக உள்ளவற்றில் முக்கியமானது, மனநோய் ஏற்படுவதற்கு கற்பிக்கப் படும் காரணங்களாகும். நாவூறு, மருத்தீடு, செய்வினை, சூனியம் பேய் பிசாசு பிடித்துவிட்டது என பல மூடநம்பிக்கைகள் நிலவுகின்றன. இதன் காரணமாக மக்கள் பார்வை பார்த்தல், நூல்கட்டுகல் பேய் துரத்துதல், மருத்திடு விழுத்துதல், வெறியாட்டம், தடி சவுக்கால் அடித் தல், துன்புறுத்தல் போன்றவை மேற்கொள்ளப் படுகின்றன. இத னால் வீண் நேர, செயற்பாடு விரயம், பணச்செலவினம், நோய் இன் னும் தீவிரமடைதல், சிக்கலானதாக மாறுதல் போன்ற பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டுமென உள நல மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மனநோய் பற்றிய அறிவை வளர்த்து சமூக மனப்பான்மையை மாற்றுவது எமது கடமையாகின்றது. மன நோய்க்கு சிகிச்சை பெறுவது, ஏனைய உடல் நோய்களிற்கு சிகிச்சை பெறுவது போன்று நோக்கப்படும் நிலை எமது சமூகத்தினர் மத்தி யில் ஏற்படவேண்டும்.

## உசாத்துணைகள்


1. Rita L. Atkinson, Richard C. Atkinson, Ernest R. Hilgard — Abnormal Psychology, Introduction to Psychology, Eighth Edition, Kareourt Brace Jovanovich, Psblishers 1982.

2. ஆன் சிந்தியா கிருஸ்ணகுமார் - மனநோயும் அவற்றின் வகைகளும், நான் உளவியல் சஞ்சிகை யாழ்ப்பாணம் – 1995.

3. டாக்டர் சோமசுந்தரம், ஓ. டாக்டர் ஜெயராமகிருஷ்ணன் தி. — எண்ணம் சார்ந்த முதிர் மனநோய்கள், மனநோயும், இன் றைய மருத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், சென்னை -1986.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம்
# Child Abuse

சின்னவன் ஸ்ரீபன்

இன்று சமூக பிரச்சினைகளில் சிறுவர் துஷ்பிரயோகம் இன்று முதன்மைதந்து நோக்கப்படும். அவர்களது உரிமைகள் பழக்கவழக்கங்கள் சிந்தனைகள் பறிக்கப்படுகின்றன. சிதைக்கப்படுகின்றன எனப்படுகின்றது. இவ்வாறு சிறுவர்களை குறுகிய மனப்பாங்கில் பயன் படுத்தி கொள்வதால் அவர்களது ஆளுமைகள் உடைக்கப்படுவது ஒரு புறம் இருக்க, மறுபுறத்தில் ஒட்டுமொத்தமாக ஒரு தீராத நோய்வாய்ப்பட்ட சமூகத்தையே எதிர் நோக்கி இருக்கும் நிலை காணப்படுகின்றது.

உலகளாவிய நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பிரச்சினை புரையோடிப் போய் இருக்கின்றது. 1990ம் ஆண்டு நோர்வே அரசாங்கம் ஐரோப்பிய நீதி அமைச்சருக்கு அளித்த அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் 10.00000 சிறுவர்கள் ஒன்றில் கடத்தப்படுகின்றார்கள், விற்கப்படுகின்றார்கள் அல்லது வேறு வழிகளில் பலாத்காரமாக பாலியல் சந்தைக்கு அனுப்பப்படுகின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ளது. இவற்றின் சரியான அளவுத்திட்டத்தை 1995ம் ஆண்டு UNESCO புள்ளிவிபரங்கள் உறுதி செய்யக்கூடும்.

| | | |
|---|---|---|
| 1. | பங்களாதேஷ் | 2000 18 வயதிற்கு கீழ் |
| 2. | சீனா | 200,000 – 500,000 18 வயதிற்கு கீழ். |
| 3. | பாகிஸ்தான் | 40,000 18 வயதிற்கு கீழ். |
| 4. | பிலிப்பைன்ஸ் | 60,000 18 வயதிற்கு கீழ். |
| 5. | ஸ்ரீலங்கா | 10,000 — 15000 18 வயதிற்கு கீழ் அனேகமாக ஆண்கள் (இன்று 20000 ஆக உயர்ந்துள்ளது) |
| 6. | தைவான் | 70000 18 வயதிற்கு கீழ். |
| 7. | தாய்லாந்து | 200,000 – 250,000 18 வயதிற்கு கீழ். |
| 8. | வியட்நாம் | 6000 16 வயதிற்கு கீழ். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட வேறு பல வழிகளிலும் இன்று சிறுவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி இருக்கின்றனர். 100 மில்லியன் சிறுவர்கள் வீதிகளில் வாழ்கின்றார்கள் அல்லது வீதிகளில் வேலை செய்கின்றார்கள். இதிலும் பாதிப்பேர் போதை வஸ்து பாவனை, பாலியல் துர்நடத்தைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இன்னுமொரு 100 மில்லியன் சிறுவர்கள் அவர்களின் வீடுகளில் இருந்தோ அல்லது தொழில் ஸ்தாபனங்களில் இருந்தோ அலட்சியப் படுத்தப்பட்டுள்ளனர் அல்லது வீணாக்கப்பட்டுள்ளனர்.

கிட்டத்தட்ட 100 மில்லியனில் இருந்து 200 மில்லியன் வரை 15 வயதிற்கு கீழ்பட்ட சிறுவர்கள் வேலை செய்கின்றனர். இதில் 100 மில்லியன் பேர் மிகவும் ஆபத்தான அல்லது சுரண்டப்படும் நிலையில் உள்ளனர்.

யுத்தங்களினால் உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் உட்பட 20 மில்லியன் சிறுவர்கள் இடம் பெயர்ந்தோ அகதிகளாகவோ உள்ளனர். உலகின் மொத்த அகதிகளின் எண்ணிக்கையில் 60-70% சிறுவர்கள் கிட்டத்தட்ட 200 மில்லியன் சிறுவர்கள் இன்று போசாக்கு அற்றவர்களாக உள்ளனர்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஆரம்ப பாடசாலைக்கு செல்ல வேண்டியவர்களில் 20% பேர் (100 மில்லியன்) பாடசாலைக்கு செல்வதில்லை. 30% மாணோர் நான்கு வருட கல்வியை கூட முடிக்க வில்லை.

சிறுவர்களது உரிமைகளை மீறுவதான அடிப்படை சட்ட மீறுதலை தடுப்பதற்காக உலக சபை ஒரு நடுநிலை மன்றத்தை உருவாக்கியது. ECPPAT (சிறுவர் விபச்சாரம் போதைப் பொருள் கடத்தல், சுரண்டல் இவற்றை கட்டுப்படுத்தும் நிறுவனம்) மூலம் உலக சபையின் உலக ரீதியான முதலாவது கூட்டத்தை UNICEF நிறுவனத்துடனும் சிறுவர்களின் உரிமைகள் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கான N.G.O குழுவினருடன் இணைந்து 1997 Aug 27-31 ம் திகதிகளில் நடத்தியது இங்கு சர்வதேச தலைவர்கள், பல்துறை அறிஞர்கள், கல்விமான்கள், சமூக நலன் விரும்பிகள், மத தலைவர்கள், தொழிலதிபர்கள் கலந்து சில முடிவுகளை முன்வைத்தனர்.

1. எல்லா நாடுகளிலும் அங்கிகரிக்கப்பட்ட சிறுவர் நலன் செயற்திட்டம் ஒன்று நிகழ்ச்சி நிரலாக கொண்டுவரப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

2. ஒருவர் மற்றவருடன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று ஒரு உளவியல் எண்ணக்கருவிலான அறிவை புகட்டவேண்டும்.

3. சிறுவர் மீதான வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டலை ஒழிக்க பல்வேறு அமைப்புக்களையும் ஒன்றிணைத்து இயங்கக் கூடிய அறிவை கொடுக்க இந்த மகாநாடு உதவியது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது போன்ற இவர்கள் ஒரு பொது இலக்கை நோக்கி அசைந்தார்கள் நாடுகளில் வறுமை, யுத்தம், சமூக ஏற்றத் தாழ்வுகள் இருக்கலாம், ஆனால் சிறுவர்களின் நலனில் பொது நோக்கமும் சிந்தனையும் வளர்க்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தனர். இதுவரை உலக பிரச்சினையாக கருதப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் இன்று இலங்கையிலும் தன் கொடிய கரங்களை விரித்துள்ளது.

## இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம்

1997ம் ஆண்டு அதி உயர்வான உல்லாச பிரயாணிகள் உள்வருகை இடம் பெற்றுள்ளது இலங்கையில் 114 ஹொட்டல்கள் 11498 அறை வசதிகளுடன் காணப்படுகின்றது 237135 பேர் வந்து போய் இருக்கின்றனர். இலங்கையில் மட்டும் 30,000 பேர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். இதில் பெரும்பாலானோர் ஆண்கள். 20000பேர் சிறுவர்கள். இவர்கள் குடும்பங்களின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாதபடியினால் இவர்கள் வேறுபல சமூக சீர்கேடுகளையும் உருவாக்குகின்றனர் 1997ம் ஆண்டில் மட்டும் பாலிய குற்றவாளிகள் என்ற அடிப்படையில் பெரும் குற்றங்களுக்காக மட்டும் 3460 பேர் தண்டனை பெற்றுள்ளனர்.

90% மாக உள்ள எழுத்தறிவு கணிப்பீட்டில் 20% மானோர் பாடசாலை இடைவிலகல் மூலம் வேலை தேடிச் செல்கின்றனர். மற்றும் வீட்டுவேலை, தோட்டவேலை, கடைவேலை என்று எங்குபார்த்தாலும் சிறுவர்களின் தேவை உணரப்படுகின்றது இதனால் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

சுமார் 1½ தசாப்தங்களாக இடம்பெறும் வடக்கு கிழக்கு யுத்தம் பல்லாயிரக்கணக்கான சிறுவர்களின் உயிரை பறித்திருக்கின்றது. அகதிகளின் எண்ணிக்கையில் சிறுவர்களின் தொகை 70% என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் உடல் உள தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதனைவிட பாலியல் தாக்கங்களினால் அவதிப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனைத்தடுக்க பின்வரும் அடிப்படைகளில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியது அவசிய அவசர தேவையாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நாம் இரகசிய தன்மையை அகற்றி விடயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

2. சிறுவர் துஷ்துரயோகம் செய்யப்படுவது நேரகாலத்துடன் இனங் காட்டப்பட வேண்டும்.

3. துஷ்பிரயோக சக்கரத்தை உடைக்கும் வகையில் அமைந்த சிகிச்சை நிகழ்ச்சித் திட்டம் ஒன்று இருக்க வேண்டும். அதாவது துஷ்பிர யோகத்திற்குட்பட்ட சிறுவர்கள் தாமே துஷ்பிரயோகம் செய்ப வர்களாக மாறலாம். துஷ்பிரயோகச் சக்கரம் உடைவதை நிச் சயப்படுத்தும் வகையில் அவர்களுக்குகந்த சிகிச்வசை அழிக்கப் பட வேண்டும்.

4. தடுப்பு நிகழ்ச்சி திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும்.

5. சுய விருத்தியும் சமூக விருத்தியும் எனப்படும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். பாலியற் கல்வி அந்நிகழ்ச்சித் திட்டத்தில் பகுதியாக அமைய வேண்டும்.

6. பிள்ளைகள் உங்களுக்கு ஏதாவது சொல்ல வரும்போது அதை பொறுமையுடன் கேட்க வேண்டும்.

7. குடும்பங்களின் பொறுப்புக்கள் பற்றி குடும்பங்களுக்கு அறிவூட்டு தல் வேண்டும்.

8. சிறுவர் தொடர்பான சட்டங்கள் ஆக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். துஷ்பிரயோகம் செய்பவருக்கான தண்டனைகளையும் உறுதிப்படுத்தவேண்டும்.

**உசாத்துணைகள்**

Frank Mcweigh, Modern Social Problems, Rinehart & Winston, 1978.

Christian Worker 1997 Oct.

News Week Sep 1996.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரும் ஊனமும்
# War and Disability

சு. ஜீவசுதன்

இன்று 3 ம் உலக நாடுகள் உள்நாட்டுப்போரை பெரும் சவாலாக எதிர் கொள்கின்றன. இதன் பிரதிபலிப்பாக உயிர் இழப்பு, சொத்துக்கள் அழிவு, அங்கவீனம் போன்ற இடர்பாடுகள் தோன்றுகின்றன. இவை உடனடியாக வெளித்தெரியும் பிரச்சினைகளாகும். இவற்றை விட பொருளாதார வளர்ச்சியின் இறங்கு முகம், உணவுப்பிரச்சினை, பண்பாட்டு விழுமியங்களின் சீரழிவு, வேலையின்மை என்று மறைமுகமாக பல்வேறுபட்ட இன்னல்களும் அழுத்தம் கொடுக்கின்றன.

உலகளாவிய ரீதியில் 1 ம், 2ம் உலகப் போர்களிற்குப் பின்னர் ஆசிய நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களே பெருமளவு அங்கவீனர்கள் தோன்றக் காரணமாகியுள்ளன, கம்போடியா, ஆப்கானிஸ்தான், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இந் நிலமை முடிவின்றித் தொடர்ந்து கொண்டுவருகின்றது.

ஒரு போர்க்குழுவால் இன்னொரு போர்க்குழுவை, அவற்றின் வாகன அணிகளை, நகர்வை இலக்குவைத்துப் புதைக்கப்படும் கண்ணி வெடிகள், மிதிவெடிகள் இன்று யுத்த களங்களிற்கு வெளியே மக்கள் வாழும் இடங்களில் பெருமளவில் விதைக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் எதிரிகள் முடமாக்கப் படுகின்றார்களோ இல்லையோ அதிகளவு அப்பாவிப் பொதுமக்களை முடமாக்குவதை இவ் வெடி பொருட்கள் செவ்வனே செய்து முடிக்கின்றன.

இந்த வகையில் இவ்வெடி பொருட்களால் மட்டும் ஏறத்தாழ 14 இலட்சம் பொதுமக்கள் பகுதியளவில் அல்லது முற்றாக அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இன்னும் யுத்தம் நடக்கும் நாடுகளில் அவற்றின் அச்சுறுத்தல் தொடரத்தான் செய்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் மிதி வெடி, கண்ணி வெடி என்பவற்றின் தாக்கம் தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலேயே திகில் கொள்ளவைக்கும் அளவில் காணப்படுகின்றது. இன்றைய நிலையில் யாழ்ப்பாணக்குடா நாட்டை மட்டும் எடுத்து நோக்கினால் குறைந்தது ஒரு நாளைக்கு ஒருவராவது மிதிவெடிகளால் அங்கவீனராக்கப் படுகின்றனர். முதியோர், சிறுவர்கள் பெண்கள், இளைஞர்கள் என சகல தரப்பினரையும் அவர்களின் வீட்டு வளவுகளில்வைத்தே அவர்களின் வாழ்வை, எதிர்காலத்தை அரைகுறையாகப் பிடுங்கியுள்ளன.

1990 க்கு முன் மிதி வெடிகள் யாழ் குடா நாட்டின் ஒதுக்குப்புறமான ஊர்களிலேயே மக்களைப் பதம் பார்த்துள்ளன. குரும்பசிட்டி, தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை கட்டுவன் போன்ற பகுதிகளிலேயே அனேகம் பேர் அங்கவீனராக்கப்பட்டுள்ளனர். எனினும் உள்நாட்டுப்போர் மக்கள் குடியிருப்பின் கதவுகளை வந்து தட்ட முற்பட்டபோது மிதி வெடிகள் கற்பனை கூடச் செய்யமுடியாதளவிற்கு மக்களின் வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் தோட்டங்கள், விளையாட்டுத்திடல்கள் என்று அவர்களுக்கு அதிகம் பரிச்சயமாகிய இடங்களில் வெடிப்பதற்காக குட்டி எரிமலைகளாக தூங்கிக்கொண்டு இருக்கின்றன நீர்வேலி கோப்பாய், கோண்டாவில் யாழ் நகரம் கொக்குவில் என எந்த ஒரு இடத்திலுள்ளவர்களும் பரஸ்பரம் மிதி வெடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். விமானக் குண்டுவீச்சு, ஷெல் மற்றும் விபத்துக்கள் இயற்கை நியதிகள் என்பவற்றால் அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை குறைய மிதிவெடிகளின் வடிவில் அவலம் தொடர்கிறது. எமது வளவுகளில்கூட கால்களை பார்த்து பார்துகாப்பாக பதிக்க வேண்டியுள்ளது. யாழ் போதனா வைத்தியசாலை. மந்திகை வைத்தியசாலை போன்றவற்றில் தினமும் இவற்றால் பாதிப்புக்குள்ளானவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றார்கள். ஜெய்ப்பூர் செயற்கை உறுப்பு தயாரிக்கும் நிறுவனமும் தம் உற்பத்தியை அதிகளவில் 'அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின் பின்னர் ஊனமாகிய மக்களிடையான கள ஆய்விடை இவ் ஆபத்துக்கள் எம் சமுதாயத்தின் மீது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. ஒரே வீட்டில் அண்ணன், தம்பி மற்றும் தகப்பன் மகன் நெஞ்சைக் கலங்கவைக்கும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன ஒரு தசாப்தத்திற்கு முன் வெறும் பத்திரிகைச் செய்தியாக அறிந்த இந்தச் சம்பவங்கள் இன்று எம்முன்னே சாட்சிப் பொருளாக விரிகின்றன. எமது அயலவர்களே இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்களுக்கும், ஊனத்திற்கும் உதாரணமாகிப் போய்விட்ட அவ லம், எமது அழிவுகளுக்கு நாமே சாட்சிகளாக விளங்குகின்றோம.

இவ் விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்கள் இன்றைய நிலையில் ஏதோ ஒருவகையில் செயற்கை உறுப்பு மூலமோ அன்றி பிறரின் உதவியுடனேயோ காலம் கழித்து வருகின்றனர். எனினும் முதுமை, தனிமை, வறுமை என காலவோட்டம் மாறுகின்றபோது இவர்களின் நிலை என்னவாக இருக்கும். இன்று பள்ளிச் சிறுவனாக, பெரிய தொரு குடும்பத்தைத் தனித்து தாங்கும் ஒரு சாதாரண தொழிலாளி யாக விளங்குபவர்களின் எதிர்காலம் என்ன? அரசால், வேறுதனியார் நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளும் எத்தனை நாள் தொட ரும்? போன்ற கேள்விகள் எனது கள ஆய்வுகளிடை தொக்கி நிற்கின் றன. என்றாலும் ஒரு சிலர் ஏதோ ஒரு நம்பிக்கையால் தமது வாழ் நாளை எதிர் கொள்கின்றனர். சிறு நம்பிக்கைக் கீற்று அவர்களுக்கு கைகொடுக்கத்தான் செய்கிறது. தமது துன்பத்தை புன்னகைகள் மூலம் வெற்றி கொள்கின்றனர். சிலரால் ஏக்கப் பார்வையும், பெரு மூச்சும் வெளிவிடப்படுகின்றன.

என்னதான் மீள் குடியேற்றம், அபிவிருத்தி, சுபீட்சம் என்று எமது நாட்டில் தொண்டை கிழியக் கத்தினாலும் இவ் நீண்டகாலத் துன்பத்திற்கு அவர்களால் விடைதர முடியுமா? உடைந்த கட்டிடங் களைத் திருத்தி, நிமிர்த்திக் கட்டினாலும் இவர்களின் பிரச்சினை நெருடிக்கொண்டிருக்காதா? எத்தனை இலட்சங்களைக் கொட்டிக் கொடுப்பினும் அது அவர்களுக்கு தகுந்த நிவாரணமாக இருக்குமா? என்ற கேள்விகள் மக்கள் மத்தியில் எழுப்பப்படுகின்றன.

என்னுடன் உரையாடிய 25 வயதுள்ள இளைஞன் ஒருவன் "நான் எந்தவித சிக்கல்களும் இன்றி வாழ்வை நகர்த்தி வருகின்றேன். சில வேளை துண்டிக்கப்பட்ட காலில் காலையில் மலம் கழிக்கும்போது பெரும் வேதனையாக இருக்கும்" என்றார். தனக்கு திருமணமும் பேசி வருவதாகவும் தான் இப்போதைக்கு அதை ஒத்தி வைத்திருப்ப தாகவும் கூறினார். இதே இளைஞனின் தகப்பன் பிறப்பின்போது கால் ஊனமாகி கைத்தடியின் உதவியுடனே நடந்து திரிகின்றார். இந்த இளைஞன் ஒரு புகைப்பட நிலையம் ஒன்றில் பயிலுனராக பணிபுரி கின்றார்.

இன்னொருவர் 5 பிள்ளைகளின் தாய். கந்தர்மடம் பகுதியில் வசித்து வருகின்றார். இடம் பெயர்ந்து வந்தபின் தனது வீட்டு வள வின் பின் புறத்தை துப்பரவு செய்யப் புறப்படுகையில் அங்குவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதி வெடியில் சிக்கி தன் காலை இழந்தார். நான் அவருடன் உரை யாடச் சென்றபோது கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தார். நான் வந்த விடயத்தைக் கூறியதும் அமைதியாக தனது அனுபவங்களைக் கூறினார். ''நான் எனது பிள்ளைகளைக் கஷ்ரப்படுத்துவதை விரும்பவில்லை. சிலவேளை எனக்கு உதவி செய்வதில் அவர்கள் சினத்தால் எனக்கு மனம் பொறுக்காது. முடிந்த மட்டும் நானே என் வேலைகளைக் கவனித்து வருகிறேன்'' என்று கூறி கண்கலங்கினார். மணமாகி தம்து பிள்ளைகள் தம் வழியில் சென்றுவிட்டால் தனது நிலை என்ன? என்பது அவரது மனக்கவலையை அதிகரிக்கும் விடயமாக இருந்தது.

இன்னொரு 9 வயதுச் சிறுவன் குறிப்பிட்ட சம்பவத்தின் பின்னர் அவன் முகங்களில் மிரட்சி துல்லியமாகத் தெரிகின்றது. துள்ளித் திரிய வேண்டிய வயதில் வீட்டு மூலைக்குள் முடங்கிக் கிடக்கின்றான். என்னுடன் ஆர்வமாக உரையாடினாலும் இடையிடையே வெறித்த வெற்றுப் பார்வையை தன்னைச் சுற்றி செலுத்தினான். அவன் நன்றாகப் படித்தவன், விளையாடித்திரிந்தவன். இன்று ஒருவருடனும் கதைக்கவோ அல்லது திரியவோவிருப்பமின்றி இருக்கிறான், என்று தாயார் கூறினார். இச்சிறுவனின் தந்தையும் 1988 இல் கட்டுவன் பகுதியில் மிதி வெடிச் சம்பவத்தில் தனது வலக் காலை இழந்தவர். என் கணனுக்கும், பிள்ளைக்கும் ஒரே கதி, ஊனம் என்பது தமது குடும்பச் சொத்தாகி விட்டதை நினைத்து அந்தப் பெண்மணி மனம் புழுங்கினார்.

பிறிதொரு வீட்டில் அண்ணன், தம்பி இருவரும் குடும்பத்தவர்கள். ஒரு மாத இடைவெளியில் இருவரும் மிதிவெடியில் சிக்கி அண்ணன் வலது காலையும் தம்பி இடது காலையும் இழந்துள்ளனர். வீட்டு வளவிலேயே இந்தச் சம்பவமும் நிகழ்ந்துள்ளது. அண்ணனுக்கு 5 பிள்ளைகள்; தம்பிக்கு 4 பிள்ளைகள்.

இவற்றோடு மர்மப் பொருட்கள், வெடிக்காத ஷெல் என்பனவும் அடிக்கடி மக்களைப்பதம் பார்ப்பதை பத்திரிகைகள் செய்திகள் வாயிலாக அறிகிறோம். மாசி மாதம் சங்கானையில் 15 வயதுச் சிறுவன் வன்னியில் இருந்து வந்து வீட்டுக்கதவைத் திறந்த போது உடல் சிதறிப் பலியாகி உள்ளான். இன்னொரு சிறுவன் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளான். அனலைதீவில் இரண்டு சிறுவர்கள் ஒரு விதமர்மப் பொருளை ஆவல் காரணமாக கல்லால் குத்தி உடைத்த போது உடல் சின்னாபின்னமாகிப் பலியாகியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாம் ஒரு சில உதாரணங்களே. இன்னும் எத்தனை எத்தனை உதாரணங்கள் எண்ணமுடியாத துயரங்கள் உள்ளன. யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் மட்டும் 100க்கு மேற்பட்டவர்கள் அங்கவீனர்களாகி உள்ளனர்.

இவற்றுக்கு மேலாக தென்னிலங்கையில் யுத்தத்தால் முடமாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமது எதிர் காலத்தை ஏக்கத்துடன் எதிர் கொண்டபடியுள்ளனர். இன்று நிதியுதவி, நன்கொடைகள், மற்றும் அரசியல் நோக்கில் வழங்கும் உதவிகள் எத்தனை நாட்களுக்குத் தொடரப் போகின்றன? நாளுக்கு நாள் ஊனமாகும் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அதற்கு ஏற்ப எமது நலிந்த பொருளாதாரத்தில் இருந்து நிதியை தொடர்ந்தும் ஒதுக்கமுடியுமா? இன்று யுத்த நோக்கில் அவர்கள் கவனிக்கப்பட்டாலும் நாளை நிர்க்கதியாக விடப்படமாட்டார்களா? என்ற கேள்வி யாவர் மனதிலும் எழுவது இயல்பானதே. காயமடைந்த, ஊனமான படையினரை பராமரிக்கும் நம்பிக்கை இல்லம் "Hope House" வேலைப்பழுவால் திணறிக்கொண்டு இருக்கிறது என்கின்றார்கள்.

இவை அனைத்தும் போருக்காக செலுத்தப்பட்ட எம் இயலாமைக்கு மேலான விலைகளாகும். எவ்வளவு செலவு செய்தும் மீளப்பெற முடியாத சொத்துக்கள்.

இறுதியாக இன்று யுத்தம் முடியும், நாளைமுடியும் என கால எல்லை தள்ளிப் போடப்பட்டே வருகின்றது. யுத்தம் ஏதோ காரணங்களைக் காட்டி முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் ஊனமாகும் மனிதர்களின் எண்ணிக்கையும் குறைந்தபாடில்லை. வடக்குக் கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மிதிவெடிகளை அகற்ற ஐ. நா வின் மேற்பார்வைக் குழு ஒன்று தமது பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது அதன் நடவடிக்கைகளுக்கும் அரசுமட்டத்திலிருந்து முட்டுக்கட்டைகள் கூடவே ஐ. நா. கண்ணிவெடித் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிடவும் பின்னடிப்புகள். இந்நிலையில் ஊனமான அரசியல் நிலைமை மாறும் வரை ஊனமாதலும் தொடர்விதிதான். தமது பணியை அவர்கள் முடிப்பதற்குள் எத்தனைபேர் அங்கவீனராகப் போகிறார்கள்?

உசாத்துணைகள்

ஜெய்பூர் நிறுவனத்தினருடனான செவ்வியும் கள ஆய்வும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவின் அரசியல்
# Politics of Knowledge

கலாநிதி என். சண்முகலிங்கன்

அரசியலின் ஆதிக்கம் படராத இடமில்லை. அதன் அதிகார விளையாட்டில் அறிவும் அரசியலாகும். கடந்த காலத்து அரசியல் தலையீடுகளை அறிவியலில் அதிகாரம் என்ற தலைப்பில் இன்றைய ஆய்வு முறையியல் வெளிப்படுத்தும் (Babbie, 1975). தலையீடு என்பதற்கும் அப்பால்; அரசியல் இலக்குகளுக்கு இசைவாக, சூழ்ச்சித் திறத்துடன் அறிவைக்கையாளுதல் இன்று அதிகரிக்கும். இதன் விளைவாக அறிவின் அரசியல் (Politics of knowledge) என்பதே இன்று தனித்ததோர் அறிவுப்புலமாகும். அறிவு தொடர்பான சமூகவியல் ஆர்வம் அறிவுக்கும் அதன் இருப்புக்குமிடையிலான உறவு தொடர்பானது (Stark, 1958) - சமூக விசைகளுக்கும் கருத்தியல் உருவாக்கத்திற்குமிடையிலான உறவினை விளங்குதலே அறிவின் சமூகவியல் (Sociology of knowledge) இலக்காகும். இந்த வகையில் அறிவின் அரசியல் தொடர்பான ஒரு சமூகவியல் பகுப்பாய்வாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

அறிவின் அரசியல் தொடர்பான இப்பகுப்பாய்வின் மூலங்களாக கடந்தகால சமூக, மானுடவியல் சார் ஆய்வு அனுபவங்களே பெரிதும் பயன் படுத்தப்படுகின்றன.

அறிவின் அரசியல் என்ற எண்ணக்கருவின் தோற்றத்துக்கும் விழிப்புணர்வுக்கும் தொடக்ககால மானுடவியல் ஆய்வுகள் பலவும் காரணமானவை இங்கு கவனத்திற்குரியதாகும். குடியேற்ற அரசுகளை அமைத்த ஐரோப்பியர்களும் பிற வணிக நிறுவனத்தினரும் அந்தந்த பகுதிகளில் வாழ்ந்த திணைக் குடியினரை (Native People) கட்டியாள்வதில் பல சிக்கல்களை எதிர் நோக்கினர். அதனால் அந்தந்த நிலப்பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினரை அறிய வேண்டியவர்களாய் இருந்தனர். கட்டாயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில் திணைக்குடியினர் பற்றிய இனக்குழுவியல் செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊக்கமளித்தனர். அவ்வகைச் செய்திகள் மூலம் அம்மக்களின் அரசியல் பொருளாதார முறைகளை நன்கு அறிய முடிந்தது. அதனால் அப்பகுதிகளில் உறுதியுடன் நிலை பெற முடிந்தது. (பக்தவத்சலபாரதி, 1990) இத்தகு உள்நோக்கங்களையும் தாண்டி மானுடவியல் தனித்ததோர் அறிவுத்துறையாய் வளர்ச்சிகண்டமை இன்று வரலாறாகும். மானுடவியல் போன்றே அதன் சகோதரத்துறையான சமூகவியலின் வளர்ச்சியும் அமையும். கால ஓட்டத்தில் அதன் கிளை விரிவுகளாய் புதிய புதிய அறிவுந்துறைகளும் எங்களைச் சேரும். எனினும் புதிய விரிவாக்கங்களிடை மறைகரமாய் அரசியலின் ஊடுருவலும் நிலை பெறுகின்றமை இன்றைய அறிவுலக அனுபவமாகும்.

குடியேற்ற நாட்டாதிக்கம் முடிந்த பின்னரும் அதிகார பரம்பரைகளுக்கு அரசியல் செய்யும் ஆசை விட்டதில்லை. ஆயினும் நேரடியாக ஆதிக்கம் செலுத்துவதற்கு பதிலாக அறிவின் வழியாக அலுவல்கள் திட்டமிடப்படுகின்றன. புதியபல அறிவுத்துறைகளின் பரம்பல் தொடர்பான நுண் ஆய்வுகளினூடேயில் அறிவின் அரசியல் கரங்களை தெளிவாகவே காணமுடியும் ( Garas, 1987 ).

ஒரு சமூகப்புலத்தை பரந்த நோக்கில் அறியும் தேடலை பெரும்பாக சமூகவியல் ( Macro Sociology ) என்போம்: அவ்வாறே குறிப்பாக ஆழ ஒரு பகுதியை நோக்கும் ஆய்வை நுண்பாக சமுகவியல் ( Micro Sociology ) என்போம். இந்த இரண்டுமே அறிவியல் முழுமைக்கு இன்றியமையாதன; இயல்பாய். அறிவியல் தேவையின் வழி வளர்க்கப்படுபவை. ஆனால் இந்த தேவையென்பது திட்டமிட்ட முறையில் அதிகாரத்துக்கும் அரசுக்கும் சேவகம் செய்யும் விதமாய் கையாளப்படுமிடத்து அது அறிவியல் என்ற வரையறை கடந்து அறிவின் அரசியலாகிவிடக் காணலாம்.

உலகமயமாக்கம் ( Globalization ) என்பது இன்றைய தாரக மந்திரங்களில் ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. இது வெறுமனே ஒரு வணிகக் கொள்கையாக வன்றி உலக அரசியல் ஒருமை, தொடர்பியல் வழியான உலக ஒருமை, உலகமயமாக்கப்படும் அறிஞர்களின் ஒருமை எனும் பன்முகங்களைக் கொண்டது. திட்டமிட்ட முறையில் உலகின் போக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையே மாற்ற முனைவது. இயல்பில் அறிவின் உருவாக்கம் என்பது சுதந்திரமான அறிவியல் தொழிற்பாடாக அமைய வேண்டியது. ஆனால் அறிவின் அரசியல் செல்வாக்கிடை அறிவின் உருவாக்கமும் முன் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்குகளை நோக்கிய கருத்தேற்றங்களாகும் ஆபத்து நிலைமைகளை இன்று பெருமளவில் சந்திக்க முடிகிறது.

ஆய்வு நிலையங்களுக்கு நிதி வழங்குதல், ஆய்வுக்கதிரைகளுக்கு அறக்கட்டளைகள் தரல், ஆய்வுத்திட்டங்களுக்கு ஆலோசனைகளும் மாதிரியங்களும் அன்பளிப்புச் செய்தல் என பலவழிகளிலும் இந்த அரசியற்கரம் நீளலாம். ஆய்வாளர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கியும் தமக்கு இதமான ஆய்வு ஏடுகளை பிரசுரம் செய்தும் அங்கீகாரம் வழங்கலாம். இந்நடவடிக்கைகள் எல்லாம் வெகு லாவகமாகவே நிகழும். வாங்கப்படும் அறிஞர் உணராமலே இழக்கப்படுதலும் சாதாரணமாகும்.

உலக அரங்கில் மிக மலிவாக வாங்கப்படக் கூடியவர்களாக அறிவு ஜீவிகள் உள்ளனர் என்ற பேராசிரியர் ஒருவரின் அண்மைய கூற்று இங்கு எம் கவனத்திற்குரியதாகும். (சிவசேகரம். 1999), இன்று அறிவென்பதே ஒரு சந்தைப்பொருளாகி நுகர்வுக் கலாசாரத்தின் முக்கியபகுதியாகும். அறிவு அரசியல் மயப்படுத்தப்படுவதுடன் பண்டமாக்கப்படும். உண்மைபோல செய்திகளும் நோக்கங்களும் தொடர்புவழி சேரவேண்டிய இடங்களைச் சென்றடையும்.

தனியே அரசியல் ஆதிக்கம் மட்டுமன்றி, அதனோடிணைந்து பொருளாதார, பண்பாட்டு ஆதிக்கங்களும் அறிவுப் போர்வையில் ஊடுருவக்காணலாம். மேம்பாடு ( Development ), நவீனமயமாக்கம் ( Modernization ) என்கின்ற பதங்கள் சமூகமாற்றம் தொடர்பான இன்றைய எழுத்துக்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவன. தேசிய அரசுகளினதும், சர்வதேச முகவர்களினதும் திட்டமிடல்களில் புறவயமாக அமையவேண்டிய இந்த பதங்கள், அரசியல் சார் வலைப்பின்னலுக்குள் அமிழ்ந்து போவதை காண முடியும். குறை விருத்தி நாடுகள், பின்தங்கிய நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள், புதியதாய் மேலெழும் நாடுகள், புதிய சனநாயகங்கள் என்றெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டப்படும் அபிவிருத்தி / மேம்பாடு தொடர்பான விவரணங்கள் தர்க்கரீதியான உண்மை நிலைமைகளை பிரதிபலிப்பனவா என்ற கேள்வியும் எழுப்பப்படும். அபிவிருத்தி என்ற பதப்பிரயோகமே மாக்ஸிய அரசியல் நோக்கில் பாரிய விமர்சனங்களுக்குள்ளாகக் காணலாம். லத்தின் அமரிக்க புலத்து அபிவிருத்தி / மேம்பாடு என்பது குடியேற்ற நாட்டாதிக்கம், சுரண்டல், தங்கிநிற்றல் என்கின்ற பொருள்களிலேயே விளக்கப்பட காணலாம். ( Frank: 1972 ).

நவீனமயமாக்கம் என்ற பதமும் இதே நிலையில் தான் இன்றுபல விமர்சனங்களை சந்திக்க வேண்டியுள்ளது குடியேற்ற நாட்டாதிக்க காலத்து ஐரோப்பிய மயமாக்கம் ஆங்கில மயமாக்கம், அல்லது அமரிக்க மயமாக்கம் என்ற பொருள்களிலேயே நவீனமயமாக்கம் என்ற எண்ணங்களின் அரசியல் வெளிப்பட காணலாம். பண்பாட்டு நிலையிலும் நவீன விழுமியங்கள் என்பன மத்தியதர வகுப்பு அமெரிக்க விழுமியங்களாகவே விளங்கப்படுகின்றமை பற்றிய மக்கிலிலாண்ட் ( Mc Clelland, 1966 ) கருத்து இங்கு கவனத்திற்குரியதாகும். மரபு – நவீனத்துவம் என்ற பிரிப்புக்கள் வெறுமனே சந்தையை மையமாகக்கொண்ட சங்கதியாக கருதப்படுவதையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். இதன்வழி மேம்பட்ட மனிதனை, நவீன மனிதனைத் தேடும் ஆராய்ச்சி, வெறும் சந்தை ஆராய்ச்சியாக, சந்தையை மையமாகக் கொண்ட நுகர்வோரைத் தேடும் முயற்சியாகவே முடிந்து போனது (சண்முகலிங்கன், 1997). இவ்வாறே அபிவிருத்தியென்பது தொழினுட்ப விருத்தியென்ற பொருளுடன் மட்டுப்படுத்தப்பட்டது. விளைவாக சமூகப் பிரச்சினைகளை தொழினுட்ப பிரச்சினைகளாக குறுக நோக்கும் நிலைமையே மிஞ்சியது. கூடவே ஆராய்ச்சிகளுக்கும் தொழினுட்பத்துக்குமிடையிலான பரஸ்பர சார்பு நிலை அதிகரித்துள்ளமையும் விமர்சன கோட்பாட்டாளரின் எழுத்துக்களிடை துல்லியமாகவே வெளிப்படும் ( David Held, 1980 ). இதன்வழி அறிவாராய்ச்சியும் ஒரு முதன்மை உற்பத்திச் சக்தியாகும். அறிவானது குறுகிய பயன்பாட்டு நோக்கிலான உற்பத்தியாதலுக்கு, உலக இராணுவ மயமாக்கம் தொடர்பான ஆய்வு அனுபவங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துவதுடன்,
அநியாயமான வழிகளில் அவற்றினை தீர்ப்பதற்கான
மார்க்கங்களும் அறிவின் பெயரால் முன்வைக்கப்படு
வதுண்டு. நிலமானிய அமைப்பில் அரசர்களின் வல்லமை
ஆண்டவன் தந்தது என தரப்பட்ட நியாயங்கள், பின்னா
ளில் போட்டியும் பேராசையும் மனித இயல்பில் உள்ளவை
என்றவாறு அடம் சிமித் (Adam Smith) போன்றோரால்
நியாயப்படுத்தப்பட்டமை இங்கு கவனத்திற்குரியதாகும்.
முழுதளாவிய பார்வையும், பல்துறை நெறிகளின் ஒன்றி
ணைந்த ஆய்வு முறைமையுமே இத்தகு நிலைமைகளில்
எமக்கு கைகொடுக்க வல்லது. போலி ஆய்வுகளிலிருந்து
(Pseudo - Research) உண்மை ஆய்வுகளை பிரித்து நோக்கிட
சமூகவியலின் பெயர் சுட்டு அணுகுமுறையும் (Lebelling -
Perspective) பெரிதும் துணையாகும் எனலாம். ஆய்வின்
நோக்கை, ஆய்வாளனை, ஆய்வுச்சூழலை, ஆய்வு பதங்க
ளின் பொருண்மையை கேள்விக்குள்ளாக்குதலின் வழி அறி
வின் பின்னணியை தெளிந்திட முடியும்.

தென்னாசிய ஆய்வுகள் (South Asian Studies), போர்க்கால
ஆய்வுகள், சமாதான ஆய்வுகள் என பற்பல பெயர்களில்
நிகழ்த்தப்படும் ஆய்வுகள் தொடர்பாக ஏற்கனவே கேள்வி
கள் எழுப்பப்படும். (Mannheim. 1952; Mahan, 1991
Chaube, 1993). இலங்கை பற்றிய இன்றைய ஆய்வுகளும்
இதற்கு விதிவிலக்கல்ல. திரிபு படுத்தப்பட்ட வரலாற்று
ஆய்வுகளிலிருந்து 'உனக்கல்ல ஊருக்கடி' என்றவிதமான
சர்வதேச - உள்ளூர் மனித உரிமை ஆய்வுகள் வரை அறி
வின் அரசியல் விழிப்புடன் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்
டும். நிதி உபயகாரர்களுக்கு ஏற்ற விதமாக அறிக்கை
எழுதுதல் போன்ற மரியாதைகளுக்கு அப்பால் அறிவுலக
நேர்மை காக்கப்படவேண்டும். மெய்ப்பொருள் காணும்
அறிவுக் கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**

*Babbie Earl. R* – Practice of Social Research Words Worths.
1975 California

*Chaube, S. K* – Understanding. South Asia:
1993 A Superstructural Analysis in
South Asia - Some Reflections (ed).
Ramakant, Aalkch Pub. Jaipur



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Frank, A.G* – Sociology of Development and
1972 Underdevelopment in **Dependence And Underdevelopment** (ed)
James Cockroft, Andrew Gunder Frank,
And Dale Johnson,
New York: Double Leday

*Held, David* – **An Introduction to Critical Theory: Horkheimer to Herbermas**
*1980* Hutchinson & Co. (Pub) Ltd. London

*Gran. D.G* – **Our Sciences Ruled by Human Prejudice,**
*1987* Philosophical Library, New york

*Mc Clelland* – The Impulse to Modernization, in
*1966* **Modernization: The Dynamics of Growth** (ed.) Weiner. New York Basic Books

*Mahan. Rajan* – The Nature of South Asian Region:
*1991* Assonnant Affinities, Dissonant Diversities in **India and South Asia**
(ed.) S. N. Kanshik, Rajan Mahan
and Ramakant, New Delhi

*Mannkeim, Karl* – **Ideology and Utopia**. Reutledge
*1952* and Kegan Paul, London

*Stark. W* – **Sociology of Knowledge,**
*1958* Routledge and Kegan Paul, London

சண்முகலிங்கன், என். – மானுட மேம்பாட்டின் சமூகவியல்
1997 மானுடம் - சமூகவியல் ஏடு,
சமூகவியல் சமூகம், யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

சிவசேகரம் – தினக்குரல் நாளிதழ் 26. 5 99 பக். 8.
1999 கொழும்பு

பக்தவக்சலபாரதி. சீ – **பண்பாட்டு மானுடவியல்**
1991 சென்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Academic Staffs of Department of Political Science & Sociology



**Seated** (L ←R) :

Mr. S. Sahayaseelan (*Lecturer*), Mr. G. M. Sebastiampillai (*Senior Lecturer*), Dr. N. Shanmugalingan (*Head, Department of Poli.Sc. & Sociology*), Prof. A. Sanmugadas (*Dean, Arts*), Dr. S. K. S. Nathan (*Senior Lecturer*), Mr. K. Ragunathan (*Senior Lecturer*)

**Standing** (L →R) :

V. Alagathurai (*Clerk*), A. E. Richard, V. Resikumar, Miss. Jude Ealilarasi (*Assist. Lecturers*)

130744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடம் சிறக்க எம் நல்லாசிகள்!

உங்களுக்குத் தேவையான ஜீன்ஸ் வகைகள், சேட்ஸ், மற்றும் திருமண வைபவங்களுக்குத் தேவையான கோட், சூட் போன்றவற்றை நவீன முறையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்,

# சிற்றி ரெக்ஸ்

அன்ட்

# ரெயிலஸ்

73, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் :- 021 – 2671.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நகை உலகில்
நவீன அழகிய டிசைன்களில்
22 கரட்டில் உன்னத நகைகளுக்கு



புதிய
நதியா
நகை மாடம்

'மானுடம்' இதழ் சிறக்க
எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்கள்

இல 103,
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் சமூகம் வாழ்க!

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும்

தங்க நகைகளுக்கு யாழ் நகரில்

சிறந்த ஸ்தாபனம்

# சுவர்ண மஹால்

## நகைமாடம்

கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

மானுடம் வென்றதம்மா!

★ திருமண வைபவங்களுக்கான
வாடகைப் பொருட்கள், பிளாஸ்ரிக் கதிரை,
குஷன் கதிரை, இரும்புக் கதிரை, தகரப்பந்தல்,
சிங்கப்பூர் சோடனைகள், சிங்கப்பூர் பாய்.
திருமணக் கார், வான் முதலியன வாடகைக்கு
பெற்றுக் கொள்ள

# லொயலாஸ்

195, பிரதான வீதி
4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் ஏடு வாழ்க!

ஐஸ்கிறீம் வகைகள்,
மட்டன் றோல், மிக்ஸர், லட்டு,
மஸ்கட், அங்கர் பட்டர்,
பட்டர் கேக் வகைகள்,
ஸ்பெஷல் பீடா
அனைத்துக்கும்!

குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

---

மானுடம் வெல்லும்

★ சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
★ மற்றும் மோட்டார் சைக்கிள்கள்
போன்ற

தரமான பொருட்களை பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய ஸ்தாபனம்,

இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்

50, 52 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: இல. 2988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

*Wishes for the Success of Maanudam-2!*

From,

# MEDI AIDS

Medi aids clinic
689, Point Pedro Road
NALLUR

Medi aids pharmacy
644, Point Pedro Road
NALLUR

*Stationaries paradise and superior Photostat*

No. 646, Point pedro Road
NALLUR

**Tele Link Communication Service**

New Kanthaswamy Temple
NALLUR

**T. P — 021-2183**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்திற்கு எமது வாழ்த்துக்கள் !

உள்நாட்டு, வெளிநாட்டுத்
தொலைபேசி அழைப்புக்களை
சகாய கட்டணத்தில்
பெற்றுக்கொள்ள
நாடுங்கள் !

# வேணுகா

## தொலைத்தொடர்பு நிலையம்



உள்நாடு - 021-2541, 021-2845
வெளிநாடு - 0094 - 21 - 2541
0094 - 21 - 2845

நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our best wishes to* **MAANDUNAM !**

★ Special in! Wedding Sarees,
Salwar Kameez and
Ladies and Gents & Children wear



# RAAHAMS PADDUSOLAI

Main Street
CHANGANAI
**New bus Stand**

No. 24, New Market
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடம் வாழ மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

*Best wishes from*

Sitpa Chakkaravarthy

*Sthapathy A. Jeevaratnam Archary*

# ARUMUGAM SITPPALAYAM

# ஆறுமுகம் சிற்பாலயம்

Specialist for all Kinds of
Temple Chariots, Vaganams &
Wood Carvings

ஜீ. ஜெயபிரகாஷ்
ஜெயா இயந்திர மர அரிவு ஆலை

காளி கோயிலடி,
திருநெல்வேலி மேற்கு
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடம் வாழ்க!

யாழ்நகரில் சிறந்த குளிர் அகம்,

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

★ மங்கையர்க்கான

எழில் கொஞ்சும் அழகு சாதனங்கள்,
சிறுவர் பரிசுப் பொருட்கள்,
உன்னதமான கொலோன் வகைகள்,
மற்றும் அனைத்து ஃபான்ஸி வகைகளுக்கும்

# நியூ பிரகாஸ் ஃபான்சி பலஸ்

64, A, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW HARTHIKEYAN PRINTERS PVT LTD

Printers, Publishers,
Typesetters & Designers

501/2,
Hotel Ceylon Inn,
Galle Road,
Colombo - 6
Tel: 595875

விருந்தினரின்
வரவேற்பில் உங்களின்
உற்ற
துணை

அல்பா
மிக்ஸர்

பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

மானுடம் – ஏடு 2
வெளியீட்டு நிகழ்வு
வளமாக
துணைநின்ற
அன்பர்களுக்கு
என்றென்றும்
எங்கள் நன்றி


❖ சமூகவியல் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனுதவும் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org